செம்மணி

நிலம் 2 துகள் 97 வள்ளுவர் ஆண்டு 2052, 28 வைகாசி - 03 ஆனி 2022 வாரமலர் பக்கங்கள் 20 விலை ரூபா 50/-

# மேலும் 100 கோடி டொலர் உதவி இந்தியாவிடம் கோரும் இலங்கை

இந்தியாவிடம் இருந்து மேலும் ஒரு பில்லியன் (100 கோடி) டொலர்களை பரிமாற்றத் திட்டத்தின் கீழ் பெற்றுக்கொள்வதற்குப் பேச்சு நடத்தி வருகின்றது. இலங்கை மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க இந்தத் தகவலை நாடாளுமன்ற கோப் குழு முன் வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

இலங்கை பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கிக்கொண்ட பின்னரும் டொலர் பெறுமதியை நீண்ட நாள்களாக 203 ரூபா என்ற நிலையில் வைத்திருந்ததற்கு யார் காரணம் என்பது தொடர்பில் கோப் குழு அவரிடம் விசாரணை நடத்தியது. தனது விளக்கத்தின்போது பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டு வரும் நோக்கில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தொடர்பில் மத்திய வங்கி ஆளுநர் விளக்கினார்.

இந்தியா ஏற்கனவே 500 மில்லியன் பெறுமதியான எரிபொருளை வாங்குவதற்கும் மேலும் 500 மில்லியன் பெறுமதியான அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதற்குமான கடன் வசதிகளை இலங்கைக்கு வழங்கியுள்ளது.

அதற்கு மேலதிகமாக ஒரு பில்லியன் டொலர் பரிமாற்றம் குறித்து தற்போது பேச்சுக்கள் நடத்தப்பட்டு வருகின்ற என்றார் ஆளுநர். மேலும் ஆசிய கிளியறிங் யூனியன் மூலமாக 1.5 பில்லியன் டொலரைப் பெற்றுக்கொள்வதற்கும் எதிர்பார்க்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

ஆசிய கிளியறிங் யூனியன் மூலம் இந்தியாவிற்குச் செலுத்தப்படவேண்டியுள்ள 1.5 டொலர்களை செலுத்துவதற்கான தவணையை இந்தியா ஒத்திவைத்துள்ளதன் காரணமாக இந்தத்

பக்கம் 02

# தனியாரும் இனி டீசல் இறக்கலாம்

## தொழிற்சாலைகளுக்கு உதவ அரசு திட்டம்

துறைமுகங்களையொட்டி எண்ணெய் குதங்களை வைத்திருக்கக்கூடிய தனியார் நிறுவனங்கள், தொழிற்சாலைகளின் தேவைக்கான எரிபொருளை நேரடியாக இறக்குமதி செய்வதற்கான அனுமதி இலங்கை அரசால் வழங்கப்பட்டுள்ளது.

இலங்கை எரிபொருள் கூட்டுத்தாபனம் எரிபொருள்களை இறக்குமதி செய்வதற்குத் தேவையான டொலர்கள் இன்றி தட்டுத் தடுமாறி

பக்கம் 02

# கோட்டா கோ கம 50 நாள் நிறைவு

அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ச பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்தி கொழும்பு காலி முகத்திடலில் கோட்டாவை வெறியேற்றும் கிராமம் என்ற தொனிப்பொருளில் அமைக்கப்பட்ட கோட்டா கோ கம தொடங்கப்பட்டு சனிக்கிழமை 50 நாள்கள் நிறைவடைகின்றன. அதனையொட்டி பேரணிகள் எதிர்ப்புப் போராட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

போராட்டக்காரர்கள் யோர்க் வீதி மற்றும் வங்கி வீதி ஆகியவற்றுக்குள் நுழைய கொழும்பு

பக்கம் 20

# சிறைத் தண்டனையை எதிர்த்து விமலின் மனைவி மேன்முறையீடு

முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸவின் மனைவி ஷாஷிக்கு விதிக்கப்பட்ட 2 வருட கால சிறைத்தண்டனையை எதிர்த்து அவர் மேன்முறையீடு செய்திருக்கிறார். அவரது வழக்கறிஞர்கள் வெள்ளிக்கிழமை உடனடியாகவே இந்த மேன்முறையீட்டு மனுவைத் தாக்கல் செய்தனர். அது திங்கட்கிழமை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிகிறது.

பக்கம் 02

# நாட்டைவிட்டுத் தப்பிச் செல்ல முயன்ற 45 பேர் தெற்கு, மேற்குக் கடலில் கைது

நாட்டிலிருந்து முறையற்ற விதத்தில் வெளிநாட்டுக்குத் தப்பிச் செல்ல முயன்றார்கள் என்று நம்பப்படும் 45 பேரை கடற்படையினர் கைது செய்துள்ளனர். மேற்கு மற்றும் தெற்குக் கரைகளிலிருந்து புறப்பட்ட 2 படகுகளில் இவர்கள் இருந்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் ஆஸ்திரேலியாவிற்குச் செல்ல முயன்றார்கள் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

கடற்படையின் கஜபாகு சுற்றுக் காவல் அணி

பக்கம் 02



# நகரில் விவசாய காணிகள் இனங்காண ரணில் பணிப்பு

அடுத்து வரும் மாதங்களில் இலங்கை எதிர்நோக்கவுள்ள உணவுப் பற்றாக்குறையை எதிர்கொள்வதற்கான உத்திகளில் ஒன்றாக நகர்ப்புறங்களில் விவசாயம் செய்யக்கூடிய காணிகளை இனங்காணுமாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்தியுள்ளார்.

வெள்ளிக்கிழமை விவசாயத் துறை சார்ந்தவர்களைத் தலைமை அமைச்சர் சந்தித்து நெருக்கடி நிலை குறித்துக் கலந்துரை

பக்கம் 20

# 19ஐ மீளக் கொண்டு வருது முதல்படி ஜனாதிபதி முறை ஒழிப்பு 2ஆவது படி

## கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இதற்கு இணக்கம்

அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை 21ஆவது திருத்தம் என்ற பெயரில் மீண்டும் உள்வாங்குவதற்கு நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் இணங்கியுள்ளனர் என்று தலைமை அமைச்சர் அலுவலகம் வெள்ளிக்கிழமை தெரிவித்தது.

19ஆவது திருத்தத்தை மீளவும் கொண்டுவருவது முதல் அடி என்றும் நிறைவேற்று அதிகார அரச தலைவர் முறையை ஒழிப்பது இரண்டாவது அடி என்றும் தலைவர்கள் ஏற்றுக் கொண்டார்கள் என்றும் தலைமை அமைச்சர் அலுவலக செய்திக் குறிப்புத் தெரிவித்தது.

தற்போதைய நிலையில் அரச தலைவர் பாதுகாப்பு அமைச்சை தன் வசம் வைத்திருக்க முடியுமா இல்லையா என்பது குறித்தும் கட்சித் தலைவர்கள் ஆராந்தார்கள் என்று அந்தச் செய்திக் குறிப்பு தெரிவித்தது.

முன்னதாக அரசமைப்பின் 21 ஆவது திருத்த முன்

பக்கம் 02

# செம்மணி

வாரப் பத்திரிகை
551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
மின்னஞ்சல்: shemman.redsoil@gmail.com
தொடர்பு எண்: 021 492 7781
உரிமை மற்றும் வெளியீடு: கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிட்
**ஆசிரியர்: தே.பிரேமானந்த்**


# தலைமை அமைச்சரின் பொருளாதார, அரசியல் திட்டம் என்ன?

புதிய தலைமை அமைச்சராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றுக்கொண்டு இரண்டு வாரங்களுக்கு மேலாகிவிட்டது. எனினும் நாட்டின் பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்வதற்கான அவரது ஆட்சியின் திட்டம் என்னவென்பது இன்னும் தெளிவாகவில்லை. ரணில பதவியேற்ற கையோடு ஜப்பான், இந்தியா, ஐரோப்பிய ஒன்றியம் போன்ற உடனடி உதவிகளை வழங்குவதற்கு முன்வந்தன என்றாலும் அந்த உதவிகளால் நாட்டின் பொருளாதாரத்தை தூக்கி நிறுத்த முடியாது என்பது வெளிப்படை. அதற்கு தூர நோக்குடனான திட்டங்கள் அவசியம். அதிலும் உதவித் திட்டங்கள், உடனடித் திட்டங்கள், நீண்ட காலத் திட்டங்கள் என்று மூன்று கட்டங்களில் அவை செயற்படுத்தப்படவேண்டியிருக்கின்றன.

பொருளாதார மீட்சிக்கான நீண்ட காலத் திட்டங்கள் குறித்து இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில் தலைமை அமைச்சர் விவரிப்பார் என்பதை ஏற்றுக்கொண்டாலும் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான உதவித் திட்டங்கள் குறித்தும் சிக்கலை எதிர்கொள்வதற்கான உடனடித் திட்டங்கள் குறித்தும் மக்களுக்குத் தெளிவுபடுத்தியிருக்கவேண்டும். ஆனால் இன்னமும் அது நடக்கவில்லை.

நாடு பெரும் ஆபத்தை எதிர்கொள்ளப் போகின்றது என்கிற எச்சரிக்கையைத்தான் தலைமை அமைச்சர் மீண்டும் மீண்டும் கூறி வருகின்றாரே தவிர, அதிலிருந்து மீண்டு வருவது எப்படியென்பது குறித்து அவரிடம் எந்தத் திட்டமும் இருப்பதாகத் தெரியவில்லை. இந்த நிலையில் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் இலங்கையின் மீட்சிக்கு உதவும் வகையில் முதலீடுகளைக் கொண்டவரவேண்டும் என்று அவர் அழைப்பு விடுத்திருக்கிறார்.

பொருளாதார மீட்சிக்கான தனது கொள்கைத் திட்டத்தை அவர் வெளியிடாமல் புலம்பெயர் தமிழர்களை அவர் அழைத்திருப்பது பயன்தரக்கூடிய நடவடிக்கையல்ல. மூழ்கும் கப்பலில் முதலிடுவதற்குப் புலம்பெயர் தமிழர்களல்லர் எவருமே தயாராக இருக்க மாட்டார்கள். அதேநேரம் அரசியல் தீர்வு குறித்தும் ரணிலின் போக்கு தமிழர்கள் நம்பும் விதத்தில் இல்லை. நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலையிலிருந்து மீள்வதில் இனப்பிரச்சினைக்கான தீர்வும் மிக அவசியமானதொன்று என்று பல தரப்புக்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் சிங்கள, பௌத்த பேரினவாதத்தில் ஊறிய சிங்கள அரசியல்வாதிகளால் அது எவ்வளவு தூரத்திற்கு உளச்சுத்தியோடு அணுகப்படப்போகிறது என்கிற சந்தேகம் தமிழர்களிடம் இருக்கின்றது.

அண்மைக் காலமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான மதியாபரணம் ஆப்ரகாம் சுமந்திரன் மற்றும் ராஜமாணிக்கம் சாணக்கியன் ஆகியோர் தலைமை அமைச்சரின் செயற்பாடுகளைக் கடுமையாக விமர்சித்து வருகின்றனர். ரணில் விக்கிரமசிங்கவிற்கு மிக நெருக்கமானவர் என்று அறியப்பட்டவர் சுமந்திரன். சுமந்திரனுக்கு மிக நெருக்கமானவர், அவரால் அரசியலில் வளர்தெடுக்கப்படுபவர் என்று அறியப்பட்டவர் சாணக்கியன். எனவே சாணக்கியனின் கருத்துக்கள், அதிலும் குறிப்பாக ரணில் குறித்த அவரது கருத்துக்கள் சுமந்திரனின் சம்மதம் இன்றி வெளிவருபவை என்று கருதிவிடமுடியாது.

இப்படி இவர்கள் ரணிலைக் கரித்துக்கொட்டுவதற்கு என்ன காரணம்? தற்போதைய நெருக்கடி நிலையைப் பயன்படுத்தி எதிர்க்கட்சிகளை ஒன்றிணைத்து அரச தலைவர் கோட்டாபய ராஜபக்சவை வீட்டுக்கு அனுப்பிவிட்டு நாடாளுமன்றத்தின் ஊடாக அனைத்துக் கட்சிகளின் இணக்கத்துடன் ஒரு தீர்வையும் மக்கள் கருத்துக் கணிப்பையும் நடத்துவதற்கான வழிவகையை ஏற்படுத்துவதற்கான சுமந்திரனின் முயற்சியை ரணிலின் பதவி ஆசை மற்றும் ராஜதந்திரம் முறியடித்துவிட்டமைதான். இன்னும் விளக்கிச் சொல்லப்போனால் எதிர்க்கட்சிகளோடு இணைந்து போவதாக சுமந்திரனுக்குப் போக்குக் காட்டிக்கொண்டே ராஜபக்சக்களோடு ரணில் டீலுக்குப் போய்விட்டார் என்கிற கோபத்தின் வெளிப்பாடே இது எனலாம். அதாவது ரணில் மீண்டும் ஒரு தடவை சுமந்திரன் வகையறாக்களை ஏமாற்றிவிட்டார். 2015 நல்லாட்சிக் காலத்திலும் அவர் சுமந்திரன் வகையறாக்களை நம்ப வைத்து ஏமாற்றினார்.

இப்படித் தமிழர்கள் தொடர்ந்து ஏமாற்றப்பட்டுவரும் நிலையிலும் தீர்வுக்கான புதிய கதவுகள் ஏதும் திறக்கப்படாத நிலையிலும் புலம்பெயர் தமிழர்கள் இங்கு முதலிட வருவார்கள் என்று எதிர்பார்ப்பது முட்டாள்தனம். அந்த அழைப்பை விடுப்பதற்கு முன்னர் தனது பொருளாதார மற்றும் அரசியல் திட்டம் என்ன என்பதை ரணில் தெளிவுபடுத்தவேண்டும். அது தமிழர்களுக்கு மட்டுமல்ல நிதி உதவிகளை வழங்க இருக்கும் பன்னாட்டு நாணய நிதியம் மற்றும் உலக வங்கி போன்றவற்றுக்கும் அவசியமானதாக இருக்கின்றது.

எனவே பிரச்சினைகளையே சொல்லிக்கொண்டிருக்காமல் தீர்வுக்கான திட்டம் என்ன என்பதை வெளிப்படுத்தவேண்டியதே அதுவும் உடனடியாக வெளிப்படுத்தவேண்டியதே ரணில் இப்போது செய்யவேண்டியது.

## தனியாரும்...

வரும் நிலையில், நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்கும் ஓர் உத்தியாக தனியாரும் எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு அனுமதிப்பது என்கிற முடிவை அரசு எடுத்துள்ளது.

தொழிற்சாலைகளின் மின்பிறப்பாக்கிகள் மற்றும் இயந்திரங்களை இயக்குவதற்குத் தேவையான டீசல் மற்றும் எரிபொருளை எண்ணெய்க் குதங்களை வைத்திருக்கும் தனியார் நிறுவனங்கள் நேரடியாக இறக்குமதி செய்வதற்கு அனுமதிப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது என்று மின் மற்றும் சக்தி துறை அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத் தாபனத்தின் சுமையை இந்த முடிவு குறைக்கும் என்றும் அமைச்சர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் டீசல் மற்றும் எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான டொலர் கையிருப்பு இல்லாத காரணத்தால் மின் தடை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. நாளாந்தம் இரண்டு மணி நேரத்திற்கும் குறையாத மின்வெட்டு நடைமுறையில் உள்ளது. இதனால் தொழிற்துறை மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

தனியார் நிறுவனங்களையும் எரிபொருள் இறக்குமதிக்கு அனுமதிப்பதன் மூலம் தொழிற்துறையின் மீளெழுச்சியைத் துரிதாமாக்க முடியும் என்று அரசு கருதுகின்றது.

## நாட்டை...

யினர் வியாழக்கிழமை இரவு தெற்குக் கடக் கரையிலிருந்து சந்தேகத்திற்கிடமாகப் புறப்பட்ட பல நாள் மீன்பிடிப் படகு ஒன்றை வழிமறித்துச் சோதனை நடத்தியது. அப்போது அதில் மறைந்திருந்த 26 பேரைக் கண்டுபிடித்தத என்று கடற்படையினர் செய்திக் குறிப்புத் தெரிவிக்கிறது.

அதேபோன்று மேற்குக் கடலில் சுற்றுக் காவல் பணியில் இருந்த அதிவிரைவு தாக்குதல் படகு சந்தேகத்திற்கிடமான பல நாள் மீன்பிடிப் படகு ஒன்றை மறித்துச் சோதித்தபோது அதில் 19 பேர் இருந்துள்ளனர். இவர்கள் அனைவரும் சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்குத் தப்பிச் செல்ல முயன்றவர்கள் என்று கடற்படையினர் குற்றஞ்சாட்டுகின்ற னர்.

படகுகளில் இருந்து கைது செய்யப்பட்டவர்கள் கல்பிட்டி, நீர்கொழும்பு, புத்தளம், சிலாபம், கிளிநொச்சி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று கடற்படையினர் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர்கள் படகுகளுடன் சட்ட நடவடிக்கைகளுக்காக உரிய அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளனர் என்றும் கடற்படை கூறியது.

இலங்கையில் பொருளாதார நெருக்கடி அதிகரித்திருப்பதைத் தொடர்ந்து வெளிநாடுகளுக்கு ஆட்களைக் கடத்துவது அதிகரித்திருக்கிறது. குறிப்பாக கடல் வழியாக இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா நாடுகளுக்கு அதிகமானவர்கள் கடத்தப்படுகிறார்கள். கடல் வழியாக அனுமதியின்றி உள்நுழைபவர்கள் வந்த இடத்திற்கே திருப்பி அனுப்பப்படுவார்கள் என்று ஆஸ்திரேலிய அரசு திரும்பத் திரும்ப அறிவிக்கின்றபோதும் இலங்கையிலிருந்து அங்கு செல்ல விரும்பும் சட்டவிரோதக் குடியேறிகளின் பயணம் தொடர்ந்துகொண்டேயிருக்கிறது.

## 19ஐ மீளக்...

மொழிவுகள் கடந்த வாரம் அமைச்சரவைக் கூட்டத்தில் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்சவால் முன்வைக்கப்பட்டது. அது குறித்துக் கட்சிகள் மட்டத்தில் ஆராய்ந்த பின்னர் முடிவெடுக்கலாம் என்று அப்போது தீர்மானிக்கப்பட்டது.

அதன்படி 21ஆவது திருத்தம் குறித்துக் கூடி ஆராய்ந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஜேவிபி, பொது ஜன பெரமுன ஆட்சியின் முன்னாள் பங்காளியான விமல் வீரவன்ஸ தரப்பினர் போன்ற தரப்புக்கள் திருத்தத்தை ஆதரிப்பதாக அறிவித்திருக்கின்றன. அதேநேரம், ரணில் விக்கிரமசிங்க முதலில் பொருளாதார நிலைமையை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் அதற்குப் பின்னரே அரசமைப்பு திருத்தங்கள் குறித்துக் கவனம் செலுத்தவேண்டும் என்று பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச் செயலாளர் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

ஒரு நபரை இலக்கு வைத்தோ அல்லது ஒருவர் பதவிக்கு வருவதைத் தடுப்பதை நோக்காகக் கொண்டோ அரசமைப்புத் திருத்தங்கள் கொண்டுவரப்படக்கூடாது, நாட்டுக்கு என்ன தேவையோ அதுவே செய்யப்படவேண்டும் என்றும் அவர் தெரிவித்திருக் கிறார்.

21ஆவது திருத்தத்தின் மூலம் இரட்டைக் குடியுரிமை கொண்டவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாவதற்கான தடை மீண்டும் நடைமுறைக்கு வரும். அப்படி நடந்தால் முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இழக்கவேண்டி ஏற்படும்.

## மேலும்...

தொகை கிடைக்கிறது.இந்தியாவில் இருந்து பொருள்களை இறக்குமதி செய்யும் வர்த்தகர்கள் இரண்டு மாதங்களுக்கு ஒரு தடவை இந்தியாவிற்கு வழங்குவதற்காக 500 மில்லியன் டொலர்களை இலங்கை மத்திய வங்கிக்குச் செலுத்துகிறார்கள். ஆசிய கிளியரிங் யூனியன் மூலமாக அந்தப் பணம் இந்தியாவிற்குச் செலுத்தப்படுவது வழக்கம். இப்போது அதனைச் செலுத்துவதற்கான காலப் பகுதியை இந்தியா ஒத்திவைத்துள்ளது.

இதன் மூலம் கடந்த 6 மாதங்களில் கிடைத்த 1.5 பில்லியன் டொலர்களை இலங்கை ஏற்கனவே பயன்படுத்திவிட்டது. அடுத்த 6 மாதங்களில் மேலும் 1.5 பில்லியன் டொலர்கள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது என்றார் மத்திய வங்கி ஆளுநர்.

இதேவேளை, இந்திய ரிசர்வ் வங்கியிடமிருந்து ஒரு பில்லியன் டொலருக்கான பரிமாற்ற வசதியை கேட்டிருப்பதாகவும் அது தொடர்பான கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.


## சிறைத்...

முன்னதாக ஷாஷி போலியான ஆவணங்களை வழங்கி இரு கடவுச் சீட்டுக்களைப் பெற்றுக்கொண்டார் என்று தொடரப்பட்ட வழக்கில் அவர் குற்றவாளி என்று நீதிமன்றம் வெள்ளிக்கிழமை காலை தீர்ப்பளித்து. இந்தக் குற்றத்திற்காக அவருக்கு இரு வருட சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. மேலும் ஒரு லட்ச ரூபாய் தண்டமும் அவருக்கு விதிக்கப்பட்டது.

தண்டப்பணத்தைக் கட்டத் தவறினால் ஷாஷியின் சிறைத் தண்டனையை மேலும் 6 மாதங்களுக்கு நீடிக்கவும் கொழும்பு நீதிவான் உத்தரவிட்டிருந்தார். அத்தோடு இந்த வழக்கின் தீர்ப்பை பொது நிர்வாக அமைச்சுக்கு அனுப்பி வைத்து ஷாஷி போலி ஆவணங்களை வழங்கி கடவுச் சீட்டைப் பெறுக்கொள்வதற்கு உதவிய அதிகாரிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கவும் பணித்துள்ளது நீதிமன்றம்.

தனது பெயர் மற்றும் பிறந்த நாளைத் தவறாக காண்பிக்கும் போலி ஆவணங்களை வழங்கி இராஜதந்திரிகளுக்கான கடவுச் சீட்டு உள்ளடங்கலாக இரு கடவுச் சீட்டுக்களை ஷாஷி பெற்றிருந்தார் என்று 2015 ஆம் ஆண்டு குற்றஞ்சாட்டப்பட்டிருந்தார். இதற்காகக் கைது செய்யப்பட்டிருந்த அவர் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிமிருந்தார்.

# அரச பயங்கரவாத அலையின் அமைதி...!




**நியூட்டன்**

**1971**ஆம் ஆண்டு சிறீமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சிக் காலத்தில் ஜே.வி.பி. கிளர்ச்சியை அடக்குவதற்காகச் சிங்களப் படையினரும் காவல்துறையினரும் இணைந்து **14** ஆயிரத்துக்கு மேற்பட்ட சிங்கள இளைஞர் யுவதிகளைக் கொன்று குவித்தனர். **1971**ஆம் ஆண்டுக் கிளர்ச்சியின்போது கதிர்காமத்தைச் சேர்ந்த அழகுராணிப் பட்டம் பெற்ற மனம்பேரி என்ற சிங்களப் பெண் கைதுசெய்யப்பட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டார். வன்புணர்வுக்குள்ளாக்கிய அவர் சுடப்பட்டு இறப்பதற்கு முன்னரே புதைகுழியில் போடப்பட்டு மூடப்பட்டார்.அவர் ஜே.வி.பி. கிளர்ச்சியாளர்களின் கருத்தியலுக்கு ஆதரவாக இருந்தவர் என்பதே அவரது இந்தக் கோரமான கொலைக்குக் காரணம் என்று நம்பப்படுகின்றது.

ஜே.வி.பி. கிளர்ச்சியின் **2**ஆவது அலை என்று கருதத்தக்க **1988 - 89** காலப்பகுதியில் அப்போதைய அரச தலைவர் பிரேமதாசவால் சிங்கள மக்கள் கொன்று குவிக்கப்பட்டனர். **60** ஆயிரத்துக்கு மேற்பட்ட சிங்கள, இளைஞர் பெண்கள் கொல்லப்பட்டனர் (தற்போது எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் முன்னாள் அரச தலைவர் பிரேமதாசவின் மகன் சஜித் பிரேமதாச இவைபற்றி அலட்டிக்கொள்வதில்லை).

இலங்கையில் சிங்கள மக்கள் மீது அரச பயங்கரவாதம் திணிக்கப்பட்ட முதல் சம்பவம் உலகின் முதலாவது பெண் தலைமை அமைச்சர் சிறீமாவோ பண்டாரநாயக்காவால் நடத்தப்பட்டது. முதலாவதைச் சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்பிலும் இரண்டாவதை ஐக்கிய தேசியக் கட்சி சார்பிலும் நடத்தினார்கள். இந்த வரிசையில் மூன்றாவது அரச பயங்கரவாதத்தைப் பொது ஜன பெரமுன என்ற கட்சி இந்தக் காலகட்டத்தில் நிகழ்த்தும் என்று பலரும் எதிர்பார்த்தாலும் அந்தக் கட்சி சார்பில் கோத்தாபய ராஜபக்ச அந்தச் சூழலை வெகுநேர்த்தியாக நகர்த்திச் செல்வது தெரிகிறது.

**போராட்டக்காரர்கள் எவரும் கொல்லப்படக்கூடாது**

அரச தலைவர் கோத்தாபயவைப் பதவி விலகுமாறு வலியுறுத்தி நிதிகாணையிலுள்ள அவரது வீட்டுக்கு முன்பாக அரச எதிர்ப்புப் போராட்டக்காரர்கள் திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அரச தலைவர் கோத்தாபய தனது ஆயுதப் படையினருக்கு ஒரு கட்டளையை வழங்கினார். போராட்டத்தில் ஈடுபடுகின்ற எவரும் கொல்லப்படக்கூடாது அல்லது அவர்கள் மீது துப்பாக்கிச்

**இலங்கையில் சிங்கள மக்கள் மீது அரச பயங்கரவாதம் திணிக்கப்பட்ட முதல் சம்பவம் உலகின் முதலாவது பெண் தலைமை அமைச்சர் சிறீமாவோ பண்டாரநாயக்காவால் நடத்தப்பட்டது. முதலாவதைச் சிறிலங்கா சுதந்திரக் கட்சி சார்பிலும் இரண்டாவதை ஐக்கிய தேசியக் கட்சி சார்பிலும் நடத்தினார்கள்**

நிதானித்துச் செயற்படுவது தெரிகிறது. மகிந்த ராஜபக்ச தலைமை அமைச்சர் பதவியைத் துறந்ததால் அவரது ஆதரவாளர்கள் மேற்கொண்ட அடாவடித்தனங்களின்போது படையினர் பெருமள வுக்குப் பொறுமை காத் தனர். மகிந்தவின் ஆதரவாளர்களைப் போராட்டக்காரர்கள் நிர்வாணப்படுத்தப்படுத் தியபோதும் வீதிகளில் இழுத்துச் சென்றபோதும் தேரா வாவிக்குள் வீசி தள்ளியபோதும் யாரும் கொல்லப்படவில்லை.

அன்றிரவு நாட்டின் பல பாகங்களிலும் பொது ஜன பெரமுன கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. ஆனால் படையினரும் காவல்துறையினரும் மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தவில்லை. இவ்வாறு விட்டுப் பிடிப்பதன் மூலம் மக்களின் கோபம் யார் மீது உள்ளது என்பதையும் தனது கட்சிக்காரருக்கு மக்கள் மத்தியிலுள்ள செல்வாக்கு இவ்வளவுதான் எனக் காட்டவும் கோத்தாபயவால் முடிந்தது. தனது சகோதரர்களின் வீடுகள், தந்தையாரின் நினைவிடம் ஆகியன தாக்கியழிக்கப்பட்டுத் தீக்கிரையாக்கப்பட்ட போதும்கூட ஆயுதப் படையினர் அரச பயங்கரவாதத்தில் ஈடுபடவில்லை.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியைச் சேர்ந்த லஷ்மன் கிரியல்ல கருத்துரைக்கும்போது, வன்முறை கட்டுக்கடங்காமல் பெருகியபோதும் அரச தலைவர் துப்பாக்கியால் சுடும் ஆணையை ஏன் பிறப்பிக்கவில்லை? என்று கேள்வியெழுப்பினார். ஆனால் முதன்மை எதிர்க்கட்சியான அவரது கட்சியும்கூட கிளர்ச்சியாளர்களைத் துப்பாக்கியால் சுடுங்கள் என்று குரல் கொடுக்கவில்லை என்பதையும் கவனிக்கவேண்டும். அவ்வாறு கூறினால் தமது எதிர்கால அரசியலுக்கு அது பாதகமாகிவிடும் என்று அவர்களுக்குத் தெரியும்.

**2019**இல் கோத்தாபய ஆட்சிக்கு வந்தவேளை இனி படைத்துறை ஆட்சிதான் நடக்கும் என ஆருடம் கூறிய பலரும் இந்தச் சம்பவங்களால் படைப் பலத்தைக்கொண்டு எவையும் நிகழ்த்தப்படவில்லை என்பதால் ஏமாற்றமடைந்திருப்பார்கள் என்து நிச்சயம்.. அவ்வாறென்றால் கோத்தாபய **3**ஆவது அரச பயங்கரவாதத்தைச் சிங்கள மக்கள் மீது நடத்துவதைத் தவிர்த்துக்கொண்டார் என்றே தெரிகிறது. சிலவேளை இவ்வாறான போராட்டங்களை தமிழர்களோ முஸ்லிம்களோ மேற்கொண்டிருந்தால் அரச பயங்கரவாதம் தாண்டவமாடடியிருக்க அதிகம் வாய்ப்பிருந்தது.

**தற்போதைய கைதுகள்**

தற்போது இடம்பெற்றுவரும் கைதுகள்கூட இலங்கையில் சட்டம் ஒழுங்கு உரிய முறையில் நடைமுறையிலுள்ளது என்பதைப் பன்னாடுகளுக்குக் காட்டுவதற்கே தவிர அவர்களைக் கண்டிப்பதற்கு அல்ல. உயர்நீதிமன்றத்தால் கொலைக்குற்றம் நிரூபிக்கப்பட்டவர்கள்கூட கோத்தாபய அரசால் விடுதலை செய்யப்பட்டனர். எனவே இந்த **3**ஆவது அரச பயங்கரவாதம்

கதிரேசன் காத்தவராயன்

# இதுக்குள்ளை இவ்வளவு கிடக்குதோ?



சுப்பிரமணியம் மாஸ்ரர் வீட்டடிக்குப் போனன். அங்கை சுதனின்ரை கூட்டாளியள் ரண்டு மூண்டு பேரோடை முருகேசர் கதைச்சுக்கொண்டிருந்தார். மாஸ்ரர் கதையைக் கவனிச்சுக்கொண்டிருந்தார். சுதனைக் காணயில்லை. என்னைக் கண்ட மாஸ்ரர் "வாரும்... வாரும்... கதைக்கு ஒராள் குறையுதெண்டு பாக்க வாறீர்..." எண்டு வரவேற்றார். நானதிலை வசதியாய் இருந்துகொண்டன்.

"என்னப்பா எல்லாத்துக்கும் கியூதான்..." எண்டு ஒரு பெடியன் சலிச்சான். "அதிலையும் யாழ்ப்பாணத்தார் படிச்ச மனிசர் பண்பான ஆக்கள் எண்டு பெருமைப்படுகிறதுக்கு கொஞ்சமெண்டாலும் அருகதையிருக்கோ எண்டமாதிரியல்லே கியூவுகளைக் குழப்பியடிக்கிறாங்கள்?" எண்டு நான் சொல்ல "சரியாச்சொன்னீர் கதிரேசு" எண்டு மாஸ்ரர் ஆமோதிச்சார்.

"ஓரிடத்திலைதான் பெற்றோல் அடிச்சாங்கள்... அதிலை அஞ்சாறு வரிசை... அதுக்குள்ள குறுக்கை வந்து உள்ளட்டு பிரகண்டம் வேறை எண்டான் ஒராள்... குறுக்கை வாறமே எண்டிற கூச்சநாச்சம்... சீய்.. ஞாயம் வேறை..." எண்டு நிப்பாட்டினார் முருகேசர். "தங்களுக்கு அவசரமாமெண்டால் மற்றவையெல்லாம் பொழுதுபோக்கவே வரிசைகட்டி நிக்கினம்?" எண்டொரு பெடியன் சொன்னான். "உண்மைதான் தம்பி... தங்கடை தங்கடை பிரச்சனை தீந்தால் சரி... இந்தக் குணத்தாலைதானே இப்பிடிச் சீரழியிறம்" எண்டார் எரிச்சலோடை மாஸ்ரர்.

சுதன் அப்பதான் எங்கையோ இருந்து வந்தான. "உதிலை கடையடியிலை விலத்தேலாத சனம்... காஸ் வரப்போகுதாமெண்டு சிலிண்டருகளோடை... விலத்தி வரப்பட்டபாடு சீயெண்டு போச்சு... பெற்றோல் வேறை இல்லை..." எண்டு சலிச்சபடி இருந்தான் சுதன். "உதைத்தான் கதைக்கிறம்... வரிசையிலை நிக்கக்கூடத் தெரியாத காட்டானுகளாயல்லே இருக்கிறம்" எண்டான் மற்றவன். "வரிசையிலை நிக்கிறதுக்கு பொலிசும் ஆமியும் வந்து புரியாத பாசையிலை அதட்டினாத்தான் நிப்பம்..." எண்டார் முருகேசர்.

"இதுக்குள்ளை ஒரு பெரிய நுட்பமிருக்கு கண்டுபிச்சியளோ?" எண்டு கேட்டார் மாஸ்ரர். "என்ன சேர் அது?" எண்டு கேட்டான் ஒராள். "தட்டுப்பாடெண்டு சாமானுகளைப் பதுக்கிவைச்சுக்கொண்டு இரவோடையிரவாய் விலையைக் கண்டபாட்டுக்குக் கூட்டுறது... பிறகு மட்டுப்பாடாய்ச் சாமானுகளை வெளியாலை விடுகிறது.. இதுதானே மாஸ்ரர் உவங்கடை விளையாட்டு" எண்டு நான் சொல்ல "அது மட்டுமில்லைக் கதிரேசு காணாததைக் கண்ட நாங்கள் அடிபிடிப்பட்டு வாங்கேக்கை விலையைப்பற்றி மறக்கிறமல்லே? இல்லாததுக்கு அநியாயவிலையெண்டாலும் சாமான் கிடைச்சாக் காணுமெண்டிற மனநிலைக்கல்லே வாறம்?" எண்டார் முருகேசர்.

"சரியாய்ச் சொன்னீங்கள் ஐயா" எண்டு ஒரே குரலிலை ஆமோதிச்சாங்கள் பெடியள். "அடுத்தது ஒரு சிஸ்ரம் எங்களிட்டை இல்லை... புதிசாய் வந்த ஐயா ஆறு மாதத்திலை நிலைமை இன்னும் மோசமாகும் எண்டு சொன்ன பிறகெண்டாலும் ஒரு ஒழுங்குமுறையை செய்யவேணும் எண்டிற எண்ணம் உரிய ஆக்களிட்டை இல்லையல்லோ? காட் சிஸ்ரம்தானே முந்தி எல்லாத்துக்கும்... அப்பிடியொரு நடைமுறையைக் கொண்டந்தால் எல்லாருக்கும் கிடைக்குமல்லே?" எண்டு சுதன் நிப்பாட்டினான்.

"உண்மைதானடா சுதன் உந்த பொம்பரடி செல்லடிக்குள்ளை வாற கொஞ்சச் சாமானுகளையும் உந்தக் காட் பதியிற முறையிலை என்ன சீராய்ச் செய்தாங்கள்... படிக்காத சின்னப் பெடியள் எண்டு நக்கலாச் சொன்னவைக்கு மூளை நிறையக்கிடக்கெண்டு நிரூபிச்சவங்களல்லே அவங்கள்..." எண்டார் மாஸ்ரர் ஒருவிதமான உணர்ச்சியோடை. உண்மைதான் எண்டம் நானும் முருகேசரும்.

"எங்களுக்கும் உதுகள் ஞாபகமிருக்குத்தான்" எண்டான் ஒரு பெடியன். "இது எங்களை முடக்கிப் போடுற வேலைதான்... சாமானுகளை தட்டுப்பாடாக்கி விலையைக் கூட்டினாலும் அப்பப்ப தந்து எங்களை சுயவளங்களைச் சரியாப் பாவிக்கலாமெண்டிற நினைப்பு வரவிடாமல் தடுக்கிறாங்கள். நாங்கள் எங்கடை காலிலை நிக்கிறதுக்குப் பழகிவிட்டமெண்டால் அவங்களின்ரை வருமானமல்லே பாதிப்பாப்போகும்?" எண்டான் சுதன்.

"உண்மை அதுதான் சுதன்.. சரியாத்தான் சொன்னாய்... கறன்றை எப்ப கண்டனாங்கள்? காஸ் எண்டிறரத எப்ப கண்டனாங்கள்? எல்லாத்தையும் பழக்கி எங்கடை இயல்பான வாழ்க்கையை மாத்திப் போட்டு..." எண்டு முருகேசர் நிப்பாட்ட, "சமுத்திக்காறருக்கு காஸ் குக்கர் சிலிண்டர் எல்லாம் குடுத்து விறகடுப்பை மறக்கப்பண்ணினதை அறிஞ்சிருப்பியள்தானே?" எண்டான் ஒரு பெடியன். "எடக் கோதாரி உதுகும் நடந்ததே சோக்குத்தான்" எண்டார் மாஸ்ரர் ஆச்சரியமாய்.

"கண்ணிலை காட்டிப் பழக்கிப்போட்டு பிடுங்கிறாங்கள்... நாங்கள் அலையுமட்டும் அவன் அலைப்பான் பாருங்கோ..." எண்டுகொண்டு வீட்டை வந்திட்டன்.

## அரச பயங்கரவாத...

சிங்களவருக்கு ஆபத்தை அளிக்கவில்லை.

கோத்தாபய அரசுக்கு எதிராகச் சிங்களவர் மட்டும் களமிறங்கியுள்ளமையால் (தமிழர்களும் முஸ்லிம்களும் எரிவாயு, எரிபொருள், பொருள்களின் விலையுயர்வு போன்ற விடயங்களில் தமது அதிருப்தியைத் தெரிவிப்பதோடு நிறுத்திக்கொள்கின்றனர்) அரச பயங்கரவாதத்தை வைத்து அதை அடக்க முயன்றால் தமது மக்களையே கொல்ல வேண்டிய நிலை படைச் சிப்பாய்களுக்கு ஏற்படும் அதனால்தான் போராட்டக்காரர்கள் சட்டத்தைத் தமது கைகளில் எடுத்த பின்பும் படையினர் பொறுமை காத்து வருகின்றனர். ஆயுதம் தாங்கியவர்கள் தமது தொழிலுக்கு மீறிய பொறுமையைக் கடைப்பிடித்து வருவது தெரிகிறது.

இதைவிடப் போராட்டக்காரர்களால் கொழுத்தப்பட்ட வீடுகள், சொத்திழப்புகள் போன்றவற்றுக்கான இழப்பீடுகளை வழங்குவதற்கான ஏற்பாடுகள் பற்றி அரசு பரீசீலித்து வருவதாகத் தெரிகிறது. 1983இலிருந்து தமிழருக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கோ, இறுதிப்போர்ப் பாதிப்புகளுக்கோ எந்த இழப்பீடும் வழங்கப்படவில்லை.





கோத்தாபய தொழில் முறையில் படை அதிகாரியாக இருந்தபோதிலும் சிங்கள மக்கள் மீது அரச பயங்கரவாதத்தைத் திணிப்பதில் பின்னிற்கிறார் என்றே இதுவிடயத்தில் கூறமுடியும்.



கோபாலகிருஷ்ணன்

# உடல் பருமன்: உடனடித் தீர்வுகளின் ஆபத்து

இந்தியாவின் கர்நாடக மமாநிலத்தைச் சேர்ந்த நடிகையும் யூடியூப் பிரபலமுமான சேத்னா ராஜ், கொழுப்பு நீக்க அறுவை சிகிச்சை (LIPOSUCTION) மேற்கொண்டதால் உயிரிழந்துள்ளார். ஒல்லியாகத் தோற்றமளிக்கவேண்டும் என்னும் உந்துதலில் ஏற்படுத்திக்கொண்ட செயல்பாடுகளின் விளைவாக, 22 வயதுப் பெண் சேத்னா உயிரிழந்திருப்பது, உடல் எடை குறைப்புக்கான அறுவைச் சிகிச்சைகள், சைஸ் ஜீரோ அல்லது சிக்ஸ் பேக் போன்ற மிகவும் கட்டுக்கோப்பான உடலமைப்பு மீது அதிகரித்து வரும் மோகம், பருமனாக இருப்பவர்கள் எதிர்கொள்ளும் மன அழுத்தம் ஆகியவை குறித்த விவாதங்களை வலுப்பெறச் செய்துள்ளது.

சேத்னாவின் இறப்புக்கு அவருக்கு அறுவை சிகிச்சை அளித்த மருத்துவ மையத்தின் கவனக்

**ஆண்கள் என்றால் சிக்ஸ் பேக் வைத்திருக்க வேண்டும் பெண்கள் என்றால் சைஸ் ஜீரோ உடல்வாகைப் பெற்றிருக்க வேண்டும் என்பது புத்தாயிரத்துக்குப் பின் காட்சி ஊடகங்கள் வழியே பெரிதும் திணிக்கப்பட்டது.**

குறைவே காரணம் என்று அவருடைய பெற்றோர் குற்றம்சாட்டியுள்ளனர். அறுவை சிகிச்சையின்போது மாரடைப்பு ஏற்பட்டு சேத்னா உயிரிழந்திருக்கிறார். பொதுவாக, இதுபோன்ற கொழுப்பு நீக்க/எடை குறைப்பு அறுவை சிகிச்சை செய்துகொண்டவர்களில் மிக அரிதாகச் சிலருக்கு இறப்பை விளைவிக்கும் வரையிலான தீவிர பின்விளைவுகள் ஏற்படும் என்று தரவுகள் தெரிவிக்கின்றன. சில தமிழ்த் திரைப்படங்களில் நடித்துள்ள ஆர்த்தி அகர்வால், 2015இல் 31 வயதாகியிருந்தபோது அமெரிக்காவில் மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்தார்.

இறப்பதற்கு ஆறு வாரங்களுக்கு முன் அவர் கொழுப்பு நீக்க அறுவை சிகிச்சை செய்துகொண்டார். இது போன்ற அறுவை சிகிச்சைகளால் நீண்டகால உடல்நலப் பாதிப்புகளுக்கும் சிலர் ஆளாகின்றனர். அதேநேரம், நவீன மருத்துவ சிகிச்சையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களின் காரணமாக இந்த அறுவை சிகிச்சைகளின் இறப்பு விகிதமும் பிற தீய விளைவுகளும் படிப்படியாகக் குறைந்துவந்துள்ளன.

பருமனாக இருக்கும் அனைவருக்கும் இந்த அறுவை சிகிச்சை உகந்ததல்ல. தேவையானதும் அல்ல. ஒருவரின் உயரத்துக்கு ஏற்ப அவருடைய உடல் எடை எவ்வளவு இருக்கலாம் என்பதைக் கணக்கிட, 'உடல் பருமக் குறியீடு' (BODY MASS INDEX) என்னும் அளவீடு பயன்படுத்தப்படுகிறது. உடல்பருமக் குறியீடானது சர்க்கரை, ரத்த அழுத்தம் உள்ளிட்ட துணைநோய் இருப்போருக்கு 32.5 அல்லது அதற்கு மேலாகவும் பிறருக்கு 37.5 அல்லது அதற்கு மேலாகவும் இருந்தால் மட்டுமே அந்த நபர் எடை குறைப்பு அறுவை சிகிச்சைக்குப் பரிந்துரைக்கப்படுவார்.

அதுவும் அவர் அதீத உடல் பருமனின் காரணமாக நீண்ட கால உடல்நலப் பிரச்சினைகளுக்கும் அகால மரணத்துக்கும் ஆளாகிவிடுவதைத் தவிர்ப்பதற்காகவே இந்த அறுவை சிகிச்சையை மருத்துவர்கள் பரிந்துரைப்பார்கள். உணவுக் கட்டுப்பாடு, உடற்பயிற்சி ஆகியவற்றால் உடல் எடையைக் குறைக்கும் முயற்சிகள் முற்றிலும் பலனளிக்கத் தவறிவிட்டால் மட்டுமே அறுவை சிகிச்சைகளின் மூலம் உடல் எடையைக் குறைப்பதற்கான வழியை நாட வேண்டும்.

உடல் எடையால் விளையும் உடல்நலப் பிரச்சினைகளுக்காக மட்டும் அல்லாமல், சமூக அழுத்தத்தால் விளையும் உளவியல் பிரச்சினைகளிலிருந்து விடுபட விரும்புவோரும் தொழில் காரணங்களுக்காக "அழகா"கத் தோன்ற வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருப்போரும்தான் எடை குறைப்பு அறுவை சிகிச்சையை நாடுகிறார்கள். இவர்களில் பலர் உடனடித் தீர்வை எதிர்பார்க்கிறார்கள். அல்லது அதற்கான அழுத்தத்துக்கு ஆளாகிறார்கள்.

இதற்கு, பருமனாக இருப்பதை இழிவானதாகவும் கிண்டலுக்குரியதாகவும் பார்க்கும் நம் சமூக மனநிலை மென்மேலும் வலுப்பட்டிருப்பதும் தீவிரமடைந்திருப்பதும் முக்கியப் பங்களிக்கிறது. பருமனாக இருப்பது குறித்த கேலிகள் நம் சமூகத்தில் நெடுங்காலமாக இருந்துவருவதுதான். ஆனால், எது பருமன், எது கேலிக்குரிய உடல் எடை என்னும் அளவுகோல் மாறிக்கொண்டே இருக்கிறது. முன்பெல்லாம் தொப்பையுடன் இருப்பது ஊளைச் சதையுடன் இருப்பது ஆகியவை மட்டுமே கிண்டலுக்குரியதாகப் பார்க்கப் பட்டது. ஆனால், அண்மைக் காலங்களில் சற்று சதைப்பிடிப்புடன் இருப்பதே ஒருவரை 'குண்டு' என்று முத்திரை குத்துவதற்குப் போதுமானதாக இருக்கிறது.

இந்தப் பார்வை மாற்றத்தில் உடல் எடை தொடர்பான சர்வதேச அளவிலான பெருவணிகப் பெருக்கத்துக்கும் மறுக்க முடியாத பங்கிருக்கிறது.

1990-களிலிருந்து சினிமா கதாநாயகர்கள், கதாநாயகிகள் தங்களின் உடல் எடை குறித்த கவனம் அவர்களுக்கு அதிகரிக்கத் தொடங்கியது. சில நடிகர்கள், நடிகைகள் குண்டாக இருக்கிறார்கள் என்பதற்காகவே கடுமையாக விமர்சிக்கப்பட்டனர். ஆண்கள் என்றால் சிக்ஸ் பேக் வைத்திருக்க வேண்டும் பெண்கள் என்றால் சைஸ் ஜீரோ உடல்வாகைப் பெற்றிருக்க வேண்டும் என்பது புத்தாயிரத்துக்குப் பின் காட்சி ஊடகங்கள் வழியே பெரிதும் திணிக்கப்பட்டது. சினிமா நடிகர்கள், நடிகைகள் சிலர் இதை ட்ரெண்டாக்கியதில் பங்களித்தனர். ஒரு கட்டத்தில் ஒல்லியாக இருப்பது மட்டுமே அழகானது என்னும் மனநிலை ஊடகங்களில் மட்டுமல்லாமல் பொதுச் சமூகத்திலும் எழுதப்படாத விதியாகிவிட்டது.

அதிக எடை குறித்த இழிவான பார்வை பொதுச் சமூகத்திலும் பரவியது. நீண்ட நாட்களுக்குப் பிறகு, பார்க்கும் நண்பரையோ உறவினரையோ 'என்ன... இவ்ளோ குண்டாகிட்டீங்க?' என்று கேட்பது சர்வசாதாரணமாகிவிட்டது. முதல் முறை சந்திப்பவர்களிடம்கூட அவருடைய உடல் எடை குறித்து கருத்து தெரிவிப்பதற்கும் பலர் தயங்குவதேயில்லை. பலர் முன்னிலையில் ஒருவரின் உடல் எடையை விமர்சிப்பது சம்பந்தப்பட்டவருக்கு வலியைக் கொடுக்கக்கூடும் என்பது குறித்து, இப்படிக் கேட்பவர்கள் யோசிப்பதேயில்லை.

அப்படி யோசிக்கத் தேவையில்லை என்று நினைக்கும் அளவுக்கு பருமனாக இருப்பது பாவச் செயல் என்பது போன்ற மனநிலை பரவலாகிவருகிறது. பெண்கள், குறிப்பாக காட்சி ஊடகத் துறையில் இருப்போர் பன்மடங்கு அதிகமாக இந்த அழுத்தத்தை எதிர்கொள்கின்றனர். சமூக ஊடகங்களில் ஒரு நடிகை தன் ஒளிப்படத்தைப் பதிவேற்றினால் 'குண்டாகிவிட்டார்', 'சதைபோட்டுவிட்டார்' என்று கூறுவது தொடங்கி, அதற்காகக் கிண்டலடிப்பது, இழிவுபடுத்துவது வரை கடுமையான எதிர்வினைகளைக் காண முடியும். இதன் காரணமாகவே அண்மைக் காலங்களில் வழக்கமான எடை என்று சொல்லக்கூடிய தோற்றம்கொண்ட நடிகைகள் சிலர் மிகவும் ஒல்லியாகியிருப்பதைக் காண முடிகிறது. அப்படி ஒல்லியான பிறகும் 'நோயாளிபோல் இருக்கிறார்' என்பது போன்ற விமர்சனங்களையும் எதிர்கொள்ள நேர்கிறது.

இன்னொருபுறம், உடலைக் கட்டுக்கோப்பாக வைத்திருக்க வேண்டும் என்பது குறித்த அக்கறை பன்மடங்கு அதிகரித்திருக்கிறது. உடற்பயிற்சிக் கூடங்கள் பன்மடங்கு அதிகரித்துவிட்டன. அனைத்து வயது ஆண்களும் பெண்களும் உடற்பயிற்சிக் கூடங்களுக்குச் செல்கின்றனர். உடலைக் கட்டுக்கோப்பாக வைத்திருக்க வேண்டும் என்கிற அக்கறையும் அதற்கான முனைப்புகளும் வரவேற்கத் தகுந்தவைதான். ஆனால், கட்டுக்கோப்பான உடல்

(08ம் பக்கம் பார்க்க)

# பேரறிவாளன்: நீதியின் மறுபக்கம்



## சந்துரு, முன்னாள் நீதிபதி

தமிழ்நாட்டில் தமிழ் மக்களால் 1971க்குப் பிறகு முற்றிலுமாகப் புறக்கணிக்கப்பட்ட காங்கிரஸ் கட்சி மீண்டும் ஒரு கோமாளித்தனமான வேலையில் ஈடுபட்டுள்ளது. இந்திய முன்னாள் தலைமை அமைச்சர் ரஜீவ் காந்தி கொலைக் குற்றவாளி எனத் தீர்ப்பளிப்பட்ட பேரறிவாளனை உச்ச நீதிமன்றம் விடுவித்த தீர்ப்புக்கு எதிராக காங்கிரஸ் தொண்டர்கள் வாயில் துணியைக் கட்டிக்கொண்டு ஒரு மணி நேரம் அமைதிப் போராட்டம் அறிவித்தது அபத்தம்! இது தவிர, அவர்களது ‘செய்தித் தொடர்பாளர்’ என்ற பெயரில் இயங்கும் அமெரிக்கை நாராயணன் உதிர்க்கும் முத்துகள் யாவும் காது கொடுக்க சகிக்காதவை. இந்தத் தீர்ப்பை பயங்கரவாதத்திற்கும், பணநாயகத்திற்கும் கிடைத்த வெற்றி என்று கூறியதோடு, தமிழ் மக்கள் அடைந்திருக்கும் தோல்வி என்றும் குறிப்பிட்டுள்ளார் அவர்.

### நீதிமன்றத்தின் முன்னின்ற கேள்வி

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து ஒரு தேசிய அரசியல் கட்சி எதிர்ப்புப் போராட்டம் நடத்துவது என்பது கேலிக்கூத்து. வேடிக்கையாகச் சொல்வார்கள், 'அரசமைப்புச் சட்டத்தில் என்ன எழுதியிருந்தாலும் இறுதியில் நீதிபதிகள் சொல்வதே சட்டம்!' என்று. ஒரு கிரிமினல் வழக்கில் உச்ச நீதிமன்றம் பிறப்பிக்கும் உத்தரவே இறுதியானது என்பதை ஒரு சட்ட மாணவன்கூட உறுதிப்படுத்திவிடுவான். ஆனால், இந்தச் சிற்றறிவுகூட இல்லாமல் பொறுப்பற்ற முறையில் ஏன் இப்படி காங்கிரஸ் செயல்படுகிறது?

தற்போது நீதிமன்றத்தின் முன் எழுப்பப்பட்டிருந்த பிரச்சினையானது, ‘ராஜீவ் காந்தி கொலையில் சம்பந்தப்பட்டவர்கள் குற்றவாளிகளா அல்லது நிரபராதிகளா?’ என்பதே இல்லை. அக்கொலையில் சம்பந்தப்பட்ட நேரடிக் குற்றவாளிகள் அனைவரும் சிறப்புப் புலனாய்வுக் குழு மேற்பார்வையில் நடந்த விரட்டலில் இறந்துவிட்டார்கள். பின்னர் தடா சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட சிறப்பு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட குற்றவாளிகள் எவரும் இந்தக் கொலையில் நேரடிப் பங்கு வகித்தவர்கள் அல்லர். கொலைக்கும், கொலையை ஒட்டிய ரகசிய சதிக்கும் பல்வேறு வழிகளில் துணை சென்றவர்கள் என்ற முறையில்தான் அவர்களது பங்கு அந்த விசாரணையில் கொண்டுவரப்பட்டது.

தடா சட்டத்தின்படி வழக்கு விசாரணை இரகசியமாக நடத்தப்பட்டதுடன், காவல் கண்காணிப்பாளர் என் இடத்தில் உள்ள ஒருவர் முன் அளிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலங்களைச் சாட்சியங்களாக ஏற்றுக்கொள்வதற்கும் அச்சட்டத்தில் இடம் உண்டு. மேலும், சிறப்பு நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீட்டை உச்ச நீதிமன்றத்தில் மட்டுமே செய்ய முடியும். இப்படிப்பட்ட ஒரு கடுமையான சட்டத்தின் கீழ்தான், பல்வேறு சித்திரவதைகளுக்கு ஆட்படுத்தப்பட்ட குற்றவாளிகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

சிறப்பு நீதிமன்றம் 26 குற்றவாளிகளுக்கு தூக்குத் தண்டனை விதித்தது எல்லோரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. குற்றவியல் வழக்குகளில் குற்றத்தில் சம்பந்தப்பட்டவர்கள் ஒவ்வொருவர் பங்கையும் தனித்தனியாக நிர்ணயித்து, அதன் அடிப்படையில் தண்டனை விதிப்பதுதான் உரிய முறை. ஆனால் அதையும் மீறி சிறப்பு நீதிமன்றம் அனைவருக்கும் தூக்குத் தண்டனை அளித்ததைப் பற்றி உச்ச நீதிமன்றத்தில் முறையிடும்போது, ‘இது நீதித்துறையே விளைவித்த கொலைக் குற்றம்’ என்று விமர்சிக்கப்பட்டது. பின்னர், இந்த மேல்முறையீட்டில் 22 பேர் மீதான கொலைத் தண்டனையை நீக்கி 4 பேருக்கு மட்டும் உறுதிசெய்தது உச்ச நீதிமன்றம்.

> **நேரடிக் குற்றவாளிகள் அனைவரும் சிறப்புப் புலனாய்வுக் குழு மேற்பார்வையில் நடந்த விரட்டலில் இறந்துவிட்டார்கள். பின்னர் தடா சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட சிறப்பு நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்ட குற்றவாளிகள் எவரும் இந்தக் கொலையில் நேரடிப் பங்கு வகித்தவர்கள் அல்லர்.**

இந்தத் தீர்ப்பை எழுதிய நீதிபதி கே.டி.தோமஸ் பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில், நான்கு பேருக்கு கொலைத் தண்டனையை உறுதி செய்ததுகூடத் தவறு என்று கருத்து தெரிவித்தார். பேரறிவாளனிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெற்ற சிபிஐ கண்காணிப்பாளர் தியாகராஜன், தான் ஒப்புதல் வாக்குமூலத்தை எழுதும்போது அதில் முக்கியப் பகுதி ஒன்றைத் தவிர்த்துவிட்டதாக வருத்தம் தெரிவித்தார்.

### அமைச்சரவையே பிரதானம்

கொலைத் தண்டனை விதிக்கப்பட்ட நளினி, முருகன், பேரறிவாளன், சாந்தன் ஆகிய 4 பேரும் ஆளுநரிடம் அரசமைப்புச் சட்டம் 161ஆவது பிரிவின்படி கருணை மனுவை அளித்தனர். அன்றைய ஆளுநர் பாத்திமா பீவி அப்பதவிக்கு வருவதற்கு முன் உச்ச நீதிமன்ற நீதிபதியாகப் பணியாற்றியவர். தமிழக அமைச்சரவையின் அறிவுரையைப் பெறாமலேயே 4 பேர் கருணை மனுக்களையும் அவர் தள்ளுபடி செய்தார். அதை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. அவ்வழக்கில் அமைச்சரவையின் அறிவுரையின்றி ஆளுநர் கருணை மனுக்களைப் பரிசீலிக்க முடியாது என்று தீர்ப்பளிக்கப்பட்டதுடன், ஆளுநரின் தள்ளுபடி உத்தரவும் நீக்கப்பட்டது.

அன்றைய தமிழக முதல்வர் கருணாநிதி தலைமையிலான அமைச்சரவை அம்மனுக்களைப் பரிசீலித்தது. திமுக அரசு ஏற்கெனவே விடுதலைப் புலிகள் விவகா ரத்தில் மென்போக்கோடு செயல்படுவதாக அப்போது குறிவைக்கப்பட்ட நிலையில், நளினிக்கு மட்டும் தூக்குத் தண்டனையைக் குறைப்பதற்கு ஆளுநருக்கு அரசு ஆலோசனை வழங்கியது. மற்ற மூவரின் கருணை மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. இதை எதிர்த்து குடியரசுத் தலைவருக்கு மனுக்கள் அளிக்கப்பட்டன. அன்றைய குடியரசுத் தலைவராக இருந்த கே.ஆர். நாராயணனும், அதற்குப் பின்னர் பதவிக்கு வந்த அப்துல் கலாமும் முடிவு எதுவும் எடுக்காமல் 11 ஆண்டுகள் கருணை மனுக்கள் கிடப்பில் போடப்பட்டன. அதற்குப் பின் குடியரசுத் தலைவர் பதவிக்கு வந்த பிரதீபா பாட்டீல் அம்மனுக்களைத் தள்ளுபடி செய்ததையொட்டி தூக்குத் தண்டனையை நிறைவேற்றும் நாள் நெருங்கியது. அச்சமயத்தில் தமிழக சட்டப்பேரவையில் குற்றவாளிகள் 7 பேருக்கும் தூக்குத் தண்டனையை நீக்குவதற்கு குடியரசுத் தலைவர் கருணை காட்ட வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது (2011).

சம்பந்தப்பட்டவர்கள் மீண்டும் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். அவ்வழக்கு விசாரணையில் இருக்கும்போதே அம்மனுக்கள் உச்ச நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது. உச்ச நீதிமன்றம் இத்தனை ஆண்டுகளாக சாவுக் கொட்டடியில் இருந்து வந்த அக்குற்றவாளிகளின் தூக்குத் தண்டனையை நிறுத்தி அதை ஆயுள் தண்டனையாகக் குறைத்தது (2014). இதற்குப் பின்தான் தமிழக அமைச்சரவை குற்றவாளிகள் 7 பேருக்கும் தண்டனையை நிறுத்தி விடுதலை செய்யும்படி ஆளுநருக்கு அறிவுரை வழங்கியது.

இதையொட்டி உச்ச நீதிமன்றமும் அவர்கள் குறைந்தபட்ச தண்டனைக் காலத்தை அனுபவித்துவிட்டதனால் அவர்கள் தண்டனையைக் குறைப்பதற்கோ, மாற்றுவதற்கோ குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் நிவாரணம் பெறலாம் என்று கூறியதன் அடிப்படையில் அவர்கள் மீண்டும் ஆளுநரிடம் மனு அளித்தனர். மறுபடியும் தமிழக அமைச்சரவை ஆளுநரிடம் தண்டனையைக் குறைக்கும்படி அறிவுரை வழங்கியது.

அதற்குப் பிறகு ஆளுநர் இது குறித்து முடிவு எதுவும் எடுக்காததனால் மீண்டும் ஒருமுறை சென்னை உயர் நீதிமன்றத்தை அணுகினர். ஆனால், சென்னை உயர் நீதிமன்றமோ ஆளுநரின் இந்த சிறப்பு அதிகாரத்தில் தலையிட முடியாது என்று ஒதுங்கிக்கொண்டது. மறுபடியும் வழக்கு உச்ச நீதிமன்றத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டது. 2018ஆம் ஆண்டு தமிழக சட்டப்பேரவை மீண்டும் ஒருமுறை குற்றவாளிகளின் தண்டனையைக் குறைப்பதற்காகத் தீர்மானம் நிறைவேற்றியது (9.9.2018). அதே நாளில் தமிழக அமைச்சரவை ஆளுநரிடம் குற்றவாளிகள் 7 பேருக்கும் தண்டனையை நிறுத்துவதற்கு ஆலோசனை வழங்கியது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் அமைச்சரவையின் ஆலோசனையைப் புறக்கணித்து ஆளுநர் முடிவு எதுவும் எடுக்காமல் காலம் தள்ளி

## பேரறிவாளன்....

வந்ததைத்தான் தற்போது உச்ச நீதிமன்றம் குறை கூறியுள்ளது. ஆளுநர் சார்பாக வாதாடிய இந்திய ஒன்றிய அரசின் வாதத்தை நிராகரித்ததுடன், அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 161இன் கீழ் கருணை காட்டும் அதிகாரத்தை ஆளுநர் தன் னிச்சையாகப் பயன்படுத்த முடியாது என்றும், அமைச்சரவையின் ஆலோசனை அவரைக் கட்டுப்படுத்தும் என்றும் மீண்டும் ஒருமுறை வலியுறுத்தப்பட்டுள்ளது.

**சீர்திருத்துவதே தண்டனையின் நோக்கம்**

சுமார் இரண்டாரை ஆண்டுகள் கிடப்பில் போடப்பட்டிருந்த கருணை மனுக்களின் மீது மீண்டும் முடிவெடுப்பதற்காக ஆளுநரிடம் திருப்பி அனுப்பாமல், அரசமைப்புச் சட்டத்தின் 142ஆவது பிரிவில் வழங்கப்பட்டுள்ள சிறப்பு அதிகாரத்தைப் பயன்படுத்தி பேரறிவாளனை விடுதலை செய்யும் உத்தரவை உச்ச நீதிமன்றமே பிறப்பித்துள்ளது வரலாற்றுச் சிறப்புமிக்கது. இதைக் கண்டித்துதான் காங்கிரஸார் குரலெழுப்பிவருகிறார்கள்.

தீவிரவாதத்துக்கு ஆதரவானது என்று கருத்து கூறியுள்ள அமெரிக்கை நாராயணன் இந்தத் தீர்ப்பில் தீவிரவாதத்திற்கு ஆதரவாக ஏதேனும் ஒரு பகுதியைச் சுட்டிக்காட்ட முடியுமா? பணநாயகம் வென்றது என அவர் கூறியுள்ளது அப்பட்டமான நீதிமன்ற அவமதிப்பாகும். தமிழக மக்களுக்குத் தோல்வி என்றும் அவர் எதைக் குறிப்பிடுகிறார் என்பது தெரியவில்லை.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தீவிரவாத சட்டப் பிரிவுகளைச் சேர்ப்பதற்கு இடம் இல்லை என்று 1999ஆம் வருடத்திய மேல்முறையீட்டிலேயே உச்ச நீதிமன்றம் தீர்ப்பை வழங்கிவிட்டது. இருப்பினும் இவ்வழக்கு சம்பந்தமான பிரச்சினை எழும்போதெல்லாம் குற்றவாளிகள் தீவிரவாதத்தை ஆதரிப்பவர்கள் என்று தொடர்ச்சியான பரப்புரையைக் கட்டவிழ்த்து விடுவது சட்டத்துக்கு மாறானது மட்டுமல்லாமல், கீழ்த்தரமான அரசியல் பரப்புரையுமாகும்.

இந்திய நாட்டு குற்றவியல் தண்டனையின் அடிப்படை பழி வாங்குதல் அல்லது மாறு கை / மாறு கால் வாங்குவது அல்ல. மாறாக, தண்டனை விதிக்கப்பட்ட நபர்களைச் சீர்திருத்தி மைய நீரோட்டத்தில் கொண்டுசேர்ப்பதுதான். காந்திகூட 'கண்ணுக்குக் கண் என்ற நோக்கம் தேசத்தையே குருடாக்கி விடும்!' என்று கூறினார். இந்திய உச்ச நீதிமன்றமும் பல தீர்ப்புகளில் இக்கருத்தை வலியுறுத்தியுள்ளது.

1978இல் திருத்தப்பட்ட குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 433-A கீழ் தூக்குத் தண்டனை பெற்ற குற்றவாளி 14 ஆண்டுகள் சிறைத் தண்டனையை அனுபவித்து விட்டால் தண்டனைக் குறைப்பு பற்றி அரசு பரிசீலிக்கலாம் என்றுதான் கூறப்பட்டுள்ளது. அப்படியானால் 30 ஆண்டுகள் சிறைத் தண்டனையைக் கழித்துவிட்ட 7 குற்றவாளிகளின் தண்டனையையும் ஏன் மாநில அரசு குறைக்கக் கூடாது என்கிற கேள்விதான் மேலோங்கி நிற்கும்.

**ஆளுநரின் ஆதிகார வரையறை?**

குற்றவியல் சட்டத்தில் குற்றமிழைத்தவர்கள் மீது உரிய தண்டனை வழங்கிய பின் அவர்களுக்கு சட்டத்திலுள்ள சலுகைகளை வழங்குவதை அரசியலாக்குவதை நிறுத்திக் கொள்ளவேண்டும். கடந்த 30 வருடங்களாக இந்திய ஒன்றிய அரசில் பதவி வகித்த காங்கிரஸ் கட்சியும், பாஜக கட்சியும் இப்பிரச்சனையில் ஒரே நிலைப்பாட்டைக் கடைப்பிடித்து வருவது அவர்களைத் தமிழக அரசியலிலிருந்து மேலும் வெளித்தள்ளிக்கொள்ளவே வழிவகுக்கும். குற்றங்களுக்கான தண்டனை தொடர்பில் சட்டங்கள் தெளிவாக இருக்கும்போது, அதையும் மீறி இத்துணைக்கண்டத்தின் அரசியலை முன்வைத்து தண்டனைகளை நிறைவேற்ற முயல்வது கிரிமினல் சட்ட முறைக்கே எதிரானது.

கொலை வழக்கில் தண்டனை பெற்றவர்கள் அனைவரும் சட்டத்திலுள்ள குறைந்தபட்ச சிறைத் தண்டனைக்கு மீறி மேலும் ஒரு பங்கு சட்டப் போராட்ட காலத்தில் சிறையிலேயே கழிக்க வேண்டிய நிர்ப்பந்தம் உண்மையிலேயே ஒரு கேவலமான சூழ்நிலையை உருவாக்கியுள்ளது.

இவ்வழக்கில் தீர்ப்பளித்த நீதிபதி நாகேஸ்வரராவ், ஜெயலலிதா அரசு சிறப்பு வக்கீலாக பல பொடா வழக்குகளில் மறு ஆய்வுக் குழுவில் முன்னிலையாகி வாதிட்டவர். தமிழ்நாட்டில் தேசிய அமைப்புகளைச் சேர்ந்த நெடுமாறன், வைகோ போன்ற தலைவர்களைப் பொடா சட்டத்தின் கீழ் போடப்பட்ட வழக்குகள் நியாயம் என்று வாதாடியவர். அவருக்கு இந்த மாநிலத்தின் அரசியல் பின்னணி அத்துப்படி. இருப்பினும், சட்ட நியாயங்கள் கருதி சிறப்பான தீர்ப்பொன்றை அவர் அளித்துள்ளது வரவேற்கத்தக்கது.

ஆளுநரின் அதிகார வரையறை என்ன என்பதையும், அவர் அமைச்சரவையின் முடிவுக்குக் கட்டுப்பட்டவர் என்பதையும் வலியுறுத்திய அவரது தீர்ப்பு இன்றைய இந்திய ஒன்றிய அரசுக்கும், இங்குள்ள பாஜகவினருக்கும் வேப்பங்காயாக இருக்கலாம். ஆனால், அதுதான் அரசமைப்புச் சட்டத்தின் உண்மையான நோக்கம் என்பதை அவர்கள் உணர வேண்டும்.

அது மட்டுமின்றி, மற்ற 6 குற்றவாளிகளுக்கும் மனத்தடையை அகற்றி சட்ட வரையறையுடன் செயல்பட்டு மன்னிப்பு அதிகாரத்தின் மூலம் தண்டனையை நீக்கினால் அவர்களை 'திருந்திய மனிதர்கள்' என்று கருத இடம் உண்டு. மீறினால் மீண்டும் குட்டு வைப்பதற்கு இருக்கவே இருக்கிறது உச்ச நீதிமன்றம்!

# எதிரியை வெல்வார்களா தமிழர்கள்...?

**விதுரன்**

போர் முடிந்து 11 ஆண்டுகள் கடந்துவிட்டது. போரில் இறந்தவர்களுக்காக அஞ்சலிப்பதையும் முள்ளிவாய்க்கால் கஞ்சி பரிமாறுவதையும் சுடர் ஏற்றுவதையும் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வருடா வருடம் வழக்கமாக்கிவிட்டார்கள். ஆனாலும் இறுதிப் போரில் இறந்தவர்களின் பட்டியலைத் தயாரிக்க முடியாத நிலையில்தான் தமிழினம் உள்ளது என்பது வேதனைக்குரியது.

இந்தப் பட்டியலை எவ்வாறு தயாரிப்பது? அதற்கான பொறிமுறை என்ன? வெளிப்படுத்தவேண்டிய பொறுப்பும் இழப்புகளைச் சந்தித்த தமிழருக்கே உண்டு.

**யாரெல்லாம் இதைச் செய்யலாம்...?**

இறுதிப்போரில் கொல்லப்பட்டவர்களின் விவரங்களைச் சேகரிப்பதற்குப் பலராலும் முடியும். பலருக்கும் அந்தப் பொறுப்புண்டு. நாடுகடந்த தமிழீழ அமைப்பு, புலம்பெயர் தமிழர் அமைப்புகள், உள்நாட்டிலும் வெளிநாட்டிலுமுள்ள தமிழ்ச் சமூகச் செயற்பாட்டாளர்கள், மனித உரிமை அமைப்புகள், தமிழ்ச் சட்டத்தரணிகள், தமிழ் நடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபைகளைச் சேர்ந்தவர்கள், உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகள், பல்கலைக்கழக மாணவர்கள், காணாமல்



ஆக்கப்பட்டவர்களுக்கான அமைப்புகள், கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் அமைப்புகள் (இந்துக் கோவில்கள் நிறுவனமயப் பட்டவையாக இல்லாததால் இதை முன்னெடுக்க வாய்ப்பில்லை), விதவைகளுக்கான அமைப்புகள், ஊடகத்துறை சார்ந்தவர்கள், விவசாய அமைப்புகள், மீனவ அமைப்புகள், முச்சக்கரவண்டிச் சாரதிகள் அமைப்புகள், தனியார் பேருந்து அமைப்புகள் என அமைப்பாக இயங்குகின்ற பல தரப்பினரும் இணைந்தால் தமக்குள் சிதறிக்கிடக்கின்ற விவரங்களை ஒன்றிணைக்க முடியும்.

அத்தோடு இறுதிப்போரில் அகப்பட்டுத் தற்போது வெளிநாடுகளிலுள்ள போரா ளிகள், இங்குள்ள முன்னாள் போராளிகள், இழப்புகளைச் சந்தித்த குடும்பங்களைச் சேர்ந்தவர்கள், பாடசாலை மாணவர்கள், அப்போது செஞ்சிலுவைச் சங்கக் கப்பலில் பணியாற்றியவர்கள், நோயாளர் காவுவண்டிச் சாரதிகள், தாதியர்கள், பராமரிப்பாளர்கள், மருத்துவமனைச் சிற்றூழிர்கள், பிண அறைப் பணியாளர்கள் எனப் பல தரப்பினரிடம் இருந்து இறுதிப் போரில் இறந்தவர்கள் பலரின் விவரங்களைச் சேகரிக்க முடியும்.

இறுதிப்போர் நடந்து 13 வருடங்கள் ஆகிவிட்ட நிலையில் படித்தவர்கள் என்பதை முதலில் கண்டறிய வேண்டும். அதற்காகத் தமிழ்த் தரப்பினர் பலரும் ஒன்றிணைய வேண்டும். ஒற்றுமையே தமிழர்களின் முக்கிய - முதன்மை எதிரி. ஆனாலும் இறந்தவர்களுக்காக ஆவது அந்த எதிரியை வெல்வதற்கு அரசியல் தரப்பினர் உள்ளிட்ட தமிழ்த் தரப்பினர் பலரும் ஒன்றுபடவேண்டும்.

**தமிழருக்குரிய பொறுப்பு இது**

இறுதிப்போரில் இறந்தவர்களில் பெரும்பாலானவர்களின் விவரங்களைப் பன்னாட்டுச் செஞ்சிலுவைச் சங்கம், ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான அமையம், இலங்கைப் படைத்தரப்பு, கிராம அலுவலர்கள், பிரதேச செயலர்கள், மாவட்டச் செயலர்கள் எனப் பல தரப் பினரும் சிதிலங்களாக வைத்திருக்க வாய்ப்புண்டு. உண்டு. இந்த விவரங்களில் 13ஆயிரத் துக்குக் குறைவான மக்களே இறந்தனர் என்று குறிப்பிடப்பட்டாலும் இறுதிப் போரிர் சாவடைந்தவர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 40 ஆயிரம் அல்லது 1 லட்சத்து 46 ஆயிரம் எனத் தமிழர் தரப்பில் கூறப்படுகிறது. அந்தத் தகவலுக்குரிய ஆதாரத்தைப் பூர்த்தி செய்வது தமிழர்களின் பொறுப்பும் - கடமையும். அதைப் பன்னாடுகளுக்கு

தட்சணமூர்த்தி -கோண்டாவில்

# நம்மவூர்ச் சுத்துமாத்து




## வெளிநாட்டுக் காப்புறுதிச் சுத்துமாத்து

கோவில் திருவிழாக்கள், திருமணங்கள், பூப்புனித நீராட்டு விழாக்கள், சாவு வீடுகள் எனப் பல காரணங்களுக்காக வெளிநாட்டில் வாழ்கின்ற தமிழர்கள் வருடா வருடம் இலங்கைக்கு வந்து போவது வழக்கம். இவ்வாறு வருபவர்களில் பலர் தாம் வெளிநாட்டிலிருந்து கொண்டு வந்த தங்க ஆபரணங்கள், பெறுமதியான பொருள்களைத் தாம் தங்கியிருந்த வீட்டில் களவு கொடுத்துவிட்டோம் என்று இலங்கைக் காவல்துறையில் முறைப்பாடு செய்கிறார்கள். காவல்துறையினரின் அந்தப் பதிவை ஆதாரமாக வைத்து வெளிநாடுகளில் தாம் காப்புறுதி செலுத்தி வருகின்ற காப்புறுதி நிறுவனங்களில் இழப்பீட்டுத் தொகையைப் பெறுகிறார்கள். இது பல காலங்களாகவே நடந்து வருகிறது.

தம்மிடமிருக்கின்ற நகைகளை மறைத்து வைப்பது, நகைகள் எவைவும் இல்லாமல் நகை தொலைந்துவிட்டது எனப் புகாரளிப்பது என்றவாறு பல சுத்துமாத்துகளைச் செய்து காப்புறுதிப் பணத்தைப் பெற்றுவிடுகிறார்கள். இதற்கு அவர்கள் தங்கியிருக்கின்ற வீட்டு உரிமையாளர் சாட்சிக்காரராக முன்னிலைப்படுத்தப்படுவார்.

இவ்வாறான சந்தர்ப்பங்களின்போது வெளிநாட்டிலிருந்து வந்தவர்களையும் குடியிருப்பாளரையும் அவர்களது குடும்பத்தவர்களையும் தனித்தனியாக விசாரித்தபோது பல இடங்களில் இது பெரும் சுத்துமாத்து என்று தெரிய வந்தது. வெளிநாட்டுக் காப்புறுதியைப் பெறுவதற்காக மேற்கொள்ளப்பட்ட ஒரு நாடகம் என்றும் தெளிவாகியது. காவல்துறையினரின் விசாரணைகளின் பின்னர் மறைத்து வைக்கப்பட்டிருந்த நகைகள் பல மீட்கப்பட்டிருக்கின்றன. உயர் பதவிகளில் உள்ள அதிகம் பேர் இத்தகைய சுத்துமாத்துக்காரர் களுக்கு உடந்தையாக இருந்த காரணத்துக்காகப் பிடிபட்டிருக்கிறார்கள். அதில் ஆசிரியர்களும் அடங்குகின்றனர் என்பது பெரும் துயரம். இதை உள்ளூர்ச் சுத்துமாத்தும் வெளிநாட்டுச் சுத்துமாத்தும் கலந்த இரட்டைச் சுத்துமாத்து எனலாம்.

இவ்வாறு பிடிபட்ட பின்னணியில் பல சுழியன்களும், மண்டைக்காய்களும தோற்றுப்போயுள்ளனர். வெளிநாடுகளில் இருந்து வந்தவர்கள் காவல்துறையில் கொடுக்கின்ற மேற்கண்டவகையான முறைப்பாடுகளைக் காவல்துறையினர் நம்ப மாட்டார்கள் என்ற நிலை இப்போது காவல்துறை வட்டாரத்தில் பரவலாக ஏற்பட்;டுவிட்டதாலும் பொய்த் தகவல்களை வைத்துக் காப்புறுதிப் பணம் பெறுகிறார்கள் என்ற விடயம் வெளிநாடுகளில் கசிந்திருப்பதாலும் தற்போது இந்தச் சுத்துமாத்து ஓரளவுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது.

## எதிரியை...

என்று பெருமைப்பட்டுக்கொள்ளும் தமிழர்கள் தமது மண்ணில் நடந்த போரில் யாரெல்லாம் இறந்தார்கள் என்பதைத் தேடியறியாமல் அண்ணளவாகக் கணக்குச் சொல்வதும், கருத்துத் தெரிவிப்பதும் வெட்கக்கேடானது. அதேவேளை இறுதிப்போரில் இறந்தவர்களை ஆதாரப்படுத்தவேண்டிய தேவை ஒவ்வொரு தமிழ்க் குடும்பத்துக்கும் உண்டு.

**இலங்கை அரசின் நிலைப்பாடு**

இறுதிப்போரில் அண்ணளவாக எத்தனை போராளிகள், மக்கள் இறந்தார்கள் என்ற தரவுகள் இலங்கை அரசுக்குத் தெரிந்திருப்பதற்கு வாய்ப்புகள் அதிகம். போர்க்காலத்துக்கு முன்பான மக்கள் கணக்கெடுப்பு, ஆளில்லா வானூர்திகள் மூலமும் படையினர் மூலம் பெறப்பட்ட நேரடி நிலவரம், படையினரிடம் சரணடைந்தவர்களிடம் பெறப்பட்ட தகவல்கள், கிராம அலுவலர்கள் மூலம் பெறப்பட்ட தகவல்கள் எனப் பல்வேறு தகவல்கள் அவர்களிடம் உண்டு. இதை அரசு வெளிப்படுத்தப்போவதில்லை. இதைத் தாம் செய்தால் சிங்கள ஆட்சியாளர்களிடம் தனிப்பட்ட முறைகளில் பெறுகின்ற சலுகைகள் பாதிக்கப்படும் எனத் தமிழ் அரசியல்வாதிகளும், நாடாளுமன்ற உறுப்பினர்களும், முன்னணிச் செயற்பாட்டாளர்களும், ஊடகவியலாளர்கள் சிலரும் ஒதுங்கிவிட்டார்கள் என்றே கூற வேண்டும். நிலமை இவ்வாறிருக்க மக்கள் மத்தியில் இந்தத் தரவுகளைப் பெற முயன்றால் இலங்கை அரசின் புலனாய்வுத் துறையினர் பிரச்சினை தருவார்கள் என்றுகூறி நழுவிவிட முயற்சிக்கின்றனர்.

மன்னார் ஆயர் ஊடகங்களுக்கு அறிவித்த ஒரு லட்சத்து 40ஆயிரம் பேர் கொல்லப்பட்டார்கள் என்ற செய்தியை உறுதிப்படுத்த வேண்டியது அனைவரதும் கடப்பாடாகும். சிறிய காலப்பகுதிக்குள் இந்தத் தகவல்களைப் பெற்றுவிடும் திறன் தமது நிறுவனமயப்பட்ட செயற்பாட்டின் உச்சத்தால் புலிகளிடம் இருந்தது. ஆனால் புலிகளின் பாசறையில் தலைவருடன் நின்றோம் என்று சொல்லிப் படம் காட்டுபவர்களும், தலைவர் எடுத்த பல தீர்மானங்களுக்குத் தாமே காரணம் என்று கூறுபவர்களும் இறந்துபோன மக்களின் பெயர்ப்பட்டியலைத் தயாரிக்க முடியாமல் திணறுகின்றனர்.

இறுதிப்போரில் இறந்தவர்களின் ஆதாரபூர்வமான பட்டியலைத் தயாரித்தால் மட்டுமே பன்னாட்டு அரங்கில் தமிழரின் இழப்பைத் தமிழரால் ஆதாரப்படுத்த முடியும். இதைச் செய்யாதவரை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வெறும் கதை பறையும் விடயமாக மட்டுமே இறுதிப்போரில் கொல்லப்பட்டவர்களின் விவகாரம் இருக்கும். இந்த விடயத்தைச் சாத்தியப்படுத்துவதற்குத் தமிழ்த் தரப்பினரின் பரம எதிரியான ஒற்றுமையின்மையை வெற்றிகொள்ள வேண்டும். முன்வருவார்களாக சகலரும்....?



## உடல் பருமன்...

அமைப்பு மீதான அதீத மோகத்துக்கும் அதனால் விளையும் அழுத்தத்துக்கும் அவை சார்ந்த வணிகத்துக்கும் பங்கிருப்பதை மறுக்க முடியாது.

கட்டுக்கோப்பான உடலமைப்பை விரைவாகப் பெற வேண்டிய உந்துதலில், போதிய பயிற்சி இல்லாமல், கடினமான உடற்பயிற்சிகளைச் செய்து, உடலுக்கு நீண்ட கால பிரச்சினைகளை ஏற்படுத்திக்கொண்டுவிடுகின்றனர். இது போன்ற அழுத்தங்கள் தேவையற்றவை என்பதை அனைவரும் உணர வேண்டும். எடை குறைப்பு, உடலைக் கச்சிதமாகக் கட்டமைப்பது இரண்டும் மருத்துவ நிபுணர்களின் வழிகாட்டலுடன் நிதானமாக, படிப்படியாக நிகழ வேண்டிய விஷயங்கள் என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். உடல் கட்டுக்கோப்பாக இருப்பதைவிட ஆரோக்கியமாக இருப்பதே முதன்மையானது என்பதை உணர வேண்டும்.

பருமனாக இருப்பது உடல் நலனுக்குத் தீங்கானது என்பது மறுக்கவே முடியாத மருத்துவ உண்மை. எனவே, உடல் எடையைக் கட்டுக்குள் வைத்திருக்க வேண்டியது அத்தியாவசியமானது. ஆனால், அதற்கு உடனடித் தீர்வுகளை நாடுவது தேவையற்ற ஆபத்துகளை விளைவிக்கும். தக்க மருத்துவ ஆலோசனையுடனும் வழிகாட்டுதலுடனும் உடல் எடைக் குறைப்பை மேற்கொண்டு ஆரோக்கியத்தைப் பெறுவதற்கே பருமனாக இருப்பவர்கள் கவனம்குவிக்க வேண்டும். கிண்டல்களையும் அழுத்தங்களையும் பொருட்படுத்தாமல் கடக்கும் மனநிலையை வளர்த்துக்கொள்ள வேண்டும்.



# மர்மங்கள் நிறைந்த ஈஸ்டர்...!



சிந்தாமணி


தென் அமெரிக்காவுக்கு அப்பால் சிலி நாட்டிலிருந்து தொலைவாக நடுக்கடலில் காணப்படுகின்ற தீவுதான் ஈஸ்டர் தீவு. பசுபிக் கடலின் தென்கிழக்கே அமைந்துள்ள இதைப் பொலினீசியத் தீவு என்றும் சொல்கிறார்கள். இது சிலியின் ஆளுகைக்கு உட்பட்டது. ராப்ப நூயீ என்று அழைக்கப்படுகின்ற பழங்குடி மக்களால் அமைக்கப்பட்ட மோவாய் என அழைக்கப்படுகின்ற மிரட்டும் இராட்சதக் கற்சிலைகள் இங்கு காணப்படுகின்றன. நினைவுச் சின்னங்கள் எனக் கருதப்படும் இவை காரணமாகவே இந்தத் தீவு சிறப்புப் பெறுகிறது. இதனால் இதை உலகப் பாரம்பரியக் களமாக அறிவித்துள்ளது ஐக்கிய நாடுகள் சபையின் யுனெஸ்கோ அமைப்பு.

1722 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு நாளன்று இந்தத் தீவில் முதன் முதலாக வந்திறங்கிய டச்சுப் பயணியான ஜேக்கப் ரகவீன் என்பவர்தான் இந்தத் தீவுக்கு ஈஸ்டர் தீவு என்று பெயரிட்டார்.

**காணாமல்போன பழங்குடிகள்**

ஈஸ்டர் தீவின் வரலாறு மிகுந்த சர்ச்சைக்குரியது. இங்கு வாழ்ந்த பூர்வீக மக்களில் அனைவரும் இனம்புரியாத காரணங்களால் இறந்துவிட்டனர். பஞ்சம், தொற்று நோய்கள், உள்நாட்டுப் போர், அடிமை வாழ்வு, குடியேற்றவாதம், காடுகள் அழிப்பு ஆகியனவற்றில் ஏதோ ஒரு காரணத்தால் அவர்கள் இறந்திருக்கலாம் என்று நம்பப்படுகிறது. ஈஸ்டர் தீவு எப்போதுமே தனிமையிலுள்ள ஒரு தீவு. இதன் அருகில் உள்ள நிலப்பரப்புகள் ஆயிரக்கணக்கான மைல்கள் தொலைவில் இருப்பதால் எவ்வித வெளித்தொடர்பும் இல்லாமல் இருக்கிறது. இந்தத் தீவில் நூற்றுக்கணக்கான வீடுகள் இருந்திருக்கின்றன, விவசாயம், மீன்பிடி ஆகிய தொழில்களில் மக்கள் ஈடுபட்டிருந்தனர்.

**மிரட்டும் இராட்சதக் கல் உருவங்கள்**



ஈஸ்டர் தீவில் 1990ஆம் ஆண்டில் நடந்த அகழ்வாய்வில் 15 பெரிய கற்களில் வடிவமைக்கப்பட்ட உருவங்கள் கண்டெடுக்கப்பட்டன. மனித முகம் போல் தோற்றமுடைய பிரமாண்டமான இந்தக் கற்சிலைகளை மேவாய்கள் என்று குறிப்பிடுகிறார்கள். அவ்வாறாக நூற்றுக்கணக்கான கற்சிலைகள் தீவெங்கும் காணப்படுகின்றன. இவற்றின் உயரம் சராசரியாக 10 மீற்றரும் எடை 80 தொன்னுமாக உள்ளன. இவற்றை ஓரிடத்தில் நிலைத்து நிறுத்தாமல் பத்து மைல் தூரம் வரை தீவு முழுமையும் நிறுத்தியுள்ளார்கள். இவை குறித்த ஆய்வுகள் தொடர்கின்றன. ஏன், எதற்கு, எப்படிச் செய்யப்பட்டன என்பது குறித்த தகவல்களை அறிவது தொல்பொருள் ஆய்வாளர்களால் இன்றுவரை முடியாமல் உள்ளது. பல ஊகங்களையே அவர்களால் சொல்லமுடிகிறது.

**மரங்களை அழித்ததால் ஏற்பட்ட மனித அழிவு**

இந்த இராட்சதச் சிலைகளை நகர்த்துவதற்காக ஆயிரக்கணக்கான மரங்கள் வெட்டப்பட்டதால் இந்தத் தீவின் வனப்பகுதி முற்றிலும் அழிந்தது என்று கருதப்படுகின்றது. மரங்கள் அழிக்கப்பட்டதால் பெரும் மழையால் மண்ணரிப்பு ஏற்பட்டதால் விவசாயம் பொய்த்தது. மீன்பிடிப்பதற்குப் படகு செய்ய மரம் இல்லாததால் தீவுவாசிகள் உணவுப் பிரச்சினைக்கு ஆளானார்கள். உணவுப் பற்றாக்குறையால் ஒருவரோடொருவர் சண்டையிட்டு இறந்தார்கள். மக்கள் தொகை பெருமளவு குறைந்தது.

எஞ்சியிருந்தவர்கள் மெதுவாக பழைய வாழ்க்கைக்கு திரும்பத் தொடங்கியிருந்தபோது ஜேக்கப் ஈஸ்டர் தீவில் காலடி எடுத்து வைத்தார். இதனைத் தொடர்ந்து அடிமைகளாக வணிகத்தின் நிமித் தம் தீவுவாசிகளை பிடித்துக்கொண்டு போனார்கள்.

(11ம் பக்கம் பார்க்க)



# அச்சு வெல்லம்

எம்.கே.மணி

விடிந்தால் கல்யாணம்.

'விரைவாக ஓட்டு!' என்கிறார் முதலாளி.

குன்றுகள் இருக்கிற பகுதி. வளைவுகள் திரிவுகள் அதிகம். செப்பனிடப்படாத பாதை. நான் இடைவிடாமல் அல்லாடி முன்னேறிச் செல்வதை அவர் பார்த்துக்கொண்டுதானே இருக்கிறார்? ஆனால் நாளை கல்யாணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து முடித்தாக வேண்டும். எனது பணிகளை மனதில் தொகுக்கும்போது எனக்கே மலைப்பு உண்டாகிறது என்றால், நாளை விஜயலட்சுமி கழுத்தில் தாலி கட்டப்போகிற அவருக்கு எவ்வளவு கெடுபிடிகள் அழுத்தும்? முக்கியமான பணிகளில் ஒன்றாக இருந்த காரியத்துக்கு இப்போது சென்றுகொண்டிருக்கிறோம். அது மங்களம் அக்காவை ஒதுக்கி நிறுத்துவது.

நிறைய சரிவுகளில் இறங்கினால் வருகிற ஒரு மறைப்பில்தான் அக்காவின் வீடு இருக்கிறது.

மரங்கள் மூடி, வெயில் விழாத அந்த வீட்டுக்குள் நுழைந்த உடன் முதலாளி மங்களத்தை இழுத்துப் போட்டுத் தாக்கினார். முஷ்டி மடக்கி, ஒரு பயில்வானை நேரிடுவது போல, கண்மூடித்தனமான குத்துகள். இதென்ன மல்யுத்தமா? மல்லாக்க விழுந்து கிடந்து கிரீச்சிட்டவளின் முகத்தின் மீது காலால் மிதித்ததில் அவளுடைய உதடு கிழிந்துவிட்டது. இரத்தமும் எச்சிலுமாக ஒழுகியது. அவள் சபதமாகக் கத்த முடியாமல் பேசுவது உறுமல் போலிருந்தது. அவளது அழகு குலைந்து அடிபட்ட நாய் போலத் தரையில் இழுபடுவது அவருக்கு ஆனந்தத்தை ஊட்டியிருக்க வேண்டும். தொடைகளைத் தட்டிக்கொண்டு சிட்டிகை போட்டார்.

மங்களம் அக்கா ஒரு விதவை.

மூலையில் ஒதுங்கி நின்று சிறுநீர் கழித்துவிட்ட அந்தப் பையன் அவளுடைய மகன்தான். மூன்றாவது படிக்கிறான். முதலாளிதான் படிக்க வைக்கிறார்.

அப்போது அவளது புருஷன் பேர் பெற்ற யோக்கியன். குடும்ப விலங்கு. அந்த மாதிரி பொண்டாட்டி, பாப்பாவை உருகினவன் யாரும் இருக்க முடியாது. அது தெய்வத்துக்குப் பொறுக்கவில்லை என்று பலரும் சொல்வார்கள். ஒருத்தன் எந்த மனக் கீறலும் இல்லாமல் சுத்த பத்தமாக வாழ்ந்து போய் விடுவதாவது? யாரோ டிக்கெட் போட கற்றுக்கொடுத்தார்கள். விளையாட்டாக இருந்தது. அதில் கொஞ்சம் காசு பார்த்த ஆவேசம், ஒரே வருடத்தில் அவனைச் சரித்தது. காலம் காலமாகச் சூதில் இருக்கக்கூடிய விதிகள் அவனைக் கரணம் போட வைத்தன. கடன்காரர்கள் கழுத்தைப் பிடிக்க நெருக்கும்போது இருந்த வேலையும் முடிந்துவிட்டிருந்தது. கட்டின மனைவி அவனைப் பொருட்படுத்தாமல் சீ என்றாள். சாப்பாடே இல்லாத போதும், முகமெல்லாம் வீங்கி மின்னிக்கொண்டிருந்தது. அப்புறம் ஒருநாள், இரண்டு நாள் அல்ல, பொழுதுக்கும் இரத்த வாந்தி எடுத்துக்கொண்டு விழுந்து கிடந்தான். ஒரு சுபதினத்தில் மாடுகள் இறங்கி ஊறுகிற அழுக்குக் குட்டையில் தண்ணீர் குடித்த பிறகு அந்த உயிருக்கு விடுதலை கிடைத்துவிட்டது.

பல நாட்களிலும் அப்படி போடு, போடு, போடு சோபிக்கவில்லை என்று முதலாளி என்னிடமே வருந்தியிருக்கிறார். குடி வெறியில் மொத்த துணிகளையும் அவிழ்த்து வீசி ஆடுவது அவரைப் பொறுத் தவரை ஆபாசம். அதற்குக் கலை நுட்பங்கள் இருக்கின்றன என்பார் ஆழ்ந்த சிந்தனையுடன்

ஒரு கேரள லாட்டரி டிக்கெட் புக்கிங் முதலாளி என்கிற முறையில் மங்களத்துக்கு அவர் உபகாரம் செய்ய விரும்பினார். நாளடைவில் அவளோடு படுத்துக்கொள்ளவும்தான். ஆயிரம் நோவுகளைச் சமாதானம் பண்ணிக்கொண்டு அலுப்பில் இருந்த மங்களத்துக்குச் சரணாகதி ஒரு தீர்வல்லவா? குப்பைத்தொட்டியில் கிடக்கிற அழுகின பழத்தை ஈக்கள் மொய்க்கிற பாங்கில் இருந்த ஆம்பிளை உபத்திரவங்கள் ஒழிந்தன. முக்கியமாக நோஞ்சான் குழந்தைக்குத் தேனும் பாலும் இறைச்சியும் ஊட்டினாள். அவள் முதலாளிக்காகத் தலை குளித்து, துளசி சூடி, அந்தியில் தீபம் பொருத்துவது அவ்வீட்டை ஒரு கோயில் போல எண்ணிக்கொள்ள வைத்தாலும், பையன் தூங்கிய பிறகு அவள் நடனமாட வேண்டும். அதற்கு முன் மிலிட்டரி ரம் இரண்டு லோட்டாக்கள். அவள் அந்த விதியை மட்டும் மீறிக்கொண்டு குடி பழகினாள். கலாரசனை மிக்க முதலாளி, அவள் அவ்வப்போது நடனம் தவறுவதை எச்சரிக்கை செய்துகொண்டிருந்தார்.

பல நாட்களிலும் அப்படி போடு, போடு, போடு சோபிக்கவில்லை என்று முதலாளி என்னிடமே வருந்தியிருக்கிறார். குடி வெறியில் மொத்த துணிகளையும் அவிழ்த்து வீசி ஆடுவது அவரைப் பொறுத்தவரை ஆபாசம். அதற்குக் கலை நுட்பங்கள் இருக்கின்றன என்பார் ஆழ்ந்த சிந்தனையுடன்.

எங்காவது வழி தவறிவிட்டோமா என்கிற ஒரு சந்தேகம் வந்தது.

லட்சுமியைப் பார்த்த அந்த நிமிடத்தில், அவர் மங்களத்தை ஒதுக்க முடிவுசெய்து காரணத்துக்குக் காத்திருந்தார்.

ஊர்ப் பெரிய மனிதர்கள் பலரும் வந்திருக்கிறார்கள்.

முதலாளி, மாதம் ஒரு தொகையைத் தருவதாக வாக்களித்தார்.

கூட்டு ரோடில் ஹார்ட்வேர்ஸ் வைத்திருக்கிற ராபர்ட் மட்டுமல்ல, இனிமேல் ஒரு ஆம்பளையும் இந்த வீட்டுக்கு வரக்கூடாது, முக்கிய நிபந்தனை அது. முதலாளி, தானும் வரமாட்டேன் என்பதையும் சொல்லிவிட்டார்.

'நான் எனது திருமணத்துக்கு அப்புறம் ஒரு குடும்பஸ்தனாக அடக்கம் காக்க விரும்புகிறேன்.'

புது மனைவியுடன் மந்திரிகளும் முந்திரிகளுமாக இருக்கிற பல சபைகளுக்கும் ஏறி இறங்கிப் பெருமிதம் கொள்ள அவரது மனம் துடிப்பதை எண்ணி வந்தவர்கள் யாவரும் கலங்கினார்கள்.

ஒருவர் மட்டும் மிகுந்த பணிவுடன் நொறுக்கப்பட்ட ராபர்ட்டின் கடைக்கு ஈடு கொடுக்க முடியுமா என்று தயக்கத்துடன் கேட்டார்.

ஒருவர் கல்யாணம் என்கிற புனித வழிக்குப் போகும்போது, அதில் அசூயைபட்டு, ஒரு பெண் கற்பு தவறியதைப் பெரிய மனிதர்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா என்பதாக முதலாளி குரல் கமறிக் கேட்டபோது ஒருவராலும் பதில் சொல்ல முடியவில்லை. அதனால் நொறுக்கப்பட்ட கடையை ராபர்ட் திறக்கிற வரை காத்திருப்போம். மீண்டும் அது நொறுக்கப்படும். மற்றவர்களுக்கும்கூட ஒரு எச்சரிக்கை விடுப்பது நமது கடமை அல்லவா?

பலசரக்குக் கடையில் பட்டியல் போட்டுக் கொடுத்து இருந்ததைத் தயாராக வைத்திருந்தார்கள்.

ஜீப்பில் ஏற்றிக்கொண்டோம். இந்த முறை முன்பைவிட சிரமமான நிலை. மேடுகளை மெதுவாகத்தான் ஏற முடியும். சாயந்திரம் கனிந்து வந்தது. வெகு தூரத்தில் தெரிகிற அந்தப் பெருமலையின் சிகரத்தில் சூரியன் இறங்கிப்போக காலெடுத்துவிட்டான். காற்றில் குளிர் கூடிக்கொண்டு வருகிறது.

முதலாளி ஒரு இடத்தில் ஜீப்பை நிறுத்தி முகம் கழுவிக்கொண்டார். என்னிடமிருக்கிற சீப்பை வாங்கித் தலையைச் சீவிக்கொண்டார்.

என்னிடம் பாட்டு போடச் சொல்லி சீழ்க்கை அடித்துக் கொண்டே வந்தார். அவ்வப்போது உற்சாக மிகுதியால் தோள்களை அசைத்துக் கொண்டார். என்ன சொல்லுவது, ஒரு கட்டத்தில் என்னை யேகூட பாசமாக அணைத்துக்கொண்டார். எனக்கும் சந்தோஷமாக வந்தது.

மளிகைப் பொருட்களை இறக்கிக்கொண்டிருந்தேன்.

லட்சுமியின் அம்மாவும் அம்மம்மாவும்தான் வந்து நின்றிருந்தார்கள். அது ஒரு வகையான பவ்யம். முதலாளியும் அதிகம் பேசிக்கொள்ள மாட்டார். சொல்ல என்ன இருக்கிறது? எல்லாம் மங்களத்தைச் சுற்றி வளைத்த கதைதான். கேட்பாரில்லை என்கிற ஒரு பின்னணி மட் டும் முதலாளிக்குப் போதும். இந்தக் குடும்பங்களின் கதையை விவரிக்கப் புகுந் தால் பொதுவாகவே அது கேட்ட கதைகளாகத் தானிருக்கும். வாழ்வில் தோற்றுப் போவது, இதில் என்ன புதுமையிருக்கிறது?

காரப் பணியாரமும் மாங்காய்த் தொக்கும் வைத்தார்கள்.

முதலாளி அதை வேண்டாம் என்பதாக மறுத்து, 'நாளை நான் தாலிக் கட்டப் போகிறவளை வரச்சொல்லுங்கள். பார்க்க வேண்டும்' என்றார்.

பணியாரம் அவ்வளவு பிரமாதமாக இருந்தது. நான் நிதானமாகக் கடித்து ருசித்து விழுங்கினேன். இருந்தாலும் உள்ளே செல்லுவது சிரமமாக இருந்தது.

லட்சுமியை முதியவள் அழைத்து வந்தாள்.

அவளது அம்மா எங்கேயோ பார்த்துக்கொண்டு நின்றாள்.

லட்சுமியைப் பற்றிச் சொல்ல வேண்டும் என்றால் எனக்கு மனசு வழுக்கும். ஐயா, அதற்கு இருப்பது தெய்வம் போல அழகு. அவள் நிற்பதைப் பார்க்க இந்தக் கண்கள் எல்லாம் போதாது. அவளது கண்களில் இருந்துவந்த கண்ணீர் பல்பு ஒளி மோதி மின்னிட்டது. அவள் அவருடைய முகத்தைப் பார்த்து நின்றாள். அவருக்குள் பொங்கிய அசட்டுச் சிரிப்பை மறைத்து கோணலாக நிற்பதில் இருந்து நிமிர்வில் நின்றார். 'என்ன?' என்பது போன்ற சண்டியப் பார்வை பார்த்தார். ஓர் அறை விடலாமா என்றும், அவளை இந்தக் கணமே மண்டி போட வைத்துவிடலாம் என்றும் அவருக்குள் ஓடியதை மறைக்கிற சிரமம் எனக்குப் புரிவதாக இருந்தது. குனிந்து ஒரு சாக் கைப் பிரித்து அதில் இருந்து ஒரு அச்சு வெல் லத்தை எடுத்து அவளுடைய வாயில் வலுக் கட்டாயமாகச் செருகினார்.

'சப்பிக்கொண்டிரு! காலையில் வருகிறேன்!'

அவர் அதற்கு மேல் எதையும் சொல்லவில்லை. அவளைத் தள்ளிவிட்டார். அவள் உள்ளே சென்று விட்டாள்.

நாளைய கல்யாண ஏற்பாடுகளைப் பற்றிக்கூட அவர்களிடம் சொல்ல வேண்டிய அவசியமில்லை. இங்கே வந்து இந்தக் குடும்பத்தாரை அள்ளிக் கொண்டு சென்றுவிட வேண்டியதுதான். உலகளந்த பெருமாள் கோயிலில் அத்தனை விஷயங்களும் வரிசையாகவும் மும்முரமாகவும் நடந்து முடியும். ஜங்க்ஷனில் இருக்கிற காதர் சார்தான் புகைப் படங்களும் வீடியோவும் எடுக்கப் போகிறார்.

நான் உள்ளே சென்று கை கழுவிவிட்டு வந்து வண்டியை எடுத்தேன்.

அவர் கொஞ்ச நேரம் எதையும் பேசாமல் வந்தார். தான் சிந்தனையில் இருந்தேன் என்பதை நிரூபிக்கும் விதமாக அவர் தொண்டையைக் கணைப்பது தெரியும். சும்மாவேனும் செத்துப்போன முதல் மனைவியை நினைப்பதாகச் சொன்னார். அடுத்ததாக, டாக்டர் படிப்பு படிப்பதற்காக ஜார்ஜியா அனுப்பபட்ட தனது மகனை எண்ணுவதாகச் சொன்னார். பொய்தான். அவனுக்கு நாளைக்கு நடக்கப்போகிற திருமணத்தைப் பற்றிச் சொல்ல வேண்டும். அது எப்படியென்று தெரியவில்லை என்று விசனப்பட்டார்.

கொஞ்சம் அமைதி.

அதிகமான இருள் பகுதியைக் கடந்துகொண்டிருந்தோம். இன்றைக்கு நிலா இல்லை. ஓரிரு பெருமூச்சுகளைக் கேட்டேன். அவருடைய முகம் சரியாகத் தெரியவில்லை.

'லட்சுமிக்கு உண்மையில் என் மீது கொள்ளை ஆசை!'



இதுதான் அவருடைய உண்மையான நெருக்கடி.

'பெண்களுக்கு மனதில் அவ்வளவு ஆசைகள் இருக்கும். வெட்கத்தால் அதை வெளியே சொல்ல மாட்டார்கள்!'

நான் இதில் தலையிட விரும்பவில்லை. சொல்லிக்கொள்ளட்டும்.

'மங்களம்கூட இதைக் கூறி இருக்கிறாள். அவள் பருவம் எய்தி மறைப்பில் உட்கார்ந்திருந்த போதே என் மீது கண் வைத்திருக்கிறாள். அன்பளிப்பு கொடுத்துவிட்டு நான்தான் கண்டுகொள்ளாமல் வந்துவிட்டிருக்கிறேன்!'

'ஓஹோ? அப்படியா? இது புதிய செய்தி!'

கண்டிப்பாக அவள் இதை ராபர்ட்டிடமும் கூறி இருக்கலாம். சிரிக்கிற குரல் கேட்டது.

'வாயில் வைத்துவிட்டு வந்தேன் இல்லையா? அந்த அச்சு வெல்லத்தை என்னை நினைத்தவாறு சப்பிக்கொண்டிருப்பாள்!'

சொன்னேனே, இருள், மேலும் இருள்.

லட்சுமியின் வாயில் இருந்த அச்சு வெல்லத்தை நான் இப்போது வாயில் வைத்து உருட்டிக் கொண்டிருப்பதை அவரால் பார்க்க முடியாது.



## மர்மங்கள்...

சில ஆண்டுகளுக்குப் பின்னர் ஒரு சிலர் தப்பி வந்தனர். அவர்கள் மூலமாக சின்னம்மை போன்ற தொற்று நோய்கள் பரவின. நோய் எதிர்ப்புத் திறன் கொண்டிராத தீவு வாசிகள் சாவடைந்தனர் என இந்தத் தீவின் பழங்குடிகள் குறித்துப் பல கதைகள் இருக்கின்றன.

இப்படியாக ஏராளம் மர்மங்க ளுடன் இருக்கிறது ஈஸ்டர் தீவு. அங்குள்ள பழங்குடியினர் இல்லாதுபோனாலும் மற்றவர்களுக்கு அச்சம் தரும் உணர்வைத் தொடர்ந்து ஊட்டி வருகின்றது.

# மனச்சிதைவு
# மனங்கொள்ளவேண்டிய நோய்

**பா.ஆனந்த்**

"ஒரு மன நோயாளிக்கான மிகப் பெரிய சவால் அவருக்கான சரியான வாழ்க்கையைக் கண்டடைவதுதான். ஆனால், உண்மையில் அதுதான் எல்லா மனிதர்களுக்குமான சவாலும் கூட! நான் இன்னும் என் மனநிலை பாதிப்பிலிருந்து மீளவில்லை. நான் முழுமையாக மீளவும் மாட்டேன். ஆனால், இந்த யதார்த்ததுக்குள் என் வாழ்வை நான் கண்டடைந்து கொண்டது மட்டுமே எனது அதிர்ஷ்டம்."

மனச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்டு மீண்ட ஒருவரின் பதிவு இது. எலின் ஆர் சாக்ஸ் என்பது அவரது பெயர். இப்போதும் அவர் தொடர் சிகிச்சையில்தான் இருக்கிறார்.

இவ்வளவு தத்துவார்த்தமான சிந்தனையைக்கூட மனச்சிதைவு நோயாளியால் வெளிப்படுத்த முடியும். அதனால், மனச்சிதைவாலோ அல்லது வேறு மனநோயாலோ களங்கப்படுத்தி அவர்களை சமூகப் புறக்கணிப்புக்கு உள்ளாக்காதீர்கள். அவர்களின் வேதனை, நகைப்பு, நம்பிக்கை, அனுபவங்கள், அழுகை, கோபம் என எல்லாமே மதிக்கத்தக்கவையே.

வைகாசி (மே) 24 அன்று பன்னாட்டு மனச்சிதைவு நாள் கடைபிடிக்கப்படும் நிலையில், அந்நோய் பற்றி பல கோணத்திலும் ஒரு புரிதலை ஏற்படுத்துவதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

இலங்கையில் மற்றைய மருத்துவர்களுடன் ஒப்பிட்டால் மனநல மருத்துவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவே. இந்தச் சூழலில் மனச்சிதைவு நோயாளிகளுக்கான சவால்கள் எண்ணிலடங்காதது. மனச்சிதைவு நோயானது உலகம் முழுவதும் 300இல் ஒருவருக்கு ஏற்படுகிறது. மற்ற மனநோய்களைப் போல் இது பொதுவானது அல்ல. இந்த நோய் பதின்பருவத்தின் பின் பகுதியில் அல்லது 20களில் தொடங்குகிறது. பெண்களைவிட ஆண்களுக்கு இந்த நோய் இன்னும் இளம் வயதில் ஏற்படுகிறது. சாதாரண மன நோயையே இயல்பானதாக ஏற்றுக்கொள்ளும் சூழல் இல்லாத நம் சமூகத்தில் மனச்சிதைவு நோய் பற்றி இன்னமும்கூட புரிதல் இல்லை என்பது வருந்தத்தக்கது.

**மனச்சிதைவு நோய் என்றால் என்ன?**

மனச்சிதைவு நோயாளிக்கு இந்த சமூகம் சில அபத்தமான விளக்கங்களை வைத்திருக்கிறது. மனச்சிதைவு நோயாளி என்றால் சைக்கோ கில்லர், சீரியல் கில்லர், பெண்களை அல்லது குழந்தைகளை கொலை செய்து ரசிக்கும் நபர், சக மனிதர்களை தாக்கி வன்முறையில் ஈடுபடும் நபர், பெற்றோரின் தவறான வளர்ப்பு, மோசமான சமூகம் மனச்சிதைவை ஏற்படுத்தும் என்ற சித்தரிப்புகளும் உண்டு. ஆனால் இதில் எதுவுமே உண்மையில்லை.

எல்லா நோய் போல் மனச்சிதைவுக்கும் சாதி, மதம், இனம், மொழி, பாலினம், தேச எல்லை என்ற பேதமும் இல்லை. இந்த நோய் ஏற்படுவதற்கான காரணம் இதுதான் என்று உறுதிபட எந்த ஆராய்ச்சியாளரும் இதுவரை வரையறுத்துக் கூறியதில்லை. சில நேரங்களில் மரபணு கோளாறுகள், சில நேரங்களில் சுற்றுப்புற அழுத்தங்கள், சில நேரங்களில் பிற மனநோய்கள் என எது வேண்டுமானாலும் மனச்சிதைவுக்கு அடித்தளமாக அமையலாம் என்றே கூறுகின்றனர். அளவுக்கு அதிகமான கானபிஸ் எனப்படும் போதை வஸ்துகளைப் பயன்படுத்துவதால் மனச்சிதைவு நோய் ஏற்படலாம் என்ற காரணியை மட்டும் ஆராய்ச்சியாளர்கள் உறுதிபடுத்தியுள்ளனர்.

**அறிகுறிகள் என்னென்ன?**

மனச்சிதைவால் பாதிக்கப்பட்ட நபர் இல்லாத ஒன்றை இருப்பதாக உறுதிபட நம்புவார். சில நேரங்களில் யாரோ தன்னுடன் பேசுவது போல், தன்னை இயக்குவதுபோல் நம்புவார். அவரது கண்களுக்கு சில உருவங்கள் தெரியலாம். சில குறிப்பிட வாசனையோ, துர்நாற்றமோ அவரை ஆட்கொண்டிருப்பதாக உணரலாம். என் மேல் புழுக்கள் ஊர்கின்றன, என் சாப்பாட்டில் விஷம் உள்ளது என்று விந்தையான வாதங்களைச் சொல்லலாம். அவர்களது சிந்தனையில் சீர் இருக்காது. பேச்சும் அர்த்தமற்றதாக, முரணானதாக மாறியிருக்கும். எந்த இலக்கும் இல்லாதவராக தென்படுவார்.




> **மனச்சிதைவால் பாதிக்கப்பட்ட நபர் இல்லாத ஒன்றை இருப்பதாக உறுதிபட நம்புவார். சில நேரங்களில் யாரோ தன்னுடன் பேசுவது போல், தன்னை இயக்குவதுபோல் நம்புவார். அவரது கண்களுக்கு சில உருவங்கள் தெரியலாம். சில குறிப்பிட வாசனையோ, துர்நாற்றமோ அவரை ஆட்கொண்டிருப்பதாக உணரலாம்.**

முந்தைய நாள் வரை வேலைக்கு சென்று வந்த இளைஞன் திடீரென்று அறைக்குள் பூட்டிக்கொண்டு வெறித்த பார்வையோடு மணிக்கணக்காக மவுனிக்கலாம். அனைவரிடமும் பேச்சை நிறுத்திவிடலாம். தனக்குத்தானே ஏதோ புன்முறுவல், சிரிப்பு, பேச்சு என இருக்கலாம். தனது உணர்வுகளை வெளிப்படுத்துவதையும் குறைக்கலாம். சமூகத்திலிருந்து ஒதுங்கி, சுய சுகாதாரத்தைக்கூட தவிர்த்து தென்படலாம். வாரக்கணக்கில் குளிக்க மறுக்கலாம். இவையெல்லாம் உங்கள் உறவுகளுக்கோ, நட்புகளுக்கோ ஏற்பட்டால் இவை மனச்சிதைவின் அறிகுறிகள். பேய் பிடித்துவிட்டதாகக் கருதாமல் உடனடியாக மனநல மருத்துவரை அணுகுங்கள். மனச்சிதைவு நோய்க்கு சிறந்த சிகிச்சை 'Early intervention' அதாவது தொடக்கநிலையிலேயே மருந்துகளைக் கொடுத்தல்.

தற்போது, 'கவுன்சிலிங்' எனும் மனவியல் சிகிச்சை முறை மிகவும் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டு உள்ளது. மனச்சிதைவு நோய்க்கு கவுன்சிலிங் உதவாது. தன்னிலை உணராது, உண்மையிலிருந்தும் இயல்பிலிருந்தும் எண்ண ஓட்டம் பிறழ்ந்த நிலையே மனச்சிதைவு. இங்கே உன் பிரச்சினையை, சூழலை, உன் செயல்களை, அவற்றைத் தூண்டும் சிந்தனை முறையைப் புரிய வைக்கிறேன் என்று 'கவுன்சிலிங்' நடத்துதல் உதவாது. மனச்சிதைவுக்கு மருந்து அவசியம். அறிவியல் மருத்துவம் அவ்வப்போது புதுவகை மருந்துகளை உருவாக்கிக் கொண்டுதான் இருக்கிறது.

மனச்சிதைவால் பாதிக்கப்பட்டோரில் ஒரு சிலருக்கு மட்டும் வாழ்வில் பல்வேறு காலகட்டங்களில் திரும்பத் திரும்ப தாக்கம் அதிகரிக்கலாம். மோசமானதாகவும் இருக்கலாம். மற்றபடி மருந்துகளை விடாமல் உட்கொண்டுவந்தால் குடும்பமும் சமூகமும் ஆதரவுக்கரம் நீட்டினால் நிச்சயமாக இயல்புக்குள் இருக்கலாம்.

**அகன்ற சேவை தேவை...**

"உலகளவில் மனச்சிதைவு நோயால் பாதிக்கப்பட்ட பெரும்பாலானோருக்கு முறையாக சிகிச்சை கிடைப்பதில்லை. மனநல மருத்துவமனைகளில் உள்நோயாளிகளாக இருப்போரில் 50% மக்களுக்கு மனச்சிதைவு இருக்கிறது. 31.3% மனச்சிதைவு நோயாளிகளுக்கே மனநல சிறப்பு சிகிச்சை முறையாகக் கிடைக்கிறது. மனநல சேவைகளுக்கான நிதி மேலாண்மையிலும் சிக்கல் இருக்கிறது. நோயாளிகளுக்கு செலவிடுவதை முறைமைப்படுத்த வேண்டியுள்ளது. பல மனநல மருத்துவமனைகள், மன நோயாளிகளுக்கு மனநோயாளிகளின் தேவையை பூர்த்தி செய்வதாக இல்லை. சில இடங்களில் மனித உரிமைகள் மீறலும் இருக்கின்றது. மனநோயாளிகளுக்கான சிகிச்சையை மனநல மருத்துவமனைகளில் இருந்து சமுதாயம் சார்ந்ததாக மாற்றும் முயற்சிகள் தேவை. தொடக்க சுகாதார நிலையங்கள் இருப்பதுபோல் சமுதாய மனநல சேவைக் கூடங்கள் வேண்டும்.

இன்னும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால் மனநல சேவைகளை தொடக்க சுகாதார நிலையங்களிலேயே ஒருங்கிணைக்க வேண்டும். மனநலன் பாதிக்கப்பட்டோருக்கான பகல் நேர பராமரிப்பு நிலையங்கள் வேண்டும், வீடு தேடிச் சென்று சேவைகளை வழங்கும் அளவுக்கு முன்னேற்றம் வர வேண்டும். மனச்சி தைவால் பாதிக்கப்பட்ட நபர், அவருடைய குடும்ப உறுப்பினர்களுக்கு என அகன்ற சேவை வேண்டும்" என்று உலக சுகாதார அமைப்பு கூறுகின்றது.

**மருத்துவரின் ஆலோசனை...**

மனநல மருத்துவர்களை அணுகுவதிலும் மக்களிடம் முன்பை விடவும் இப்போது தயக்கம் குறைந்து உள்ளது. இருந்தாலும் அதில் இன்னும் அதிகளவில் வளர்ச்சி ஏற்படவேண்டியுள்ளது. மருந்து என்

# இற்றை இலங்கைக் காட்சியும் அற்றை கந்தபுராணக் காட்சியும்

மருத்துவர் சி. யமுனாநந்தா



கந்தபுராணக் காட்சிகளில் பெரும்பாலானவை இற்றை இலங்கையின் அற்றைத் திங்கள்களில் நிகழ்ந்தவை. சூரனை வதஞ்செய்ய வீரவாகுதேவர் வட இலங்கையில் குலிசம் மூலம் வந்து கால்பதித்தபோது இலங்கை கடலுக்குள் அமிழ்ந்து எழுந்தது என கந்தபுராணத்தில் கூறப்படுகின்றது. மேலும் கந்தபுராணத்தில் அசுர காண்டத்தில் உள்ள காட்சிகள் தற்போதைய இலங்கையில் நிகழ்ந்த காட்சிகளுக்கு ஒப்பானவை. தற்போது இலங்கை பொருளாதாரக் கடனில் அமிழ்ந்துள்ளது.

அன்று சூரன் தான் பெற்ற வரத்தால் தேவர்கள் மூலம் கடலில் நகரங்கள் இரண்டினைத் தனது சகோதரர்கள் இருவருக்காக அமைத்தான்.

**ஆசறு கடலினூடே யயுதமோ ரெட்டாயுள்ள**
**யோசனை யெல்லை முன்னோ னுறுநகராகக் கோலிக்**
**காசினி வரை கடம் மாற்கது மெனத் தூர்துமிக்க**
**பாசறை கொண்டேயொப்ப வணித்தலம் படுத்துப்பின்றை**
**(கந்தபுராண அசுரகாண்டம், நகர்செய் படலம் - பாடல் 3)**

அவ்வாறே இன்று இலங்கையில் ராஜபக்சாக்களுக்குச் சீனா கடல்சார் நகரங்களாக அம்பாந்தோட்டையிலும், கொழும்பிலும் துறைமுக நகரங்களை அமைத்துக் கொடுத்தது. அன்று சூரனுக்கு தேவதச்சர்கள் வீதிகள் அமைத்துக் கொடுத்தனர்.

**நாற்பெரு வாயி லூடு மேருவே நண்ணிற் றென்ன**
**மாற்பெருங் கோபுரங்கள் மணி வெயிலெறிப்ப நல்கி**
**நூற்படு மொழுக்க நாடி நூறி யோசனை யொன்றாகப்**
**பாற்படு மாட வீதி பற்பல அமைத்து மன்றோ.**
**(நகர்செய்படலம் - 5)**

சூரனுக்கு மாளிகைகள் அமைத்துக் கொடுத்தனர்.

**மாளிகை தோறுந் தெற்றி மண்டப மணிசேர் முன்றில்**
**கோளரி தயங்கு பொற்பிற் கோபுரங் குன்ற மம்பொற்**
**சூளிகை அரங்க மன்றஞ் சுடருமேற் நலங்கள் குய**
**சாளரஞ் சோலை வாவி தனித்தனி யாகத் தந்து.**
**(நகர்செய்படலம் - 7)**
**நாடரும் விசும்புறை நாரி மாரெலா**
**மாடலை யியற்றிடு மரங்க மண்டபம்**
**பாடலின் முறை பயில் பைம் பொன்மண்டபம்**
**மாடக யாழ்முரல் வயிர மண்டபம்.**
**(நகர்செய்படலம் -11)**

தேவதச்சர்கள் நகரங்களையும், மாளிகைகளையும் வீதிகளையும், கோபுரங்களையும் அமைத்துக் கொடுத்தனர். அவ்வாறே இற்றைச் சூரனுக்கும் சீனர்கள் மாளிகைகள், வீதிகள், கோபுரங்களை அமைத்துக் கொடுத்தனர்.

இன்று மிகவும் உயர்ந்த கோபுரமாக கொழும்பிலுள்ள தாமரைக் கோபுரத்தையும், சீனர்கள் அமைத்துக் கொடுத்தனர். அன்றும் சூரனுக்கு தேவதச்சர்கள் தாமரை முத்துக்களால் மண்டபங்களை அமைத்துக் கொடுத்தனர்.

**மாமணி யொளிர் நகு வசந்த மண்டபங்**
**காமரு பவளமகள் கவின் கொண் மண்டப**
**பே மரு மரகதத்தியன்ற மண்டபந்**
**தாமரை யித்திடு தான மண்டபம்.**

கந்தபுராணத்தில் தேவ அரசனான இந்திரன் தப்பி ஓடியது போலவே, இந்திரன் கரந்துரைப் படலத்தில் உள்ளவாறே இன்று இற்றைச் சூரனும் கரந்துறைந்தான் திருகோணமலையில்.

அரசனும் ஆண்டியவான். செல்வம் நிலையில்லாதது அது தீயினாலும், திருட்டாலும் அழியும். இதற்கு கந்தபுராணம் ஊழ்வினையே காரணம் என விளக்குகின்றது.

**வறியவர் செல்வராவர் செல்வர் பின் வறியவராவர்**
**சிறியவ ருயர்ந்தோ ராவ ருயர்துளோர் சிறியராவர்**
**முறை முறை நிகழு மீது முன்னையூழ்வினையே கண்டா**
**யெறிகதிர் வழங்கு ஞாலத் தியற்கையு மினைய நன்றோ**
**(இந்திரன் கரந்துறைப் படலம் பாடல் - 32)**

அற்றைக் காட்சிகளும் இற்றைக் காட்சிகளும் இலங்கையில் அசுர ஊழ்வினைகளை எடுத்து இயம்புகின்றன.

---

# மனச்சிதைவு...

றாலே அது தூக்க மாத்திரை, அதற்கு அடிமையாகிவிடுவோம், வாழ்க்கை முழுக்க எடுத்துக்கொள்ள வேண்டும் என்றெல்லாம் தவறான அச்சங்கள் மக்களிடையே ஒரு மூடநம்பிக்கையாகப் பரவியிருக்கின் றன. அடிப்படை அறிவோ நேர் மையோ இல்லாமல் சமுக வலத் தளங்களில் இது போன்ற அபத்தங்கள் பரப்பப்படுவதால் சிகிச்சைக்கு வந்தாலும், `மருந்து தேவையா’ எனும் தயக்கம் மக்களிடம் இருக்கிறது.

தனியார் மனநல மருத்துவர்கள் அதிகம் கட்டணம் வாங்குகிறார்கள், தேவையில்லாமல் பரிசோதனை, படுக்கையில் அனுமதிப்பு என்றெல்லாம் அதிகச் செலவு வைக்கிறார்கள் எனும் கருத்தும் இங்கே அதிகம் நிலவுகிறது. குறைவான கட்டணம், நேர்மையான அணுகுமுறை உள்ள மருத்துவர்கள் இன்னும் இங்கே இருக்கிறார்கள், இது குறித்தும் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல் அவசியம். அரசு மருத்துவமனையின் மனநலப் பிரிவு, தனியார் மனநல மருத்துவமனைகளில் கிடைக்கும் அதே சிகிச்சை தருகிறது என்பதை மக்களிடம் தெளிவாகப் புரிய வைக்க வேண்டும்.

தொடக்க கட்டங்களில் மனச்சிதைவால் பாதிக்கப்பட்டவர்கள் கோபத்துடன் இருக்கலாம், அவர்களிடம் வாதம் செய்வது உதவாது. அவர்கள் சிகிச்சைக்கு மறுக்கலாம், அந்தக் கட்டத்தில் வற்புறுத்துவது அவர்களது உரிமை மீறலோ, மனிதாபிமானமற்ற காரியமோ அல்ல- அது அவர்கள் விரைவில் தன்னிலை உணர்ந்து வாழ்வில் இணைய உதவும் கருணையும் அன்பும் மிகுந்த செயலாகும்.

பாதிப்பின் தீவிரம் குறைந்து அறிகுறிகள் மறையும்போது, 'எல்லாம் சரியாகிடுச்சே' என்று மருந்துகளை மருத்துவர் அறிவுரை இன்றி நிறுத்துவது, இப்ப ஒரு கல்யாணம் பண்ணி வச்சுடலாம் என்று சோதிடம் பார்ப்பது போன்றவை முழுதாக குணமாகாத நோய் மீண்டும் வெளிப்பட வைக்கும். விட்டுவிட்டு மருத்துவம் பார்ப்பது குணமாகக்கூடிய நபரையும் நெடுங்கால நோயாளியாக மாற்றிவிடும்'' என்று கூறுகிறார் சென்னையைச் சேர்ந்த மனநல மருத்துவர் ருத்ரன்.

மறுவாழ்வை உறுதி செய்வோம்:

மனச்சிதைவு ஒரு தீவிர மனநோய், நாட்பட அதன் நிலை மோசமாகி வரும் என்பதால் தொடக்கத்திலேயே சிகிச்சை தந்தால் நல்ல பயன்கள் பார்க்கலாம். இது குறித்து மிகவும் தெளிவான தொடர்ந்த விழிப்புணர்வுப் பரப்புரைகள்தான் முதல் தேவை. மனச்சிதைவு நோயைப் பொறுத்த வரையில், அதன் அறிகுறிகளின் தீவிரம் மட்டுப்படும்போது, சமூகத்தில் மீண்டும் இவர்கள் இணையவும் பணியாற்றவும் மறுவாழ்வுப் பயிற்சிகள் அவசியம். மறு வாழ்வு திட்டம் ஆலோசனை, சமூகத்திறன் பயிற்சி, தொழிற்பயிச்சி, தொடர்புதிறன் பயிற்சி என எல்லாவற்றையும் உள்ளடக்கியதாக அது அமைய வேண்டும்.

மனச்சிதைவு சிகிச்சையில் மிக முக்கியமான பணிகளில் ஒன்று அவர்களுக்கான மறுவாழ்வை உறுதி செய்தல். சில தனியார் நிறுவனங்கள் இதில் ஈடுபட்டிருந்தாலும், அரசு மருத்துவமனைகளிலும் இது இன்னும் அதிகம் செயல்பட வேண்டும். இது சவால்மிக்க, அலுப்பூட்டும் பணி என்பதால் அர்ப்பணிப்புடன் செய்ய வேண்டும். அப்படியான சேவையை அரசே வழங்கி மனநோயாளிகளின் மறுவாழ்வுக்கு ஏற்பாடு செய்யும்போது இந்நோயாளிகள் மீதான சமூகப் பார்வையும் மாறும்.



ஐ. கிருத்திகா

# நிர்வாணம்

தங்கக்கொப்புளம் போலச் சுடர் அசைவற்று நின்றிருந்தது. கையிலோ காலிலோ மினுமினுவென்று மினுங்குமே.. அதுபோல ஒன்றல்ல, பல கொப்புளங்கள் கருவறைக்குள். விளக்குகளில் குண்டுமணி போலப் பொன் கொப்புளங்கள் மினுங்கியதைப் பார்த்துக்கொண்டேயிருந்ததில் கண்ணெதிரே வட்ட வட்டப் பொன்துகள்கள் பறப்பது போன்ற உணர்வு.

பக்கவாட்டு வாசற்படியில் புறாக்கள் தத்தின. இளஞ்சிவப்பு நிறக் கால்கள் மெலிந்த கீரைத் தண்டுகளை நினைவூட்டின. கற்கூரை இடப்பட்ட உட்பிரகாரம் குளிர்ந்து கிடந்தது. படிக்கட்டுகள் ஈரமாயிருந்தன. யாரோ அலம்பிவிட்டிருக்கிறார்கள். ஆங்காங்கே ஒரு சேரளவு தண்ணீர் தேங்கியிருந்தது.

கன்னம் வைத்துப் படுத்துக்கொண்டால் சில்லென்றிருக்கும். ஆசையாயிருந்தது. கன்னம் என்ன கன்னம்... முழு உடம்பும் தரையில் படுமாறு படுத்துக்கொள்ளலாம். முலைக்காம்புகள் அழுந்த, வயிறு அழுந்த, அல்குல் அழுந்த, வெற்றுடம்புடன் கைகள் விரித்துப் படுத்துக்கொண்டால் உள்ளே எரிவது குளிர்ந்துவிடும். புறாக்கள் கழுத்து, முதுகு, பிருஷ்டங்கள் மீதேறித் தத்தும்போது கண்கள் சொருகிவிடும்.

'அங்க என்ன பார்வை... தீபாராதனையப் பாரு...'

அத்தை இடித்தபோது சுள்ளென்றிருந்தது. ஐந்தடுக்கு தீபாராதனை. மூன்று சுழற்றுகள் இடமிருந்து வலமும், வலமிருந்து இடமுமாகச் சுழற்றி மேலும் கீழுமாய் ஒருமுறை தூக்கிக்காட்டிய போது தீபங்கள் அசைந்தாடின. மித்ரா கன்னத்தில் போட்டுக்கொண்டாள்.

'பார்த்தால் பார்க்கும் இடத்தில் நினைப்பு நிலைத்திருக்க வேண்டும். அது தவறுதல் இயல்பான நிகழ்வாக, அறியாமல் கைதவறி விழும் பாத்திரம் போல, அவ்வளவு இலகுவாக எப்படி நிகழ்கிறது? ஒரு பூ மலர்வது போல அறிந்துகொள்ள முடியாத கண்கட்டு வித்தையாகவே அது உள்ளது.'

புறாக்கள் குனுகின. குதுக்குதுக்கென அதுகள் தொண்டைக்குழிக்குள்ளிருந்து எழுப்பிய சத்தத்தில் கோவிலுக்கான பூரணத்துவத்தை அவ்விடம் அடைந்துவிட்டது போலத் தோன்றிற்று. கல் தூண்களில் எண்ணெய்ப் பளபளப்பு. எண்ணெயின் கசண்டு வாசம் குப்பென்று அடித்தது.

அத்தை பயபக்தியோடு விபூதி வாங்கிக்கொண்டாள். மித்ரா கைநீட்ட, அர்ச்சகர் இணுக்கு எடுத்துப் போட்டார். வியர்த்த உடலில் நீர்க்கொப் புளங்கள். மார்புகள் மதகின் ஷட்டர் போல பலகைப் பலகையாய்... பெயர்த்தெடுத்துக்கொள்ளலாம் போல... வயிறு படிந்து கிடந்தது. மூச்சை அடக்கி மந்திரம் சொல்லி உடம்புத் தங்கப்பாளமாயிருக்க வேண்டும்.

'சாமிக்கு நீலப்பட்டு வஸ்திரம் நல்லாயிருக்குல்ல?'

அப்போதுதான் கவனித்தாள். ஒன்றை ஊன்றி கவனிக்கும்போதே நிலைகொள்ளாத தவிப்பு. வயிற்றில் தடுப்புக்கம்பி சில்லிட்டது. அதில் அழுந்தப் பதித்துக்கொண்டு கண்கள் மூடி கும்பிட்டாள்.

'பன்னண்டு மணிக்கு விடங்கர் அபிஷேகம் ...'

யாரோ யாரிடமோ சொல்லிக்கொண்டிருந்தார்கள்.

ஒரு மௌனப்புள்ளியில் உறைந்து கிடக்க மித்ரா பிரயத்தனப்பட்டாள். உட்கதவு திறந்தே கிடக்கிறது. அதைப் பூட்டிக்கொள்ள ஆவலாதியிருந்தும் ஏனோ வாய்க்கப் பெறவேயில்லை. ஓரிருமுறை சாத்தியப்பட்டிருக்கிறது. ஆனால் காற்றுக்குத் திறக்கும் கதவாய் அது இருந்து தொலைத்ததில் பட்டென உடனேயே விரியத் திறந்துகொண்டது.

'இருபதுல கேட்டப்ப முடியாதுன்னுட்ட. நெறையப் படிக்கணும், இப்ப வேணாம்னு நீ சொன்னதுல நாங்களும் சரின்னு ஒத்துக்கிட்டோம். வீட்ல நீதான் புத்திசாலி. கற்பூர புத்தி. அதனால அப்பாவுக்கு ஏகப்பெருமை. படிக்கட்டும்னு பெருந்தன்மையா ஒத்துக்கிட்டாரு.'

பிரகாரம் சுட்டது. நடுவே கோடாக கார்பெட் விரித்ததுபோல வெள்ளை பெயிண்ட் அடித்திருந்தார்கள். அதில் சூடு குறைவாக இருந்தது.

'இலேசான சூடு. குளிர்ந்த சூடு... இப்படித்தான் வித்தியாசமா ஏதாவது தோனும்.'

மித்ரா தனக்குள் முணுமுணுத்துக்கொண்டாள். விடக்கூடாது என்றெண்ணும்போதே விடாப்பிடியாக வந்தமரும் எண்ணம்.

'தொப்புளும் முலைகளும் தரையில் அழுந்தி சிவந்து போயினவா...'

களுக்கென்று சிரித்துவிட்டாள்.

'தோடுடைய செவியன்...'

அத்தை பாடுவதை நிறுத்திவிட்டு நெற்றியைச் சுருக்கிப் பார்த்தாள். மித்ரா அவசரமாய் காதில் வழிந்த முடிக்கற்றையை ஆள்காட்டி விரலால் காதுக்குப் பின்புறம் ஒதுக்கிவிட்டுக்கொண்டாள். விபூதி, குங்குமம் உள்ளங்கை குழிக்குள் சங்கமமாயிருந்தன.

'சாமி முன்னாடி எதையும் நினைக்கக்கூடாது. சாமியத்தான் நினைக்கணும்.'

கோவில் கோபுர வாசலில் கால் வைத்தபோதே அந்த எண்ணம் உள்நுழைந்துவிட்டிருந்தது. கதை முடிந்தது என்று நினைத்துக் கொண்டாள்.

லிங்கத்தைப் பார்த்ததுமே தலையை உலுக்கிக்கொண்டாள். கூப்பிய கரங்கள் எதிரே எரிந்த தீபத்தின் ஒளியில் செந்தாமரை மலரின் இதழ்கள் போலக் கூம்பியிருந்தன.

'ஆண்குறி இரண்டும் அயில்வேல் காக்க... இங்க வந்து எதுக்கு இந்தப் பாட்டு... லிங்கத்தைப் பாத்தாப்ல உடனே இதைத்தான் பாடணும்னு தோனுமா... லூசு...'

கடிந்த மனதை அடக்கி, 'பெற்ற தாய்தனை மகன் மறந்தாலும், பிள்ளையைப் பெறும் தாய் மறந்தாலும்...' என ஸ்பஷ்டமாகச் சொன்னாள். கொஞ்சம் ஆசுவாசமாய் உணர முடிந்தது.

மித்ரா கோபுர நிழலில் ஒதுங்கி நின்றாள்.

'அதிகமா படிச்சிட்டா கிறுக்கு புடிச்சிடும். ஞானக்கிறுக்கு. யார் கூடவும் ஒட்டாம தண்ணியில விழுந்த எண்ணெயாட்டம் அதுபாட்டுக்கு தனிச்சுக் கெடக்கும்.'

அண்ணன் அடிக்கடி சொல்லிக்கொண்டேயிருப்பான். படிப்பு.. அதுவொரு போதை. அடுத்தது, அடுத்தது என்று ஆவலாய்ப் பரந்த மனசுக்கு அடங்கத் தெரியாத ஆர்வம்.

'வயசாயிட்டே வருது. அது இந்தப் பொண்ணுக்குப் புரிய மாட்டேங்குது. கல்யாணமாகியிருந்தா இந்நேரத்துக்கு ரெண்டு கொழந்தைங்களாயிருக்கும்.'

கன்னத்தில் கைவைத்து முழங்கையை இன்னொரு கையால் தாங்கிப் பிடித்தபடி அம்மா முன்பெல்லாம் யாரிடமாவது சொல்லிக் கொண்டிருப்பாள்.

'ஏண்டி நின்னுட்ட?'

அத்தை திரும்பி நின்று கேட்டாள்.

'சும்மாதான். வர்றேன்.'

மித்ரா சேர்ந்துகொண்டாள். பிரகாரத்திலிருந்த நெல்லிமரம் இலைகள் உதிர நின்றிருந்தது. முழு நெல்லிக்காய்கள் பறிக்கப்படாமல் பழுத்துத் தொங்கின. ராகுகால துர்க்கையிடம் சரியான கூட்டம். பெண்கள் தலைக்குக் குளித்து ஈரக்கூந்தலைத் தளர்வாகப் பின்னியிருந்தனர். அர்ச்சகருக்கு இரண்டு கை போதவில்லை. அர்ச்சனைத் தட்டுகள் நிரம்பி வழிந்தன.

'நம்ம ராகவன்டி. உங்கூட படிச்சவன். அடையாளம் தெரியலையா?'

மித்ரா அப்போதுதான் கவனித்தாள். காதோரம் இலேசாக நரையோடி உருவத்தில் சற்று முதிர்வைக் காட்ட, அவனும் பார்த்துவிட்டு முகம் சுருக்கி உடனே புன்னகைத்தான்.

'மித்ரா....'

அவசரமாய் அருகிலிருந்தவரிடம் தட்டுகளை ஒப்படைத்துவிட்டு

# நிர்வாணம்

கூட்டத்தை விலக்கி அருகில் வந்தான்.

'நல்லாயிருக்கியா?'

பதினைந்தில் இருந்த தயக்கம் இப்போது இல்லை. படிப்பு தந்த நிமிர்வு, பதவி தந்த கௌரவ அடையாளம் மித்ராவை இயல்பாகப் புன்னகைக்க வைத்தது. அவன் குழைந்து நின்றிருந்தான்.

'நீ நல்லாப் படிக்கிற, அழகாயிருக்க... ஒன்ன எனக்கு ரொம்பப் புடிச்சிருக்கு.'

பத்தாம் வகுப்பின் ஒரு மதிய உணவு இடைவேளையில் அவன் குழறியபடி சொன்னது நினைவுக்கு வந்தது. அதன்பிறகு இரகசியமாய் பார்த்துப் புன்னகைப்பான். சிரிப்பதா, வேண்டாமா என்ற குழப்பதோடு மித்ரா நின்றிருப்பாள்.

'நீ முட்டைகூட சாப்பிட மாட்டியேடா? இந்த முட்டைய எடுத்துட்டுப் போயி என்னடா பண்ணுவ?' என்று அவன் பேப்பரைக் காட்டி வாத்தியார் கிண்டல் செய்வார்.

பால் முகம் சுண்ட அவன் கண்கள் மித்ராவைத் தேடும். பத்தாம் வகுப்பில் முக்கி, முனகி பாசாகி விட்டவனை அவன் அப்பா வெளியூரிலிருந்த வேத பாடசாலையில் சேர்த்துவிட்டார். அதன்பிறகு அவனைப் பார்க்கவில்லை.

'பையன் ஒன்னு, பொண்ணு ஒன்னு. ரெண்டு பேரும் என்னை மாதிரியில்ல. ரொம்ப நல்லாப் படிக்கிறா.'

அவசரமாய்ச் சொன்னான். அவனுடைய படர்ந்த வெண்மார்பில் அடர்ந்திருந்த முடிச்சுருளைக் கண்டபோது மித்ராவுக்கு என்னவோ போலிருந்தது. வயிறு குழைந்து ஒருமாதிரி செய்தது. முப்பத்தெட்டு வயதுக்கும் வற்றாத உணர்வுகள்..

சுண்டச் சுண்டக் காய்ச்சிய பாலின் பதம் மாறி சுவைக்கூடிக்கொண்டே போகிறது. உண்டால் நாக்கில் ருசி தங்கிவிடும். மேலும் மேலும் என்று தின்னப் பறக்க வைக்கும். ஆனால் யாருக்குத் தினக் கொடுப்பது? பாத்திரம் பழசாயிருப்பதா பிரச்சினை? பதம் சரியாயிருப்பது பெரும் வரமல்லவா? கிடந்து கிடந்து சுண்டிவிட்ட சுவையைப் பற்றி ஒருகுறை சொல்லிவிட முடியுமா?

அது அமுதமல்லவா.. அள்ளித் தின்ன யாருக்குக் கொடுப்பினை இருக்கிறது? ஆரம்பத்தில் வேண்டாம் வேண்டாமென மறுத்துவிட்டு இப்போது வேண்டும் வேண்டுமென்றால் அதுகூட இங்கு தவறுதான்.

'பன்னண்டுக்கு விடங்கர் அபிஷேகம். இதுக்கு முன்னாடி பார்த்திருக்கியா?'

மித்ரா தலையசைத்தாள்.

'இப்பவே போனா முன்னாடி ஒக்காந்து பார்க்கலாம். எல்லாருக்கும் கெடைக்காது. போ...'

அவசரமாய் அவளை அனுப்ப முயன்றான்.

'வாடி போவோம்.'

அத்தை பரபரத்தாள்.

'வரேன்.'

உணர்வற்ற ஒரு சொல்லாய் அது பிரகாரத்தில் அலைந்தது. அவன் அவள் கண்களைத் தவிர்த்து திரும்ப நடந்தான். உடல் நகர்ந்தது. மனம் அவனோடே சென்றது.

அண்ணி அவளுடைய தம்பிக்கு மித்ராவைப் பண்ணிக்கொள்ள ஆசைப்பட்டாள்.

'அவர் படிப்புல ரொம்ப சுமார். இதனால ரெண்டு பேருக்கும் பிரச்சினை வரும்.'

இரண்டாவது வாக்கியத்தைச் சொல்லவில்லை. அண்ணிக்குச் சுள்ளென்று ஏறிவிட்டது. இப்போதும் ஒரு ஏளனப் பார்வையோடுதான் ஏறிடுவாள்.

'அவன் ஜோரா செட்டிலாயிட்டான். விக்ரகமாட்டம் பொண்டாட்டி. சிமிழ் மாதிரி ஒரு கொழந்தை. அதெல்லாம் ஒரு கொடுப்பினை. எல்லாருக்கும் கெடைச்சிடாது.'

இதையே ஒவ்வொரு முறையும் வெவ்வேறு வார்த்தைகளில் சொல்ல அவளுக்குத் தெரிந்திருந்தது.

'ஒனக்கு யாரையாவது பிடிச்சிருந்தா பண்ணிக்கயேன்டி.'

அம்மா இறுதியாக அந்த முடிவுக்கு வந்துவிட்டிருந்தாள்.

'உன்னை ரொம்பப் பிடிச்சிருக்கு. நாம கல்யாணம் பண்ணிக்கலாமா?'

எதிரே வருபவனிடம் நிறுத்திக் கேட்டால் எப்படியிருக்கும்?

மித்ரா சிரித்துவிட்டாள். அம்மா பரிதாபமாக அவளைப் பார்த்தாள்.

இரவுகள் குளிர்ந்து கிடந்தன. நிலவின் வெண்பொழிவில், குளிரின் தன்மையில், அடர்த்தி கூடிப் போயிருந்தது.

'பெரிய பதவியில இருக்கா. கீழ அம்பது பேரா வது வேலை செய்வாங்க. எல்லாருக்கும் மேடம் தான். வயசு வித்தியாசமெல்லாம் கெடையாது. அவ்ளோ மரியாதை. எல்லாம் படிப்பு தந்த கௌரவம்.'

அப்பா பார்ப்பவர்களிடமெல்லாம் சொல்லுவார்.

இரவில் மித்ரா சிறுமி போலத் தலையணையை இறுக அணைத்துக்கிடந்தாள். முற்றின தேங்காயின் பருப்புமணி உருள்கிறாற்போல உள்ளுக்குள் உருண்டு திரண்ட கொப்புளமொன்று கீழ்மேலாய், மேல்கீழாய் அலைந்தது. சன்ன இழையாய் உள் நுழையும் மூச்சுக்காற்றில் அது நெருப்புத்துளி போல ஜ்வலித்தது. நடுமார்பை, அடிவயிற்றை, அல் குலை அது தடவிச்சென்றதில் உயிர்வரை சிலிர்த்தது.



பிரகாரம் காய்ந்திருந்தது. புறாக்கள் அந்த இடத்தைவிட்டு நகரவில்லை. படியிலமர்வதும், எதிரேயிருந்த நாயன்மார்கள் சந்நிதிக்குப் பறப்பதுமாயிருந்தன.

'இரவுகளில் நாயன்மார்கள் புறாக்களிடம் பேசிக்கொண்டிருப்பார்களா? ஆனால் அவை உறங்கிக்கொண்டிருக்குமல்லவா? பின்னே மூலவர் எதற்கிருக்கிறார்? அவரிடம் உலக நடப்புகள் குறித்துப் பேச வேண்டியதுதான். குளிர்ந்த படியிலமர்ந்து எதைப் பற்றியும் கவலைப்படாது பேசலாம். வௌவால்களின் அட்டகாசம் பற்றி அவரிடம் புகார் செய்யலாம். தேங்கும் அபிஷேகப் பொருட்களின் வாடை பற்றிச் சொல்லி ஏதாவது வழி பண்ணச் சொல்லலாம்.'

அந்தகார இருட்டுக்குள் இரண்டோ அதற்கு மேற்பட்டோ குரல்கள் பேசிக்கொள்வது போலத் தோன்றிற்று.

படியோரங்களிலிருந்த கைப்பிடிச் சுவர் வளைவாய் இறங்கி சுருட்டி வைக்கப்பட்ட பாய் போல முடிந்திருந்தது. கையை வைத்து அழுத்தியபோது உள்ளங்கையில் எச்சில் தோய்ந்த உதடுகள் ஸ்பரிசிப்பது போலிருந்தது. தடவிப் பார்த்தாள். மெத்தென்ற உள்ளங்கையில் சில்லிடல் கொஞ்சமாய் தங்கியிருந்தது. சம்மங்கி, அரளி, கதம்ப, மல்லிகையின் வாசம் எண்ணெய்க் கசண்டுடன் கலந்து மனக்கிளர்ச்சியை உண்டாக்கிற்று.

இனந்தெரியாத உணர்வு, தேவாமிர்தம் போலப் பொங்கி வழியும் மனதில் நுரைத்துத் தளும்பிற்று. தளும்பி வழிந்து உடலெங்கும் பரவி மயிர்க்கால்களில் ஏறி குத்திட வைத்தது. படிக்கட்டின் ஓரத்தில் ஒரு துளி இடத்தில் மித்ரா முழங்கால்களைக் கட்டிக்கொண்டு அமர்ந்தாள். பெயர் பின்னால் நீண்டிருந்த வால் மறந்து போயிருந்தது.

கூட்டத்தை விடங்கர் அள்ளிக்கொண்டு விட்டிருந்தார். அவள் நிர்மலமான குளத்தின் ஒற்றைச் செம்பருத்தியாய் தனித்துக் கிடந்தாள். வண்ணதாசனின் தனுமையில் வரும் செம்பருத்தி. குடத்துக்குள் ஏறிடத் துடிக்கும் செம்பருத்தி. மித்ரா தனக்குள் சிரித்துக்கொண்டாள்.

சற்று பள்ளமான ஓரிடத்தில் நீர் தேங்கி வீசிய காற்றுக்குத் தளும்பிற்று. ஒரு புறா பறந்துவந்து அவள் காலருகே அமர்ந்தது. கருப்பு வெள்ளை உடலில் கண்கள் குண்டுமணி போல மினுங்கின. அது இவளை உறுத்துவிட்டு மீண்டும் பறந்துபோய் நாயன்மாரைச் சந்நிதியில் அமர்ந்தது. அங்கிருந்து மீண்டும் இவளைப் பார்த்துவிட்டு அருகிலிருந்த நாயன்மாரைப் பார்த்தது.

'அவர்கிட்ட என்னைப் பத்தி என்ன சொல்ற?'

கையாட்டிக் கேட்டாள். அது சட்டென எங்கோ பறந்துபோனது. அத்தை உள்ளே தவித்துக்கொண்டிருப்பாள் என்று நினைத்துக்கொண்டாள்.

'நான் போய் ஒக்கார்றேன். லேட்டாப் போனா முன்னால ஒக்கார இடம் கெடைக்காது.'

சொல்லிவிட்டுத்தான் போனாள்.

'நின்னுக்கிட்டேயிருக்காம சீக்கிரம் வந்து சேரு.'

இறுதியாகக் காற்றில் மிதந்துவந்த அவளது சொற்கள் மித்ராவின் காதுகளை எட்டும் முன்னே கரைந்து போயிருந்தன.

சிறுவயதில் அம்மணச் சாமியார் ஒருவரை அவள் பார்த்திருக்கிறாள். ஏனோ அது ஞாபகத்துக்கு வந்தது. சடை முடியுடன் அழுக்கு உடலோடு அவர் ஆங்காங்கே தென்படும்போதெல்லாம் படபடப்பாக வரும். முழு நிர்வாணமாய் அவர் சாலையிலோ, ஏதாவது கடை வாசலிலோ நின்றுகொண்டிருப்பார். கடைக்காரர்கள் அவருக்குப் பயபக்தியுடன் ஏதாவது சாப்பிடத் தருவார்கள். அவர் சாப்பிட்டால் வியாபாரம் அமோகமாக நடக்கும் என்பது நம்பிக்கை.

பள்ளிக்கூடம் போகும் வழியில் எங்காவது அவரைப் பார்த்துவிட்டால் குனிந்த தலை நிமிராது சென்றுவிட வேண்டுமென்று அம்மா சொலித் தந்திருந்தாள். அப்படியும் ஒருநாள் முழுமையாகப் பார்த்துவிட்டாள். கண்களை இழுத்து நிறுத்த முடியவில்லை. பார்வை கீழிறங்கி விட்டது. ஒருமாதிரி சொரசொரத்துப்போனது.

அவரிடம் எந்த வித்தியாச நெளிவுமில்லை. மீதூறும் பார்வையின் பிரக்ஞையின்றி அவர் சென்றுகொண்டிருந்தார். அதுகூட ஒரு தெளிவு நிலை என்று இப்போது தோன்றிற்று. ஊசலாட்டம் அற்ற மனசு. அது வாய்த்துவிட்டால் அனைத்தையும் கழற்றி வீசிவிடலாம். ஆசையை, ஆடைகளை, காம உணர்வுகளை...

சிரிப்பு வந்தது, கூடவே அழுகையும் வந்தது. அவள் வெற்றுடம்போடு நடந்து செல்வதாய் காட்சி கண்ணெதிரே தோன்றியது. நனைந்த கீழிமைகளோடு அவள் வாய்பொத்திச் சிரித்தாள். நிர்வாணம்.. ஆடை தொலைத்த உடல் நிர்வாணம், ஆசை தொலைத்த மன நிர்வாணம்.. மொத்தத்தில் நிர்வாணம்.

உள்ளே விடங்கர் பால் அபிஷேகத்தில் குளிர்ந்துகொண்டிருந்தார்.



கணேசன்

# அதிகரிக்கும் கழுத்து வலி!

முப்பது வருடங்களுக்கு முன்பு பட்டிதொட்டி எங்கும், ஆணும் பெண்ணும் தலையில் மண் கூடை, சாந்துச் சட்டி, தண்ணீர்க் குடம் சுமந்தார்கள். களத்தில் தானிய மூட்டைகளைத் தூக்கினார்கள். குளம், குட்டை, ஆற்றுக்குத் துணி மூட்டையைக் கொண்டுபோய்த் துவைத்தார்கள். திருவிழாவுக்குச் செல்லும்போது, குழந்தைகளைத் தோளில் தூக்கிக் கொண்டார்கள். ஆனால், அப்போதெல்லாம் அவர்கள் கழுத்து வலி வந்து அதிகம் துன்பப்பட்டதாகத் தெரியவில்லை; கழுத்தில் 'கொலர்' கட்ட வேண்டிய அவசியமும் ஏற்படவில்லை.

'நவீனத் தொழில்நுட்பம்' என்னும் பெயரில் வீடு, வயல், ஆலை, அலுவலகம், வேலை சார்ந்த இடம் எனச் சகலத்திலும் இயந்திரங்கள் வந்து அமர்ந்து கொண்டதும், தலைச்சுமை வேலைகள் குறைந்துவிட்டன. ஆனாலும், இப்போதுதான் கழுத்தில் வலி வந்து 'கொலர்' கட்டிக் கொண்டவர்களை அதிகம் காண்கிறோம்.

**என்ன காரணம்?**

காட்டு வேலை, கட்டட வேலை, வீதி வேலைக்குச் செல்கிறவர்கள் தொடங்கி, வீட்டுப் பெண்கள், பதின்பருவத்தினர், அலுவலகம் செல்கிறவர்கள்வரை இன்றைய இளைஞர்களில் 75% பேர் கழுத்து வலிக்கு சிகிச்சை எடுப்பதாக 'ஜர்னல் ஆஃப் ஆர்த்தோபீடிக்ஸ்' எனும் பிரபல மருத்துவ இதழ் கருத்துச் சொல்லியிருக்கிறது. அது எடுத்த 'சர்வே'யில், 'கணினி, தொலைக்காட்சி, அலைபேசி, 'மடிக்கணினி' எனும் நவீன 'சூனியக்காரிகள்' நான்கும் சேர்ந்து வைத்திருக்கும் 'சூனியம்' இது' என்பது உறுதியாகி இருக்கிறது. நடுத்தர வயதுள்ளவர்களைக் குறிவைத்துத் தாக்கும் இந்தக் கழுத்து வலிக்கு 'செர்விக்கல் ஸ்பாண்டிலைட்டிஸ்' (Cervical Spondylitis) என்பது மருத்துவப் பெயர்.

**காரணங்கள் என்ன?**

கழுத்து வலிக்கு முக்கியக் காரணம், கழுத்துப் பகுதியில் உள்ள தசைகள் சோர்ந்துபோவதுதான். அப்போது கழுத்தை அவற்றால் தாங்கிப்பிடிக்க முடிவதில்லை. அதன் வெளிப்பாடுதான் கழுத்து வலி. அதிக சுமையைத் தலையில் தூக்குவது, நீண்ட நேரம் கழுத்தை அசைக்காமல் ஒரே நிலையில் வைத்துக்கொள்வது போன்றவை இந்த மாதிரி கழுத்து வலிக்கு அடித்தளம் அமைக்கும்.

கழுத்தில் உள்ள முள்ளெலும்புகளுக்கு இடையில் சவ்வு சிதைந்து போவது அல்லது விலகிவிடுவது போன்ற காரணங்களால் கழுத்து வலி வருவது அடுத்த வகை. பொதுவாக நாற்பது வயதில் இந்தச் சவ்வு சிதையத் தொடங்கும். இப்போதோ இந்தச் சிதைவு இளம் வயதிலேயே தொடங்கி விடுகிறது. காரணம், இவர்கள் அமர்ந்து கொண்டே வேலை செய்வது இப்போது அதிமாகிவிட்டது. கணினி முன்னால் அமர்ந்துகொண்டு அதிக நேரம் வேலை செய்வதை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம்.

இதுபோல் தொடர்ந்து பல மணிநேரங்களுக்குத் தொலைக்காட்சி பார்ப்பது, படுத்துக்கொண்டே படிப்பது, படுத்துக்கொண்டே தொலைக்காட்சி பார்ப்பது, கழுத்தைக் கோணலாக வைத்துக்கொண்டு உறங்குவது. பல தலையணைகளைத் தலைக்கு அடுக்கிவைத்து உறங்குவது, வேலைக்குச் செல்ல பல மணிநேரம் பயணிப்பது, பயணங்களில் உட்கார்ந்துகொண்டே உறங்குவது போன்றவையும் கழுத்துவலிக்குப் பாதை போடும்.

இப்போதெல்லாம் பலரும் இரு சக்கர வாகனங்களை ஓட்டிச் செல்லும்போதும் அலைபேசியில் பேசுகிறார்கள். அப்போது கழுத்தை ஒரு பக்கமாகச் சாய்த்துக்கொண்டு பேசுகிறார்கள். இந்தத் தவறான பழக்கம் நாளடைவில் கழுத்துவலியை ஏற்படுத்துகிறது.

குண்டும் குழியுமாக உள்ள சாலைகளில் அடிக்கடி பயணிப்பதும் கழுத்து வலியை விரைவில் கொண்டுவந்துவிடும். உடலுழைப்பும் உடற்பயிற்சியும் இல்லாதவர்களுக்குக் கழுத்துத் தசைகள் விரைவில் இறுகிவிடும். முன்பெல்லாம் இது 50 வயதில் நிகழும். ஆனால், உடலுழைப்பு இல்லாத இன்றைய இளைய சமுதாயத்துக்கு 20 வயதில் இந்த இறுக்கம் ஏற்பட்டுவிடுவதால் தற்போது இந்த நோய் இளைஞர்களுக்கு வருகிற நோயாக மாறிவிட்டது.

தொண்டையில் உள்ள சுரப்பிகளில் ஏதாவது ஒரு தொற்று ஏற்பட்டு அங்கு நெறிகட்டிக்கொண்டால் அந்த வலி கழுத்தில் உணரப்படும். காய்ச்சலும் இருந்து கழுத்தை அசைக்க முடியாமல் கழுத்தை ஒரு பக்கமாக சாய்த்ததுபோல் இருந்தால், இந்தக் காரணம் இருக்க அதிக வாய்ப்பு உண்டு. இவை தவிர கழுத்தில் அடிபடுவது, விளையாடும்போது கழுத்தெலும்பு சவ்வு விலகிவிடுவது போன்ற காரணங்களாலும் கழுத்து வலி வரும்.

**அறிகுறிகள்:**

'செர்விக்கல் ஸ்பாண்டிலைட்டிஸ்' நோயின் தொடக்கத்தில் கழுத்தில் மட்டும் வலி ஏற்படும். பிறகு தோள்பட்டைக்கு வலி பரவும். கைகளில் குடைவதுபோல் வலிக்கும். விரல்கள் வரை வலி பரவக்கூடும். சிலருக்கு கை மற்றும் விரல்கள் மரத்துப்போவதும் உண்டு. நாளாக ஆக கழுத்தைத் திருப்பும்போது கழுத்து வலியுடன் தலைச்சுற்றலும் ஏற்படும்.

**என்ன பரிசோதனை?**

கழுத்தை எக்ஸ்ரே, சிடி ஸ்கேன் மற்றும் எம்.ஆர்.ஐ ஸ்கேன் எடுத்துப் பார்த்து நோயைப் புரிந்துகொள்ளலாம்.

> **கழுத்து வலிக்கு முக்கியக் காரணம், கழுத்துப் பகுதியில் உள்ள தசைகள் சோர்ந்துபோவதுதான். அப்போது கழுத்தை அவற்றால் தாங்கிப்பிடிக்க முடிவதில்லை. அதன் வெளிப்பாடுதான் கழுத்து வலி.**

**என்ன சிகிச்சை?**

தொடக்க நிலையில் உள்ள கழுத்து வலியை சாதாரண வலி மாத்திரைகளால் குணப்படுத்திவிடலாம். நோய் நீடிக்கிறது என்றால் மருத்துவரின் ஆலோசனைப்படி கழுத்தில் பட்டை அணிந்துகொள்வது, கழுத்துக்கு 'ட்ராக்சன்' போட்டுக்கொள்வது, பிசியோதெரபி நல்ல பயன் தரும்.

**தடுப்பது எப்படி?**

எப்போதும் நேராக நிமிர்ந்து அமரவும் நிற்கவும் நடக்கவும் பழகிக் கொள்ளுங்கள்.

பேருந்துகளில் பயணம் செய்யும்போது முடிந்தவரை பின் இருக்கையில் அமர்ந்து பயணம் செய்வதைத் தவிருங்கள்.

பயணங்களில் உட்கார்ந்துகொண்டே உறங்குவதைத் தவிருங்கள். முடியாதபோது அல்லது அவசியம் ஏற்படும்போது தலையைப் பின்பக்கமாக சாய்த்துக்கொண்டு உறங்குங்கள்.

ஐயங்கொண்டான் சுவாமிகள்

60



# எமையறிதல்

சாதனை என்றும் சேவை என்றும் உயர்ச்சி என்றும் பெயரெடுப்பதற்காக நாமெடுக்கின்ற முயற்சிகளுக்குப் பெயர் சூட்டியிருக்கிறோம். நாம் எண்ணித் திட்டமிட்டு ஆற்றுகின்ற உழைப்பு அல்லது வேலை இலக்கையடைந்து கொண்டால் அது நேரான பெறுதிகளை எனக்குத் தந்திருந்தால் பிறரால் என்னளவிற்கு அது சாத்தியமற்றுப் போயிருந்தால் (அல்லது அப்படி எண்ணிக்கொண்டால்) அதை வைத்து சாதனையென்று கொண்டாடமுடிகிறது. இருப்பினும் பெறுதி எனக்கோ பிறருக்கோ பயனற்றும் இருந்திருக்கலாம் என்பது சாத்தியமானதே என்பது கவனத்திற்குரியது.

செய்த அல்லது செய்கிற வேலையானது பிறருக்கான உதவி என்கிற கருதுகோளுடன் ஆற்றப்படல் சேவை எனக்கொள்ளமுடியும். உதவி என்பதை கருதுகோளாக இங்கு குறிப்பிட்டே ஆகவேண்டியுள்ளது. ஏனெனில் நாம் உதவி எனக் கருதிச் செய்கின்ற ஒரு விடயம் அதனைப் பெற்றவருக்கு அவசிய தேவையாக இல்லாதபோது அது உபத்திரவமாக அமைந்து விடவும் வாய்ப்புகள் உள்ளன.

தானம் என்கிற முத்திரையுடன் நலிவுற்ற ஒருவருக்கு ஒரு பசுவை வழங்கிவிட்டு பெரிய சேவையொன்றைச் செய்தோமென கொண்டாடித் தீர்க்கிறோம். நலிவுற்றவன் என்கிற விதமாக எம்மால் ஒருவனை அடையாளப்படுத்த முடியுமா? மூன்று வேளையும் அரை வயிறாயினும் உண்ண முடியாதவனை நலிவுற்றவன் என்கிற பட்டியலில் இடமுடியுமா? மருத்துவரின் கட்டளைப்படி கோடீஸ்வரன்கூட உணவுண்ண முடியாத நிலையில் இருப்பதில்லையா? நலிவுற்றவன் என்பதை அடையாளமிடுவதற்கான அளவுகோல் எது?

அப்படியாயின் இயலாதவன் என்கிற வகைப்படுத்தல் சரியானதுதானா? இயலாமை என்றொன்று யதார்த்தத்தில் இருக்கிறதா? ஓட முடியவில்லை என்பதற்காக நடக்கக்கூடியவன் இயலாதவனா? நடப்பதற்கே இயலுமையற்ற பலர் தொழில்முனைவோராக இருக்கிறார்கள் என்கிற களயதார்த்தம் கவனத்திலெடுக்கப்படுகிறதா? ஒவ்வொருவனும் தனக்கான திறமைகளைக் கொண்டவனாகவே உள்ளான். உடல் வலு என்பதைவிட என்னாலும் இயலும் என்கிற விதமான உளவலு இன்மைதான் பெரிய குறைபாடு.

நாம் உதவுகிறோம் சேவை செய்கிறோம் என்கிற ஒரு விடயமே ஒருவனை முடக்கி வைத்துவிடுகிற அவலமும் உண்டென்பதை கவனிக்கத் தவறிவிடுகிறோம். உழைப்பு என்பதன் பெறுமதியை அறியாத தங்கிவாழலாமென்கிற தைரியத்தை ஏற்படுத்திவிடக்கூடிய ஆபத்து நிலையையும் கவனத்தில் கொள்ளவேண்டியுள்ளது. சேவையாளன் என்கிற ஒரு பெயரை நான் பெறுவதற்காக என்னையே நம்பியிருக்கும் ஒருவனை உருவாக்குவதும் பராமரிப்பதும் நியாயமானதுதானா?

உழைப்பு அல்லது முயற்சிக்கான ஊக்குவிப்புக்குப் பதிலாக எமது உதவிகள் அவனை முடக்கிவிடுமே என்கிற கரிசனை பின்தள்ளப்பட்டு விடுவது தவிர்க்கவியலாததாகிவிடுகிறது. ஆனால் இவ்வியடயமானது முன்னிலைப்படுவதை பெயரெடுத்தல் என்கிற தன்னலம் நேரடியாகவோ மறைமுகமாகவோ தடுத்துவிடுகிறது. இது சார்ந்த உள்ளக விவாதம் எழுகின்றபோது மனம் அமைதியை இழந்து விடுகிறது. நிம்மதி பறிபோய்விடுகிறது.

மேலும் சேவை செய்தல் என்பது இலாபம் கருதாத ஒன்று. பெயரைப் பெறுதல் என்பது எனது செயலுக்கான இலாபமாக எதிர்பார்க்கப்படுவது சேவையல்ல. அது வெறுமனே ஒரு வியாபாரமே. பெயர் என்பதை செய்த செயலுக்கான ஊதியமாகப் பார்க்கும்போது அதுவும் சேவையாக அமையாது. அது ஒரு தொழிலாகவே அமைந்துவிடலாம்.

வியாபாரமோ தொழிலோ போட்டிகள் நிறைந்தது. போட்டியென்பது தவிர்க்கப்படமுடியாதது. போட்டி என்று வருகின்றபோது விளம்பரம் வாடிக்கையாளரை ஈர்த்தல் என்கிறதான செயலொழுங்கு புகுந்துகொள்கிறது. இது எண்ணங்களை ஒரு திசைக்குக் குவித்து சுற்றயல் விடயங்களை அறியவோ செயற்படவோ இடையூறாகவே இருந்துவிடுகிறது. எண்ணக் குவிவு என்கிற விடயம் கை நழுவும்போது மனம் அலைவுறத் தொடங்குகிறது.

செயல்கள் மட்டுமல்ல எண்ணமும் தடுமாறத் தொடங்குகிறது. பெயரைப் பெற்றுவிடுதல் என்கிற இலக்குத் தவறி இருக்கிற பெயரைக் காப்பாற்றினாலே போதுமென்கிற விதமாக ஆகிவிடுகிறது. காப்பாற்றுதல் என்பதே ஒரு விதமான ஏமாற்றுத்தான். போலிதான். ஆகமொத்தம் குழப்பமே எஞ்சுகிறது. தப்பலாமா? சிந்திப்போம்.

---

## அதிகரிக்கும் ...



ஒன்றரை மணிநேரத்துக்கு மேல் தொடர்ந்து தொலைக்காட்சி பார்க்க வேண்டாம்.

கணினியில் வேலை செய்கிறவர்கள் அதன் திரை கண்பார்வைக்கு நேர்மட்டத்தில் இருக்குமாறு பார்த்துக்கொள்ளவேண்டும். தலையைத் தூக்கியவாறு திரையைப் பார்க்கவேண்டாம்.

கழுத்து அதிக நேரம் ஒரே நிலையில் இருப்பதைத் தவிர்க்கவேண்டும். உதாரணமாக, படிக்கும்போதும், கணினியைப் பார்க்கும்போதும் தொலைக்காட்சியைப் பார்க்கும்போதும் 20 நிமிடங்களுக்கு ஒருமுறை கழுத்தை வேறு பக்கம் திருப்பி ஓய்வு தரவேண்டும்.

தலையைக் குனிந்துகொண்டே அதிக நேரம் வேலை செய்யக்கூடாது. உதாரணம் - தையல் வேலை செய்கிறவர்கள்.

மென்மையான தலையணையைப் பயன்படுத்துங்கள். உங்களுக்கு எப்படிப் படுத்துக்கொண்டால் கழுத்தும் தலையும் வசதியாக இருக்கிறதோ, அப்படிப் படுத்து உறங்குங்கள்.

அளவுக்கு அதிகமான சுமையைத் தலையில் தூக்காதீர்கள்.

படுக்கும்போது சிறிய தலையணையைப் பயன்படுத்துங்கள்.

புரதம், கால்சியம், வைட்டமின்கள், தாதுக்கள் மிகுந்த பால் முட்டை, இறைச்சி, மீன், காய்கறி, பழங்களை உட்கொள்ளுங்கள்.

உடல் பருமன் இல்லாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.

நடப்பது, நீந்துவது, சைக்கிள் ஓட்டுவது போன்ற உடற்பயிற்சிகளில் ஒன்றை தினமும் பின்பற்றுங்கள்.

கழுத்துத் தசைகளுக்கு வலுவூட்டும் தசைப்பயிற்சிகளை அல்லது யோகாசனப் பயிற்சிகளைத் தொடர்ந்து செய்வதும் நல்லது.

மோசமான சாலைகளிலோ வேகத்தடைகளிலோ இரு சக்கர வாகனங்களில் பயணம் செய்யும்போது வேகத்தைக் குறைத்துக்கொள்ளுங்கள்.

**கழுத்தில் சுளுக்கு ஏற்பட்டால்?**

திடீரென்று கழுத்தைத் திருப்புதல், அதிர்வு தரும் அசைவுகள், அதிக சுமையைத் தூக்குதல், வேகமாகத் தலையை அசைத்தல் மற்றும் தலையைத் திருப்புதல் போன்ற பல காரணங்களால் கழுத்து சுளுக்கிக்கொள்ளும். அப்போது சுளுக்கு எடுப்பது பலருக்கும் பழக்கம். இது தவறு. இப்படிச் சுளுக்கு எடுப்பதில் ஆபத்தும் உள்ளது. காரணம், கழுத்தெலும்பில் உள்ள சவ்வு விலகியிருந்து அதன் காரணமாக கழுத்தில் சுளுக்கு ஏற்பட்டிருந்தால், சுளுக்கு எடுப்பதன் மூலம் நோய் கடுமையாகிவிடும். பதிலாக, கழுத்துக்கு முழுமையாக ஓய்வு தந்தாலே சுளுக்கு குணமாகிவிடும். அத்துடன் வலிநிவாரணி களிம்புகளைத் தடவி லேசாக மசாஜ் செய்யலாம். வலி நிவாரணி மாத்திரை மற்றும் ஊசிகளைப் பயன்படுத்தலாம். பிசியோதெரபி செய்யலாம்.



# சிறைக்குள்...

தர்மராசா

58

## மட்டக்களப்பிலிருந்து அம்பாறைக்குக் கைதியை அனுப்பிய தொடக்கம்...!

8.12.2001 அன்று அதிகாலை 5 மணிக்குக் களுத்துறைச் சிறையிலிருந்து புறப்பட்டு இரவு 7.30 மணிக்கு மட்டக்களப்புச் சிறைச்சாலைக்குப் போய்ச் சேர்ந்ததைக் கடந்த பதிவுகளில் குறிப்பிட்டிருக்கிறேன். ஊரடங்கு உத்தரவு அதன்போதான வன்முறைகளுக்கு மத்தியில் எம்மை மட்டக்களப்புச் சிறைக்குக் கொண்டு செல்வார்கள் என்று நினைக்கவில்லை. அந்தப் பயணம் ஒரு விபத்துப்போல நடந்துவிட்டது. இந்த முறையும் மட்டக்களப்புச் சிறையில் 2ஆம் இலக்க அறையில்தான் என்னை அடைத்தார்கள். மறுநாள் மாலையில் அறைகளுக்குள் வைத்துப் பூட்டுவதற்கு முன்னர் கைதிகள் எல்லோரும் வரிசையாக நின்று மௌன அஞ்சலி செலுத்தினோம். இதற்கு முன் மட்டக்களப்புச் சிறைச்சாலையில் இருந்தபோது இந்த நடைமுறை இருக்கவில்லை.

நான் களுத்துறைச் சிறையில் இருந்த காலத்தில் இது ஒழுங்காகப் பின்பற்றப்படுவதுண்டு. மாலையில் அறைக் கதவு பூட்டப்பட்டதும் "இதுவரை காலமும் போர் காரணமாக வீரச் சாவைத் தழுவிக்கொண்ட போராளிகளுக்கும் அதன்பால் அநியாயமாகக் கொல்லப்பட்ட மக்களுக்குமாக 2 நிமிட நேரம் அகவணக்கம் செலுத்துவோம்" என்று ஒரு கைதி சொல்ல ஏனைய கைதிகள் அமைதியாக நின்றார்கள்.

பூசாச் சிறையானது தனி ஒரு மண்டபமாக இல்லாமல் தனித்தனியான சிறிய அறைகளாக இருப்பதால் எல்லோரையும் ஒழுங்குபடுத்தி அஞ்சலி செலுத்துவது மிகச் சிரமம். ஆனால் மட்டக்களப்புச் சிறை அவ்வாறில்லை. இந்த முறை மட்டக்களப்புக்கு வந்ததும் பழைய நண்பர்களையும் சிறைச்சாலை ஊழியர்களையும் சந்தித்துக் கதைப்பதிலேயே அதிக நேரத்தைச் செலவிட்டேன்.

9.12.2001 அன்று ரணில் விக்கிரமசிங்க புதிய தலைமை அமைச்சரானார். அது தமிழ் அரசியல் கைதிகள் மத்தியில் ஓர் உற்சாகத்தை - நம்பிக்கையை ஏற்படுத்தும் செய்தியாக இருந்தது. 10.12.2001அன்று மாலையில் தலைமை ஜெயிலர் குணசேகரம் தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் கூப்பிட்டுக் கதைத்தார். "நீங்கள் அரசியல் கைதிகளாக இருப்பதால் உங்களுக்குத் தேவையான விடயங்களைப் பிரத்தியேகமாகச் செய்து தருவேன். நீங்களும் ஒழுங்காக இருப்பீர்கள் என எதிர்பார்க்கிறேன்" என்றார். எமக்குத் தேவையான பாய் மற்றும் பொருள்களை வெலிக்கடையிலிருந்து வெகு விரைவில் பெற்றுத் தருவோம் என்றார். கொழும்பிலுள்ள மிகப் பெரிய சிறைதான் வெலிக்கடை. அங்கு கடூழியச் சிறைத்தண்டனைக் கைதிகளைப் பயன்படுத்திப் பல்வேறு விதமான பொருள்கள் தயாரிக்கப்பட்டு ஏனைய சிறைகளுக்கு வழங்கப்படுவதுண்டு. சவர்க்காரம், தும்புத்தடி, விளக்குமாறு, தகர வாழிகள் எனப் பல பொருள்கள் இவற்றுள் அடங்கும்.

தலைமை ஜெயிலர் குணசேகரம் பதவியேற்பதற்கு முன்னர் தலைமை ஜெயிலராக இருந்தவர் ஸ்கந்தராஜா. அவர் மட்டக்களப்பு - காரைதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். பல மட்டங்களிலும் நல்லுறவைப் பேணிக்கொள்பவர். மிரட்டியும் அன்பாகவும் நிர்வாகம் நடத்துவார். ஆனால் குணசேகரமோ கண்டிப்பான யதார்த்தமான நிர்வாகி. கைதிகளின் வழக்கு விடயங்களையும் அவர்களுக்கு இருக்கக்கூடிய அசௌகரியங்களையும் கருத்தில் கொண்டு செயற்பட்டார். அவர் பதவியேற்ற பின்னர்தான் மட்டக்களப்புப் புதிய கட்டட மேல்மாடியில் கைதிகளைத் தங்க வைக்க ஏற்பாடு செய்யப்பட்டது. அதன் மூலம் 60க்கு மேற்பட்ட அரசியல் கைதிகளை அங்கு தடுத்து வைக்கும் ஏற்பாட்டைச் செய்தார். முதன் முதலாக மட்டக்களப்பில் இருந்து அம்பாறை மேல் நீதிமன்றத்துக்குக் கிருஷ்ணபிள்ளை என்ற கைதியை வழக்குக்காக அனுப்பி வைத்தார். அந்த இரண்டு விடயங்களும் நல்ல தொடக்கமாக அமைந்ததால் அங்கு தங்கவும் அம்பாறை வழக்குக்குச் செல்லவும் வாய்ப்பாக அமைந்தது. அதற்கு முன்னர் அம்பாறை வழக்குக்குச் செல்பவர்கள் பதுளைச் சிறையிலிருந்துதான் அங்கு கொண்டு செல்லவது வழக்கம்.

(தொடரும்)

நட்சத்திரா

# ஏன்...? அப்டி...?

20



## கர்ப்பவதிகளைச் சுகமில்லாதவர்கள் என்பது...!

கர்ப்பமுற்றிருக்கும் பெண்களைத் தமிழ்ச் சமூகத்தினர் 'அவ சுகமில்லாமல் இருக்கிறா' என்று கூறுவது பொதுவான வழக்கம். ஒரு பெண் கர்ப்பமுற்றிருப்பதை ஆங்கிலத்தில், 'சி இஸ் இன் த பமிலி வே'' என்று உயர்வாகக் குறிப்பிடுகிறார்கள். அடுத்த சந்ததியை உருவாக்கும் முயற்சியில் அந்தப் பெண் ஈடுபட்டிருக்கிறாள் என்று உயர்வளிக்கப்படுகிறது. பெண் கர்ப்பமுற்றிருப்பதை ஏன் சுகமில்லாமல் இருக்கிறா என்று தமிழ் மக்கள் சொல்கிறார்கள்...? இதற்குப் பல உள்ளார்ந்த அர்த்தங்கள் இருப்பதைக் காணமுடியும்.

''அவ சுகமில்லாமல் இருக்கிறா'' என்று சொல்வதன் அர்த்தம் அந்தப் பெண் நோயுற்று இருக்கிறாள் என்பதல்ல. அந்தப் பெண் சாதாரணமாக - வழமையாகச் செயற்படுகின்ற உடல் நிலையுடன் இல்லை என்பதைத் தெரிவிப்பதே அதன் முதல் நோக்கம். அதேவேளை அந்தப் பெண் கர்ப்பமுற்றிருக்கிறாள் என்பதைச் சூசகமாகப் புரிந்துகொள்ளும் ஒரு சொல்லாடலாகவும், வழக்கமாகவும் அவ்வாறு சொல்லப்படுகிறது.

அந்தப் பெண் சுகமில்லாமல் (கர்ப்பந் தரித்து) இருப்பதால் அவளுக்கு ஓய்வு, நிம்மதியான தூக்கம், நேரத்துக்கு நேரம் உணவு ஆகிய பல கவனிப்புகள் - பராமரிப்புகள் தேவை என்ற உள்ளார்ந்த அர்த்தம் எனப் பல விடயங்கள் அதில் அடங்கியிருக்கும். அதேவேளை கர்ப்பமுற்ற தொடக்க நாள்களில் அதிகம் வேலை செய்தால் அவரது கருக் கலைந்துவிட வாய்ப்புண்டு. அதைத் தவிர்ப்பதும் மற்றோர் நோக்கமாகும்.

பெண் ஆனவள் சுகமில்லாமல் இருக்கிறாள் என்பதன் மூலம் மற்றவர்கள் அந்தப் பெண்ணுக்குக் கரைச்சல், உபத்திரவம், இடையூறுகள், சஞ்சலங்கள் கொடுக்கக்கூடாது என்றும் ஒரு தடுப்புப் போடப்படுகிறது. இவ்வாறு ஒரு பெண் சுகமில்லாமல் இருக்கும்போது உறவுக்காரர் அந்தப் பெண்ணுக்கு விருப்பமான உணவுகளைச் செய்து கொடுப்பார்கள். இரண்டு உயிருக்குச் சாப்பாடு தேவை என்ற உட்பொருளுடன் உணவைச் சற்று அதிகமாகக் கொடுப்பது போன்ற விடயமும் தொடரும்.

தமிழில் வெளிப்படையாகக் குறிப்பிடப்படாவிட்டாலும் அவ சுகமில்லாமல் இருக்கிறா என்பதன் அர்த்தம் அந்தப் பெண் அடுத்த சந்ததியை உருவாக்கும் பணியில் இறங்கியிருப்பதால் அந்தப் பெண் சார்பில் அதிக கவனம் எடுக்கவேண்டும் என்பதேயாகும்.

# 8 நிமிடத்தில் புலிகளின் 12 பங்கர்களைக் கைப்பற்றினோம்

**கமலநாதன்**




மலிந்த பெரேரா அல்லது வாத்துவ பெரேரா என அழைக்கப்படும் இவர் இலங்கைக் கொமாண்டோப் படையணியைச் சேர்ந்தவர். 4 மற்றும் 8 பேரைக் கொண்ட கொமாண்டோ அணியால் நடத்தப்பட்ட பல தாக்குதல்களில் பங்கெடுத்தவர். வாத்துவ என்ற ஊரைச் சேர்ந்தவர் என்பதால் வாத்துவப் பெரேரா என்று அழைக்கப்பட்டார். தனது அனுபவத்தை நளின் ராஜபக்ச என்ற யூரியூப் தளத்தில் இவ்வாறு பதிவு செய்தார்.

நான் வாத்துவப் பகுதியைப் பிறப்பிடமாகக் கொண்டவன். பாடசாலை நாள்களிலேயே படைப்பிரிவில் சேர விரும்பினேன். பாடசாலை மாணவனாக இருந்த காலத்தில் நீ எதிர்காலத்தில் என்னவாக வர விரும்புகிறாய்? என்ற கேள்விக்கு படை வீரனாக வர விரும்புகிறேன் என்று கட்டுரை எழுதினேன். நான் படையில் சேர்வதற்குச் சென்றபோது எனக்குப் 18 வயது பூர்த்தியாகவில்லை என்று திருப்பியனுப்பினார்கள். பின்னர் அடுத்த வருடம் சேர்ந்தேன். எனது சித்தப்பா படையில் பணியாற்றி 1985இல் இறந்தார். படையில் சேரும் எனது எண்ணத்தை அப்பா மறுக்கவில்லை. எனினும் தாத்தவிடம் கேட்டுவிட்டு முடிவெடு என்றார். தாத்தாவிடம் எனது விருப்பத்தைத் தெரிவித்தபோது அவர், "படையில் சேர் ஆனால் அதை விட்டு ஓடிவரக்கூடாது" என நிபந்தனை விதித்தார்.

படையில் இணையும்போது கொமாண்டோ அணிக்குப் போக விரும்புகிறேன் என்று கேட்டு அதில் இணைந்தேன். தொடக்கப் பயிற்சியை மாதுறு ஓயா முகாமில் பெற்றேன். பயிற்சி முடிந்ததும் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பினார்கள். பின்னர் வாகரைத் தாக்குதலுக்காக அனுப்பிய போது எமக்குப் பயிற்சி தந்த அதிகாரிகளும் எம்முடன் இணைந்து களத்துக்கு வந்து பயிற்சி தந்தார்கள்.

தொப்பிகல நரக்கமுல்ல பகுதிக்கு எமது அணியில் 18 பேர் களமிறங்கினோம். அதில் 4 பேர் மட்டுமே உயிருடன் திரும்பினோம். இந்தத் தாக்குதலில் எனது அணியைச் சேர்ந்த நண்பர் காயப்பட்டார். அந்தத் தாக்குதலில் எனக்கும் காயம் ஏற்பட்டது. எனினும் நண்பரின் உயிரைக் காப்பாற்றுவதற்காக அவரைத் தோளில் சுமந்து சென்றேன். அப்போது கடும் மழையும் பெய்தது.

தொப்பிகல தாக்குதலின் பின் திரியாய் பகுதிக்கு அனுப்பப்பட்டோம். அங்கு சென்ற போது கடற்படையினரின் முகாமை புலிகளின் தளபதி நாகேஷ் தலைமையிலான அணி தாக்கியது. அந்தப் பகுதியில் எமது அணி கடும் சமரிட்டு கடற்படை முகாமைப் புலிகளிடமிருந்து காப்பாற்றினோம்.

**இலக்குகளைத் தேடவேண்டியிருந்தது**

கொமாண்டோப் படையணியில் 4,8 பேர் எனச் சிறு அணியாகச் செயற்பட்டாலும் எமக்கான இலக்குகளை நாங்களே தேட வேண்டியிருந்தது. கொமாண்டோ அணி தாமாகச் செயற்படவேண்டியிருந்ததால் புலிகளின் இலக்குகளைக் கண்டுபிடிப்பதில் ஒவ்வொரு அணிகளுக்கு இடையிலும் கடும் போட்டி நிலவியது. யார் முதலில் புலிகளின் இலக்குகளைக் கண்டு பிடித்து வேகமாகத் தாக்கியழிப்பது என்ற போட்டியே கொமாண்டோ அணி வெற்றிகரமான தாக்குதல்களைச் செய்வதற்கு ஏதுவாக அமைந்தது. கொமாண்டோ என்கிற ஆங்கிலச் சொல்லில் வரும் 8 எழுத்துகளும் மந்திரம்போல எங்களை எழுச்சியாக வைத்திருந்தது. ஒரு கொமாண்டோவாக இருப்பதைப் பெருமையாக நினைத்தோம். எமக்கிடையில் மிக இறுக்கமான சகோரதர உறவு இருந்தது.

**பங்கர்களைப் பிடித்தோம்**

எமது பிரிவில் 3 அணிகள் இருந் தன. அதில் இரண்டு அணிகள் தொடர்ச்சியாக மோதலில் ஈடுபட் டுக்கொண்டேயிருந்தன. ஓர் அணி விடுமுறையில் செல்லும். இது மாறி மாறி நடக்கும். தாக்குதலில்போது நாம் ஒவ்வொரு வரும் மற்றவர்களுக்குக் கூறும் விடயம் காயப்பட்டாலோ இறந்தாலோ எம்மைத் தூக்கி நேரத்தை வீணாக்காமல் புலிகளின் இலக்கை நோக்கித் தொடர்ச்சியாகத் தாக்குங்கள் என்ப தாகும். ஆனால் நடைமுறையில் அவ்வாறு யாரையும் கொமாண்டோ அணியினர் தூக்காமல் விடுவதில்லை. மேஜர் சந்தருவான் தலை மையில் 7 பேர் கொண்ட அணி ஒன்று சுண்டிக் குளம் பகுதியில் களமிறங்கினோம். சந்தருவான் எதற்கும் அஞ்சாதவர். நாம் அந்தப் பகுதியை அடைவதற்கு முன்னரே புலிகளுடனான தாக்குதலில் படையினரில் பலர் இறந்திருந் தார்கள்.

நாம் களமுனைக்கு முன்னேறிச் சென்றபோது படையினர் இறந்தவர்களையும் காயப்பட்டவர்களையும் பின்தளத்துக்குத் தூக்கிச் செல்வதைக் கண்டேன். புலிகள் மிக உக்கிரமாகத் தாக்கியிருந்தார்கள். புலிகள் பற்றல் துப்பாக்கிகளை அதிகம் பாவித்திருந்தார்கள். எமது பகுதித் தாக்குதலுக்கு மேஜர் ஹமீட் பொறுப்பாக இருந்தார்.

மிக அவதானமாக நாம் முன்னேறினோம். மிக மூர்க்கமாகச் சண்டையிடவேண்டும் என்று தீர்மானம் எடுத்திருந்தோம். 8 நிமிட நேரத்துக்குள் புலிகளின் 12 பங்கர்களைக் கைப்பற்றினோம். அவை 20 மீற்றர் இடைவெளியில் பலமாக அமைக்கப்பட்டிருந்தன. அவ்வாறானதொரு துணிகரத் தாக்குதலை யாருமே செய்ய முடியாது என படைத்தளபதி சரத்பொன்சேக எங்களது அணியைப் பாராட்டினார். அந்தத் தாக்குதலின் போது புலிகளின் தரப்பில் 500க்கு மேற்பட்டவர்கள் இருந்தார்கள். எல்லாவிதமான ஆயுதங்களையும் அவர்கள் பயன்படுத்தினார்கள். 60 மில்லி மீற்றர் மோட்டார், பல ரகத் துப்பாக்கிகள் என மாறி மாறிச் சுட்டதால் அதை எதிர்கொள்வதில் சிரமம் இருந்தது. பிசிற குமார என்ற கொமாண்டோ தலையில் வெடிபட்டு இறந்தார்.

**புதுக்குடியிருப்புத் தாக்குதல்**

இறுதிப் போரின்போது புதுக்குடியிருப்புப் பகுதியில் தாக்குதல் ஒன்றை எமது அணி மேற்கொண்டது. அது உயிரைப் பணயம் வைத்த தாக்குதல். எமது அணியில் 6 பேர் இருந்தோம். சகபாடிகள் 2 பேரும் அடுத்த அணியில் பயிற்சி பெற்ற மூவரும் இருந்தோம். தாக்குதல் நடந்த இடம் வயல் காணி. 4 மணிநேரம் வேவு பார்த்து எங்களால் 2 கிலோ மீற்றர் தூரமே செல்ல முடிந்தது. வயல் வரம்புகளில் பாதுகாப்புத் தேடவேண்டியிருந்தது. பெருவெளியாக இருந்ததால் சகட்டு மேனிக்குத் தாக்க வேண்டியிருந்தது. இந்தத் தாக்குதலை அதிகாலை 3 மணிக்குத் தொடங்கினோம். முற்பகல் 10 மணிவரை அது தொடர்ந்தது. 10.30 மணியளவில் எனக்குக் காயம் ஏற்பட்டது. கழுத்தில் சூடுபட்டது. 15 நிமிடங்கள் வரை நினைவிழந்தேன். எமது அணியிலிருந்த சினைப்பர் துப்பாக்கியைப் பாவித்தவர் காயமடைந்த நிலையில் ரூபசிங்க அதை எடுத்துச் சுட்டார். அவர் சினைப்பர் பயிற்சி பெற்றவரல்லர். எனினும் 40க்குக் குறையாத இலக்குகளுக்குச் சுட்டார்.

எனக்கு அதிகளவில் குருதி வெளியேறியது. துப்பாக்கி ரவைகள் கிங் கிங் என்ற சத்தத்துடன் தாறுமாறாக எம்மை நோக்கி வந்தான. காயப்பட்ட இடத்திலிருந்து 6 கிலோ மீற்றர் வரை நடக்க வேண்டி ஏற்பட்டது. குருதி அதிகம் வெளியேறியதால் மயக்கம் ஏற்பட்டது. கையுறை, காலுறை ஆகியவற்றை மேஜர் ஹமீட் கழற்றுவதைக் கண்டேன். 20 நாள்களின் பின்னர்தான் எனக்கு நினைவு திரும்பியது.

2009 மே 2ஆம் திகதியன்று இந்தத் தாக்குதல் நடந்தது.

எனது அனுபவத்தில் கூறுவதானால் புலிகள் மிகவும் பலமானவர்களாகவும் பேர் நுட்பம் அறிந்தவர்களாகவும் இருந்தார்கள் என்றே கூறுவேன். ரி-56 ரக துப்பாக்கி ரவைகளை தாங்களே தயாரித்திருக்கிறார்கள். குண்டு துளைக்காத எமது கவச உடைகளைத் துளைக்கக்கூடிய ரவைகளையும் புலிகள் கண்டுபிடித்திருந்தார்கள். ஆண், பெண் வேறுபாடின்றி கலந்து நின்று போரிட்டார்கள். அது அவர்களின் இறுக்கமான கட்டமைப்பையே காட்டுகிறது.

---

**கோட்டா...**

நீதிவான் மன்று தடை விதித்துள்ளது. காவல்துறையினர் முன்வைத்த மனு மீது நீதிவான் இந்தத் தடை உத்தரவைப் பிறப்பித்தார்.

இந்த இரு வீதிகளும் அரச தலைவர் இல்லத்தை நோக்கிச் செல்கின்றன. அதனால் போராட்டக்காரர்கள் அதற்கு நுழைய காவல்துறையினர் தடை உத்தரவு பெற்றுள்ளனர். இதற்கு முன்னரும் இந்த வீதிகளில் நுழைய போராட்டக்காரர்கள் முயன்றபோது காவல் துறையினர் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை ஏவியும் நீர்த் தாரை வீசியும் அவர்களைக் கலைந்து செல்ல வைத்திருந்தனர்.

**நகரில்...**

யாடினார். விவசாயத்திற்குத் தேவையான பொருட்களை தடையற்ற விநியோகத்தை உறுதிசெய்யும் வகையில் விவசாய வழங் கல் சட்டம் ஒன்றைத் தனது ஆட்சி புதிதாகக் கொண்டுவரவுள்ளதாக அப்போது ரணில் தெரிவித்தார்.

உக்ரேன் - ரஷ்யா போர் காரணமாக கோதுமை மற்றும் உரத்திற்குக் கடும் தட் டுப்பாடு ஏற்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டிய தலைமை அமைச்சர் உடனடி நடவடிக் கைகளை எடுக்கத் தவறின் நாடு மோசமான விளைவுகளைச் சந்திக்கவேண்டி வரும் என்றும் எச்சரித்தார்.

அனைவரும் ஒத்துழைப்பதன் மூலமே நாட்டை இந்த ஆபத்திலிருந்து மீட்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

# 40 ஆண்டுகள் இருளில் தவிக்கும் யுரேனஸ்



சூரிய மண்டலத்தில் உள்ள கோள்களில் யுரேனஸ் கோள் தவிர, அனைத்தும் சூரியனைச் சுற்றிவருகின்றன. ஆனால், யுரேனஸ் கோள் அங்கப் பிரதட்சணம் செய்வதுபோல் உருண்டுகொண்டே சூரியனைச் சுற்றிவருகிறது. எல்லாக் கோள்களுக்கும் வட துருவம் மேல் நோக்கி இருக்கும். ஆனால், யுரேனஸ் படுத்தபடி சுற்றுவதால் சுமார் 40 ஆண்டுக் காலம் அதன் வட துருவம் சூரியனைப் பார்த்தபடி இருக்கும். அப்போது தென் துருவத்தில் இரவாக இருக்கும். பிறகு தென் துருவம் சூரியனைப் பார்த்தபடி இருக்கும். அப்போது வட துருவத்தில் இரவாக இருக்கும்.

**பூமியும் யுரேனஸூம்**

ஓர் அமாவாசை இரவில் வெறும் கண்களாலேயே புதன், வெள்ளி, செவ்வாய், வியாழன், சனி ஆகிய ஐந்து கோள்களை நம்மால் பார்க்க முடியும். சனி கோளுக்கும் அப்பால் ஒரு கோள் இருக்கவேண்டும் என்று நினைத்த அறிவியலாளர் வில்லியம் ஹெர்ஷல், 242 ஆண்டுகளுக்கு முன்பு யுரேனஸ் கோளைக் கண்டுபிடித்தார். உலகிலேயே முதல் முறை ஒரு கோளைக் கண்டுபிடித்த பெருமை வில்லியம் ஹெர்ஷலுக்குக் கிடைத்தது!

ஜெர்மனியில் பிறந்து, வளர்ந்த ஹெர்ஷல், இங்கிலாந்து படைத்துறைப் பணியில் சேர்ந்தார். ஒருகட்டத்தில் அவருக்கு அந்த வேலை பிடிக்கவில்லை. 38 வயதில் படைப் பணியிலிருந்து விலகி, பல்வேறு வேலைகளைச் செய்தார். நூலகத்தில் வானவியல் புத்தகத்தைப் புரட்டிக்கொண்டிருந்தபோது, வானவியல் மீது ஆர்வம் வந்துவிட்டது.

சிறிய டெலஸ்கோப் ஒன்றை வாடகைக்கு எடுத்து, தன் ஆராய்ச்சிக்குப் பயன்படுத்தினார். டெலஸ்கோப் வாடகை அதிகமாக இருந்ததால், தானே ஒரு டெலஸ்கோப்பை உருவாக்கினார். பலரும் டெலஸ்கோப்பை விலைக்குக் கேட்க, அதையே தொழிலாகச் செய்யத் தொடங்கினார். பகலில் இசை வகுப்புகள் எடுப்பதிலும் டெலஸ்கோப் தயாரிப்பிலும் ஈடுபட்டார். இரவு முழுவதும் வான் ஆராய்ச்சியில் இறங்கினார்.

வில்லியம் ஹெர்ஷல்

வானில் இணையாகக் காணப்படும் நட்சத்திரங்களைப் பட்டியலிட்டார். நட்சத்திரக் கூட்டங்களையும் பட்டியலிட்டார். அப்போது நகரும் ஒளிப்புள்ளி ஒன்றை 1781ஆம் ஆண்டு ஹெர்ஷல் கண்டுபிடித்தார். அது வால் நட்சத்திரமாக இருக்கும் என்று கருதினார்.

ஆனால், அந்த ஒளிப்புள்ளிக்கு வால் நட்சத்திரத்துக்கே உரிய தலையும் இல்லை, வாலும் இல்லை. மற்ற வான் ஆராய்ச்சியாளர்கள் அந்த ஒளிப் புள்ளியை விரிவாக ஆராயத் தொடங்கினர். அது வால் நட்சத்திரமாக இருக்க முடியாது, ஒரு கோளாக இருக்க வேண்டும் என்று கருதினர். இறுதியில் அது கோள் என்று உறுதியானது. ஹெர்ஷல் தான் கண்டுபிடித்த கோளுக்கு இங்கிலாந்து மன்னரின் பெயரைச் சூட்டினார். பிறகு ‘யுரேனஸ்’ என்று பெயர் மாற்றப்பட்டது.

யுரேனஸ் கோள் வியாழன் கோளைப் போலவே பனிக்கட்டி உருண்டை. வியாழன் கோளைவிடச் சற்றே சிறியது. யுரேனஸ் சூரியனை ஒருமுறை சுற்றிவர 84 ஆண்டுகள் ஆகின்றன.

யுரேனஸ் கோள் சூரியனிலிருந்து சுமார் 300 கோடி கி.மீ. தூரத்தில் உள்ளது. இது சூரியனுக்கும் பூமிக்கும் உள்ளதைப் போல சுமார் 20 மடங்கு தூரம். ஆகவே தான் வெறும் கண்ணால் யுரேனஸ் கோளைப் பார்க்க முடியாது. யுரேனஸ் கோளிலிருந்து பார்த்தால் சூரியன் ஒரு பிரகாசமான நட்சத்திரமாகத் தெரியும்.

1977ஆம் ஆண்டு அமெரிக்காவின் நாஸா விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் மூலம் செலுத்தப்பட்ட வாயேஜர்-2 என்ற ஆளில்லா விண்கலம், 1986ஆம் ஆண்டு யுரேனஸ் கோளை நெருக்கமாகக் கடந்து சென்றது. அப்போது யுரேனஸ் கோள் பற்றிப் பல தகவல்களை அளித்தது.

சனி கோளுக்கு உள்ளது போலவே யுரேனஸ் கோளுக்கும் மெல்லிய வளையங்கள் உள்ளன. பூமிக்கு ஒரு சந்திரன். ஆனால், யுரேனஸ் கோளுக்கு 27 சந்திரன்கள். யுரேனஸ் படுத்தபடி சூரியனைச் சுற்றுவதால் அதன் சந்திரன்கள் ராட்டினம் போல யுரேனஸை மேலும் கீழுமாகச் சுற்றுகின்றன.

யுரேனஸின் காற்று மண்டலம் பெரும்பாலும் ஹைட்ரஜன், ஹீலியம் ஆகிய வாயுக்களால் ஆனது. மீதேன் போன்ற வேறு சில வகை வாயுக்களும் உள்ளன. டெலஸ்கோப் மூலம் பார்த்தால் யுரேனஸ் கோள் நீல நிறமாகத் தெரியும். அதற்கு அதன் காற்று மண்டலத்தில் உள்ள மீதேன் வாயுவே காரணம்.

# சாக்கடல் சாகடிக்காது

**ஸ்நேகா**



‘சாக்கடல்’ என்று நாம் அழைத்தாலும் அது கடல் அல்ல. நான்கு பக்கங்களிலும் நிலத்தால் சூழப்பட்ட மிகப் பெரிய ஏரி. அதே போல இந்தக் கடலில் விழுந்தால் மூழ்க முடியாது. அதனால் உயிர் இழக்கும் வாய்ப்பும் இல்லை. பிறகு ஏன் ‘சாக்கடல்’ என்று பெயர்?

இந்த ஏரித் தண்ணீரின் தன்மைதான் ‘சாக்கடல்’ என்கிற பெயரைக் கொடுத்திருக்கிறது. சாக்கடல் தண்ணீரை எடுத்துச் சுவைத்தால் அளவுக்கு அதிகமாக உப்புக் கரிக்கும். கடல் நீரின் உப்பைவிட, சாக்கடல் நீரின் உப்பு சுமார் பத்து மடங்கு அதிகமாக இருக்கும். அதாவது ஒரு லீற்றர் கடல் நீரைக் காய்ச்சினால் 35 கிராம் உப்பு கிடைக்கும். ஒரு லீற்றர் சாக்கடல் நீரைக் காய்ச்சினால் 345 கிராம் உப்பு கிடைக்கும் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள்!

கடலில் சோடியம் குளோரைடு உப்புதான் அதிகமாக இருக்கும். அதாவது 97 சதவீதம் சோடியம் குளோரைடும் 3 சதவீதம் இதர உப்புகளும் இருக்கும். சாக்கடலில் 30 சதவீதம் மட்டுமே சோடியம் குளோரைடு இருக்கிறது. பொட்டாஷியம், புரோமைன், கால்சியம் போன்ற பிற உப்புகள் அதிகமாக இருக்கின்றன.

அளவுக்கு அதிகமான உப்பு சாக்கடலில் இருப்பதால்தான் மீன், நண்டு, தவளை போன்ற நீர்வாழ் உயிரினங்களோ தாவரங்களோ அதில் வாழ முடியவில்லை. அதனால்தான் இந்தக் கடலை ‘சாக்கடல்’ என்று அழைக்கிறார்கள்.

சாக்கடலில் உப்பின் அடர்த்தி அதிகமாக இருப்பதால்தான் மனிதனால் இந்தக் கடலில் மிதக்க முடிகிறது. நீரில் மூழ்கிவிடுவோம் என்கிற பயமின்றி நீச்சல் தெரியாமலே மிதந்துகொண்டே படிக்கலாம். விளையாடலாம்.

அது சரி, சாக்கடலில் மட்டும் ஏன் இவ்வளவு உப்பு? சாக்கடலுக்கு வெளியிலிருந்து வரக்கூடிய நீரின் அளவு குறைவு. ஆனால், சாக்கடலில் இருந்து ஆவியாகும் நீரின் அளவு அதிகம். அதனால் அளவுக்கு அதிகமான உப்பு கடலில் தங்கிவிடுகிறது.

உயிரினங்களால் இந்தக் கடலில் வாழ முடியாவிட்டாலும் சுற்றுலாப் பயணிகள் இந்தக் கடலை நோக்கிப் படையெடுக்கிறார்கள். சாக்கடல் மண்ணுக்கு மருத்துவக்குணம் இருப்பதாக நம்புகிறார்கள்.

சாக்கடல் எங்கே இருக்கிறது? மேற்கு ஆசியாவில் இஸ்ரேல், ஜோர்டான் எல்லையில் அமைந்துள்ளது. சுமார் 50 கி.மீ. தூரத்துக்கு இந்தக் கடல் விரிந்து பரவியிருக்கிறது.



# நேரம் முக்கியம்

மாதவன்

இன்றைய காலகட்டத்தில் பிறப்பு, இறப்பு, விபத்து எந்த தகவலாயிருப்பினும் உடனடியாக சமூக ஊடகங்களில் பகிரப்படுகிறது. நமக்கும் அந்த தகவல் சார்ந்தவருக்கும் உள்ள தொடர்புக்கேற்ப நாம் அதில் பதிவிடுகிறோம். ஒருவேளை நாம் பதிவிடுவதற்கு ஓரிரு கணம் யோசித்தால் கூட, எப்படி பதிவிடலாம் என்ற சொற் றொடரும் உடனே தோன்றுகிறது.

அந்த அளவுக்கு நமது நேரப் பயன்பாட்டையும் கணக்கில் கொண்டு சமூக ஊடகங்கள் செயல்படுகின்றன. எந்த ஒரு இடத்திலும் நான்கு நபர்கள் இணைந்திருந்தால் அவர்கள் நால்வரும் இணைந்திருப்பதில்லை. அவர்கள் வேறெங்கோ இருக்கும் நால்வரோடு தனித்தனியே இணைந்திருக்கின்றனர்.

'அவனை சாப்பிட பலமுறை கூப்பிட்டுவிட்டேன், அவன் வருவதாயில்லை''என பெண்மணி ஒருவர் மகனைப்பற்றி தன் கணவரிடம் புலம்புகிறார். உடனே கணவர், தனது கைப்பேசியிலிருந்து மகனுக்கு 'காலை உணவு தயார்'' என்று பதிவிடுகிறார். அவரது மகனும் 'இதோ வருகிறேன்' என்று பதிலளித்துவிட்டு சாப்பிட வருகிறான். இவ்வாறான நகைச்சுவைத் துணுக்கு ஒன்றை வாசித்தேன். அந்த அளவுக்கு மனிதர்களை ஆட்டிப்படைப்பதாக இணைய உலகம் மாறிக்கொண்டுவருகிறது.

இணைய இணைப்புடன் ஒரிடத்தைக் கூட நம்மால் கடக்க இயல்வதில்லை. 'அந்த பொட்டிக் கடை எப்படி இருந்தது', 'அந்த பொட்டலக்கடை எப்படி இருந்தது' என கைப்பேசி கேட்கத் தொடங்கிவிடுகிறது. அறிவியல் தொழில்நுட்பம் நமக்கு சேவகனாயிருந்த காலம் மாறி, தகவல்களைக் கொடுக்கும் நபர்களாக நாம் மாறி வருகிறோம். எது தேவையென்றாலும் தேடுபொறிகள் மூலம் நமக்குக் கிடைக்கிறது என்று சொன்னால், நாமோ நம்மைச் சேர்ந்தவர்களோ அதனை சேமிக்கும் பணியையும் செய்பவராக இருக்கிறோம்.

ஆனால் எல்லா நேரமும் இப்படி சேவையாற்றிக் கொண்டே இருக்க இயலுமா, ஏன் சேவையாற்ற வேண்டும் போன்ற கேள்விகளும் அவ்வப்போது எழுகிறது. தற்போதும் கூட இணையவழி செயலிகள் பலவற்றில் நாம் எங்கே இருக்கிறோம் என்பதையும், நமக்குத் தெரிந்தவர்கள் யாரேனும் நம் அருகில் இருக்கின்றனரா என்பதையும் பரிமாறிக் கொள்ள வாய்ப்பிருக்கிறது.

இது நல்லதுதானே என எண்ணலாம். ஆனாலும் அவசர வாழ்க்கையில் கிடைக்கும் நேரத்தில் ஒவ்வொருவரும் திட்டமிட்டே செயலாற்றுகிறோம். திட்டமிட்டவற்றுக்கு மாறாக செயல்கள் நடைபெற்றால் எப்படி நாம் திட்டமிட்டவற்றை செவ்வனே செயல்படுத்த இயலும்?

இது ஒரு பக்கம் என்றால் யு டியூப் போன்ற செயலிகள் பொழுதுபோக்கையும் அள்ளி வழங்கிக் கொண்டிருக்கின்றன. இதனால் பொழுது போக்கிற்கு திரைப்படங்கள்தான் என்ற நிலை மாறி வருகிறது. நினைத்த நேரத்தில் நமக்குப் பிடித்த திரைப்படம், பிடித்த பாடல்கள், பிடித்த காட்சிகள் என எல்லாமே கைக்கெட்டும் தூரத்தில் இருக்கும்போது யாரால்தான் ரசிக்காமல் இருக்க முடியும்?

வாரத்திற்கு ஒரு திரைப்படம் என்று பார்த்து ரசித்த தலைமுறை இன்றும் வாழ்கிறது. அப்படி சரியான அளவு பொழுதுபோக்குக்கு ஒதுக்கி வாழ்ந்த தலைமுறையினர், மற்ற நேரங்களில் உறவினர்களோடு நேசத்துடன் உரையாடியதையும், நூல்களை வாசித்ததையும் பெருமையுடன் நினைவுகூர்கின்றனர். அக்காலங்களில் மின்சாரம் தடைபட்டதும் வீட்டிலிருக்கும் குழந்தைகள் ஆரவாரத்தோடு சாலைக்கு வருவர். அது ஒரு கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும்.

அரசு மட்டுமே தொலைக்காட்சி அலைவரிசையை நடத்திய காலங்களில் இவ்வளவு நேர விரயம் இல்லை. பின்னர் 24 மணி நேர அலைவரிசைகள், குறிப்பாக செய்தி அலைவரிசைகள் வந்த பிறகு எந்த நேரமும் மக்கள் பதற்றத்துடனேயே இருக்கக்கூடிய நிலை உருவாகிவிட்டது.

நாம் நமது வாழ்க்கையை வாழ்வதோடு அடுத்தவர்களின் சுக துக்கங்களிலும் பங்கேற்கவே விரும்புவோம். அதுதான் நியாயமும்கூட. இத்தனை கோடி பேர் வாழும் சமூகத்தில் ஒவ்வொரு நேரமும், ஏதாவது ஓரிடத்தில் ஏதோவொரு நிகழ்வு நடந்துகொண்டுதான் இருக்கும். நாம் எதனை அறிந்துகொள்ள வேண்டுமோ அதனை மட்டும் அறிந்துகொண்டால் போதுமானது.

கற்றுக்கொள்ள வேண்டியதை அளவாகவும் சீராகவும் கற்றுத்தர தொலைக்காட்சி போன்ற ஊடகங்கள் முன்வர வேண்டும். நிகழ்ச்சி வேண்டுமென்பதற்காக சமூகத்தில் எங்கோ நடைபெறும் தேவையற்ற, விரும்பத்தகாத விஷயங்களெல்லாம் சமூக ஊடகங்களிலும் தொலைக்காட்சிகளிலும் பகிரப்பட்டுக் கொண்டிருந்தால் சமூகத்தில் எப்படி நற்சிந்தனைகள் விதைக்கப்படும்?

நாம் சில அடிப்படைகளைக் கடைப்பிடிக்கலாம். முதற்கட்டமாக பொழுதுபோக்கிற்கென நாம் குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கிக்கொள்ளலாம். தொலைக்காட்சிகளில் குறிப்பிட்ட சில நிகழ்ச்சிகளை மட்டும் பார்ப்பதென முடிவு செய்து அதன்படி பார்க்கலாம். சமூக ஊடகங்களுக்கு குறிப்பிட்ட நேரம் ஒதுக்கி செயல்படலாம். அலுவலக பயன்பாட்டிற்கென தனியாக ஒரு கைப்பேசியை வைத்துக்கொண்டு அதை அலுவல் பணிகளுக்கு மட்டும் பயன்படுத்தலாம்.

சில நூல்களை தேர்ந்தெடுத்து அவற்றை வாசிக்கும் நேரங்களில் நாம் சமூக ஊடகங்களிலிருந்து விடுபட்டு இருக்கலாம். வெளியிலிருந்து வீட்டிற்கு வந்தவுடன் முதலில் கைப்பேசியை எடுத்து தொலைதூரத்தில் வைக்கலாம். எல்லாவற்றுக்கும் கால அட்டவணை தயார் செய்து கொள்ளலாம். அந்த கால அட்டவணைக்குள் நமது பணிகள் நிறைவுபெற வேண்டுமானால், எப்படி எல்லாம் பணியாற்ற வேண்டுமெனவும் திட்டமிடலாம்.

எதற்கெடுத்தாலும் கவலைப்பட்டுக்கொண்டிருந்தாலும் வாழ்க்கை நகராது. எதைப் பற்றியும் கவலைபடாமலிருந்தாலும் வாழ்க்கை சுவைக்காது. அடுத்தவரை மகிழ்விக்கும் அதே நேரத்தில் நமது மகிழ்ச்சிக்கான திறவுகோலையும் தொலைக்காமல் வைத்திருப்போம். நமது நேரப் பயன்பாட்டைத் தீர்மானிக்கும் உரிமை நம்மிடமே இருக்கட்டும். நமது நடவடிக்கைகளே நமது குழந்தைகளுக்கு நாம் சொல்லாமல் சொல்லிக்கொடுக்கும் கல்வி என்பதை நினைவில் கொள்வோம்.

**நாம் நமது வாழ்க்கையை வாழ்வதோடு அடுத்தவர்களின் சுக துக்கங்களிலும் பங்கேற்கவே விரும்புவோம். அதுதான் நியாயமும்கூட. இத்தனை கோடி பேர் வாழும் சமூகத்தில் ஒவ்வொரு நேரமும், ஏதாவது ஓரிடத்தில் ஏதோவொரு நிகழ்வு நடந்துகொண்டுதான் இருக்கும்.**

இவ்விதழ் யாழ்ப்பாணம் இல. 551ஏ கஸ்தூரியார் வீதியிலுள்ள கிறீன் மீடியா கவுஸ் பிரை. லிமிட்டட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.05.2022 அன்று வெளியிடப்பட்டது. தொடர்பு :0214927781